[1973 ஆகஸ்ட் 8

திரு. கே. ஏ. மதியழகன்: தாங்கள் இதுபற்றித் தீர்ப்பு வழங்குங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1956-ம் ஆண்டில் இதே சபையில் திரு. வினயகம் அவர்கள் மீது ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டு, தீர்மானம் ஏதும் வராமல், பேரவைத் தலைவரே இப்படிப்பட்ட தீர்ப்பு வழங்கியிருக்கிறார்கள்.

இப்பொழுது உறுப்பினர்களுக்கு ஒன்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 'பாயின்ட் ஆஃப் ஆர்டர்' என்ற பெயரில் எழுந்து, அது பாயின்ட் ஆஃப் ஆர்டராக இல்லாமல், அவையிலுள்ள பிரச்சினைக்கு மாறான நிலையில் கருத்துக்களை ஒரு உறுப்பினர் கூறினால், 'அது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல' என்று பேரவைத் தலைவர் தெரிவிக்கும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட நிலையில் பேசிய பேச்சுக்கள் பேரவையின் நடவடிக்கைக் குறிப்பில் இடம் பெறுது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்காகப் 'பாயின்ட் ஆப் ஆர்டர்' எழுப்ப வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால், வேண்டுமென்றே 'பாயின்ட் ஆப் ஆர்டர்' என்று எழுந்து எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லாமல் வேறு கருத்துக்கள் கூறப்பட்டு இருக்குமானால், அப்படிப்பட்ட பேச்சுக்களெல்லாம் நம்முடைய பேரவைக் குறிப்பில் இடம் பெறுது என்பதைத் தெரிவித்துக்கொள்றேன்.

இப்பொழுது திரு. ஜேம்ஸ் அவர்கள் பேசலாம்.

2. அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

திரு. ஜே. ஜேம்ஸ்: நேற்றையதினம் நான் கூறியவற்றைத் தொடர்ந்து பேச விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 25 நிமிடங்கள் தாங்கள் பேசியிருக்கிறீர்கள். நான் முன்பு சொன்னதைப் போல் அது உங்கள் கட்சிக்கு ஒதுக்கியிருக்கும் நேரத்திற்குள் வரும்.

திரு. ஜே. ஜேம்ஸ்: நேற்று நான் கூறியதுபோல் பெரியகுப்பம் கிராமத்தில் போலீசார் அத்துமீறி நடந்துகொண்டார்கள் என்பதைத் தங்கள் மூலம் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு

1973 ஆகஸ்ட் 8] [திரு. ஜே. ஜேம்ஸ்]

வர விரும்புகிறேன். காவலில் வைக்கப்பட்டவர்களைக் கூட அநியாயமான முறையில் இம்சித்திருக்கிறார்கள் என்று சொன்னால், அது நிச்சயமாக வருந்தத்தக்க ஒரு நிலையாகும். காவலில் இருந்தவர்களுக்கு அவர்களுடைய மலஜலங்களையே அவர்களுக்குக் குடிக்கக் கொடுத்து அவர்களை நையப் புடைத்திருக்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயமாக இது மக்கள் ஆட்சியில் நடைபெற முடியாது, கொடுங்கோல் மன்னர் ஆட்சியில்தான் நடக்கக்கூடியது என்பதைத் தங்கள் மூலம் இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றையதினம் போலீசாரின் அத்து மீறல்கள் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே இருக்கின்றன என்றால், நிச்சயமாக இந்த அரசாங்கத்தின் கவனக்குறைவும் இந்த அரசாங்கத்தின் சக்தியின்மையும்தான் அதற்குக் காரணங்களாகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதோடு இன்றையதினம் அரசியல்வாதிகளுக்குக் கூட அவர்களுடைய சொத்துக்களுக்கும் உயிருக்கும் பாதுகாப்பு இல்லாத முறையில் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளுக்கு அவர்களுடைய மலஜலங்களையே மறுபடியும் ஆகாரமாகக் கொடுத்தார்கள் என்று உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா ? இப்படியெல்லாம் சொன்னால் ஒரு பயங்கரமான ஆட்சி நடைபெறுவதைப்போல் கற்பிப்பதாக இருக்கும். அப்படி எதுவுமே நடைபெறவில்லை. நடைபெறாத ஒன்றைத் தாங்கள் சொல்வது முறையல்ல.

திரு. ஜே. ஜேம்ஸ்: நடைபெறவில்லை என்று சொன்னால், நிச்சயமாக நான் அதைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன். ஆனால் அந்தக் கிராமத்திற்கு நான் நேரடியாகப் போய் அங்குள்ள மக்களை நேரடியாகச் சந்தித்து அங்கு நடந்தவைபற்றி விசாரித்து அறிந்துகொண்டேன். ஆகவே, ஒன்றில், அந்த ஜனங்கள் கூறுவது பொய்யாக இருக்கலாம் அல்லது, அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிற தகவல்கள் பொய்யாக இருக்கக்கூடும். ஆக என்ன இருந்தாலும் இதில் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும். அரசாங்க அதிகாரிகளின் அறிக்கைகளை மட்டும்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 ஆகஸ்ட் 8

வைத்துக்கொண்டு இங்கு கூறினால் அவை ஏற்கக் கூடியதாக இராது. ஏனெனில் அதிகாரிகள் இந்த நாட்களில் தங்களுக்கு வசதியாக அறிக்கைகளைத் தயார் செய்துகொண்டு அரசாங்கத்தை ஏமாற்றுகிற சூழ்நிலை இருக்கிறது என்பதை நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

இன்றையதினம் அரசியல்வாதிகளுக்குக் கூட இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லாத ஒரு நிலைமை இருக்கிறதென்பதை இதற்கு முன்னதாக நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். நண்பர் சிந்தன் அவர்களை நையப் புடைத்து அவர்களைப் படுகொலை செய் வதற்குக் கூட முயற்சி நடைபெற்றது என்று சொன்னால், அரசியல் ரீதியாக இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறவேண்டுமா அவை தேவைதானா, இந்த முறையில் நாடு ஓடிக்கொண்டிருந்தால் நிச்சயமாக இந்த நாட்டில் நல்லதொரு அரசியல் சூழ்நிலை உருவா வதற்கு வாய்ப்பில்லை என்பதை நான் அரசுக்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதுபோன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றால் எந்த அரசியல்வாதிகளுக்கும், இருக்கிற தலைவர்களுக்கும், தொண்டர் களுக்கும் இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்ல, திண்டுக்கல் தேர்தல் நடைபெற்றபோது வெற்றிலைக்கோட்டையில் நடந்த நிகழ்ச்சி பயங்கரமானதொரு நிகழ்ச்சி என்பதை நிச்சயமாக அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். அங்கு ஆறுமுகம் என்ற தோழர் படுகொலை செய்யப்பட்டார். அதை நிச்சயமாக அரசாங்கம் வரவேற்காது என்பதை நான் அறிவேன். இருந்தாலும் இம்மாதிரி நிகழ்ச்சிகள் நடைபெறு வதை அரசாங்கம் அனுமதிக்கலாமா? ஆகவே இதுபோன்ற நிகழ்ச்சிகள் இனிமேலாவது நடக்காமல் இருப்பதற்குப் பார்த்துக் கொள்ளவேண்டும். நடந்த அச்சம்பவங்கள் குறித்து எத்தகைய இன்வெஸ்டிகேஷனும் நடைபெறவில்லை என்ற குற்றச்சாட்டினைக் கூற விரும்புகிறேன்.

அதேபோல் மாதவரத்தில் ஹரிஜனக் காலனியில் நடந்த போலீசாரின் அத்துமீறிய செயல்களையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்குள்ள ஹரிஜனப் பெண்கள், குழந்தைகள் கூட பயங்கரமான முறையில் அங்கு தாக்கப்பட்டிருக்கிறார்கள்.

1973 ஆகஸ்ட் 8] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்தபடியாக, மதுவிலக்குக் கொள்கைபற்றிக் கூறவிரும்பு கிறேன். இந்த அரசாங்கம் மதுவிலக்கைத் திரும்பப் புகுத்திய போது நாங்கள் வன்மையாகக் கண்டித்தோம்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மதுவிலக்கைப் புகுத்திய போதல்ல, மதுவிலக்கை ஒத்திவைத்தபோது.

திரு. ஜே. ஜேம்ஸ்: ஏற்றுக்கொள்கிறேன். மதுவிலக்கை முதல் அமைச்சர் அவர்கள் சொல் சாதுர்யத்தால் ஒத்திவைத்தபோது அப்போதே அதன் விளைவுகள் பற்றி எடுத்துக் கூறினேம். அதற்குக் கூறிய காரணங்களை நான் முதல் அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அன்று முதல் அமைச்சர் அவர்கள் கூறினார்கள். நான்கு பக்கமும் நெருப்பு வளையத் திற்குள் இருக்கிற கற்பூரம் போல் தமிழ்நாடு இருக்கிறது. நான்கு பக்கமும் இருக்கிற மாநிலங்களில் மதுவிலக்கு இல்லை, ஆகையால் நம் நாட்டில் இருக்கிறவர்கள் மது அருந்துவதற்கு அந்த மாநிலங் களுக்குச் செல்வதால் நம் மாநிலத்திற்கு வரவேண்டிய வருவாய் குறைகிறதே தவிர, நிச்சயமாக மதுவிலக்கு நல்லமுறையில் செயல்படவில்லை என்று எடுத்துக் காட்டினார்கள்.

அதுமட்டுமல்ல. மதுவிலக்கு காகிதத்தில்தான் இருக்கிறதே தவிர, உண்மையில் அது செயலற்றுப் போயிற்று என்றெல்லாம் சொன்னார்கள். அதோடு மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், கள் குடிப்பது ஆரோக்கியத்திற்கு நல்லது, தொழிலாளர்களுக்கும் ஏழைகளுக்கும் அது நல்லது என்ற காரணத்தை எடுத்துக் கூறினார்கள். ஏழை எளியவர்கள் கள்ளச் சாராயம், அரிஷ்டம் போன்றவற்றையெல்லாம் குடித்து விட்டு அதனால் குடல் கருகுகிறது, அதேவேளையில் வசதி படைத்த வர்கள் எல்லாம் பிராந்தியும் வைனும் குடிப்பதற்கு காங்கிரஸ் ஆட்சியில் பெர்மிட் கொடுக்கப்பட்டது, ஆகவே சமதர்மத்தை மதுவிலக்கிலாவது கொண்டுவர ஏழை எளியவர்களுக்கு குடிப் பதற்கு வாய்ப்பளிக்கவேண்டும் என்ற முறையில் மதுவிலக்கை ஒத்திவைத்து மது அரக்கனை இந்த நாட்டில் மறுபடியும் கொண்டு வந்திருக்கிறார்கள். அதனால் எந்த அளவிற்கு சமுதாயம் சீர் கெட்டிருக்கிறது, பெண்கள் குலம் எந்தளவிற்கு அதனால் பாதிக்கப் பட்டிருக்கிறது ஏழை எளியவர்கள், ஹரிஜனங்கள் எந்தளவிற்குப்

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 ஆகஸ்ட் 8

பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இன்று அரசாங்கம் உணர்ந்திருப்பதை நான் பாராட்டுகிறேன். அப்படி உணர்ந்தாலும் கூட மதுவிலக்கைப் பூர்ணமாகப் புகுத்த முன்வராததற்காக அரசை நான் கண்டிக்கிறேன். மதுவிலக்கைப் பூர்ணமாகப் புகுத்தினால்தான் ஏற்கெனவே பாதிக்கப்பட்டிருக்கும் சமுதாயம் திரும்பவும் மறுமலர்ச்சி அடைய முடியும்.

இன்று போலீசார் அத்துமீறி நடப்பதற்கும் ஒரு காரணம் அத்துறையில் இருக்கிறவர்கள் பலர் குடிக்கிறார்கள், அதன் காரணமாகப் பல விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படுகின்றன. அதன் காரணமாகப் பல பயங்கரான சம்பவங்கள் நடைபெறுகின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நம் பட்ஜெட்டை வெகுவாகப் பாதிக்கிறது என்ற ஒரு காரணத்தை முதல் அமைச்சர் அவர்கள் கூறலாம். மதுவிலக்கு நடைமுறையில் இருந்தபோது 200 கோடி ரூபாய்க்குக் குறைவாக வருவாய் இருந்தது. ஆனால் இன்று 400 கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் வருகிறது என்றால் பட்ஜெட்டை அது எந்த முறையில் தாக்கும் என்பது எங்களுக்குப் புரியவில்லை. எனவே மதுவிலக்கை முழுமையாக இந்த நாட்டில் புகுத்தவேண்டும். மற்ற மாநிலங்களில் இல்லை என்ற நிலையிருந்தாலும் நம் மாநிலத்தைப் பொறுத்த வரையில் மதுவிலக்கு பூர்ணமாகப் புகுத்தப்படுவது தேவை என்று மக்கள் கருதுகிறார்கள். குடிக்கிறவர்கள் கூட மதுவிலக்கை வரவேற்கிறார்கள். ஆகவே அரசாங்கம் படிப்படியாக கள்ளை இந்த முறை எடுத்து அடுத்த முறை சாராயத்தை எடுப்பதற்குப் பதிலாக அனைத்தையும் ஒரேயடியாக எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முதல் அமைச்சர் அவர்கள் இன்னொரு காரணத்தைக் கூறினார்கள். மதுவிலக்கு பேப்பரில்தான் இருக்கிறது, கள்ளச் சாராயம் தாராளமாக நடமாடுகிறது என்ற காரணத்தைக் காட்டினார்கள். இன்று மதுவிலக்கை நீக்கியபிறகு கூட சாராயக் கடைகளில் கள்ளச்சாராயம் அதிகமாக விற்பனையாகிறது. சேலத்தில் 18—4—1973-ம் தேதி சூலமங்கலத்தில் ரூ. 34,600 பெறுமானமுள்ள கள்ளச்சாராயம் பிடிப்பட்டது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 8] [திரு. ஜே. ஜேம்ஸ்]

அடுத்தபடியாக, வேலையில்லாத் திண்டாட்டம். சட்ட அமைச்சர் அவர்கள் சில நாட்களுக்கு முன்னர் படித்த இளைஞர்கள் ஐந்து லட்சம் பேர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று கூறியதாகப் பத்திரிகைகளில் பார்த்தேன். படித்த இளைஞர்கள், தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள் பல லட்சம் பேர்கள் இன்று வேலையில்லாமல் திண்டாடுகிறார்கள் என்றால், ஒரு ஜனநாயக நாட்டில் மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்கு வசதி இல்லை என்றால் நிச்சயமாக அந்த அரசுக்கு நாட்டை ஆளுவதற்குத் தகுதி இல்லை என்ற குற்றச்சாட்டைக் கூற விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, விலைவாசியைப் பொறுத்து காங்கிரஸ் ஆட்சியில் இருந்ததைவிட இன்று ஐந்து மடங்கு, பத்து மடங்கு விலை வாசிகள் ஏறிக்கொண்டிருக்கின்றன. விலைவாசி ஏறுகிறது என்றால் சாதாரணமாக ஏறுகிற விலைவாசிகள் பொதுவாக இறங்கும் என்ற நிலைமை இல்லாமல் ஏறுமுகமாகவே இருக்கின்றன. ஏழை எளியவர்கள் எட்டிப்பிடிக்கமுடியாத அளவிற்கு இருக்கிறது விலைவாசி உயர்வு. ஆனால் அவர்களுடைய வருவாய் கூடுவதாக யில்லை. ஆனால் விலைவாசிகள் உயர்ந்துகொண்டேபோகின்றன. இப்படி ஒரு நாட்டில் விலைவாசிகள் ஏறிக்கொண்டேபோனால் நிச்சயமாக சமதர்மத்தை அமல் நடத்தமுடியாது. வறுமையை ஒழிப்போம் என்று கூறுகிறார்களே தவிர, இந்த முறையில் விலை வாசிகள் ஏறிக்கொண்டே போனால் நிச்சயமாக வறுமையை அகற்ற முடியாது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று இந்த அரசாங்கத்தால் மாணவர்கள்கூட பழி வாங்கப் பட்டிருக்கிறார்கள். கழிந்த சில மாதங்களுக்கு முன்பாக மாண வர்கள் கிளர்ச்சி இருந்தபோது, பல வழக்குகள் மாணவர்கள் மீது பதிவு செய்யப்பட்டன. பட்ஜெட் மீது நான் ஒரு கட் மோஷன் கூட இதுபற்றிக் கொடுத்திருந்தேன். அதை 'வித்டிரா' செய்வதற்காக முதலமைச்சர் அவர்கள் ஒரு வாக்குறுதி கொடுத் தார்கள். விரைவில் அந்த மாணவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கும் கேஸ்களை வித்டிரா செய்வதாக வாக்குறுதி அளித்தார்கள். அதன் காரணமாகத்தான் நான் என்னுடைய வெட்டுப் பிரேரணையை

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1973 ஆகஸ்ட் 8

வாபஸ் வாங்கிக்கொண்டேன். ஆனால் இன்று வரையில் அந்த வழக்குகள் வாபஸ் ஆகவில்லை என்று முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

கடைசியாக நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். நான் ஏற்கெனவே சொன்னது போல், எங்கள் மாவட்டத்தில் இருக்கிற உணவுப் பிரச்னையை முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு மீண்டும் கொண்டு வர விரும்புகிறேன். அது எவ்வளவு பயங்கரமான நிலையில் இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அங்கே இது மக்கள் பிரச்னையாக இருக்கிறது. அரசியல் பிரச்னையாக இல்லை. அது அரிசிப் பிரச்னை. அதை நல்ல வகையில் தீர்க்க அரசாங்கம் முடிவு எடுக்கவேண்டுமென்று முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றையதினம் ஏறத்தாழ 100-க்கு மேல் இளைஞர்கள் சிறையில் வாடுகிறார்கள். பட்டதாரிகள், வழக்கறிஞர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், நகர மன்றத் தலைவர்கள், பஞ்சாயத்து ஒன்றியத் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் உறுப்பினர்கள் சிறையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் என்ன தவறு செய்தார்கள்? அரிசி கேட்டதைத் தவிர வேறு எந்தவிதமான கிரிமினல் குற்றங்களையும் அவர்கள் செய்யவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சிறைச் சாலையில் இருப்பவர்களைப்பற்றி நண்பர் ஜேம்ஸ் அவர்கள் சொன்னார்கள். சிறையில் யாரையும் வைக்கவேண்டுமென்று இந்த அரசு விரும்பியது இல்லை. நான் நேற்றையதினம் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். சில கோரிக்கைகளை ஏற்று சிறையில் இருக்கும் விவசாயப் பிரதிநிதிகளை விடுதலை செய்து இருக்கிறேன் என்பதை இந்த அவை அறியும். இன்று கன்னியாகுமரி மாவட்டத்தில் என்ன பிரச்னை என்றால், முதலில் ஒரு 10-12 நாள் வரையில் சிறை பிடித்து உடனே விடுதலை செய்து வந்தோம். மறுபடியும் அங்கே சட்டமீறல் நிகழ்ச்சிகள் நடைபெற்ற காரணத்தால் தவிர்க்கமுடியாத அளவுக்கு அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போது உங்கள் கோரிக்கை, கட்டாய ரேஷன் கொடுக்கப்படவேண்டும், நெல்லை மாவட்டத்தில் இருக்கும் செக்-போஸ்டை எடுக்கவேண்டும்

என்பதாகும். அரசால் ஏற்றுக்கொள்ள முடியாத கோரிக்கைகளாக அவை இருக்கின்றன. வேறு ஏதாவது வழி சொல்லுங்கள், இன்ன வழியில் அரிசி கொடுக்கலாம், இன்ன காரியத்தைச் செய்யலாம் என்று சொன்னால், அரசு அதைப்பற்றி யோசிக்க நல்லதாக இருக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, என்ன செய்ய வேண்டுமென்ற கருத்தை இங்கே கூறியிருக்கிறார்கள். எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில், வருகின்ற அறுவடை நேரத்தில், இப்போது என்ன முறையில் உணவு விநியோகம் செய்யப்பட்டு வருகிறதோ அந்த முறையில் விநியோகம் செய்யவேண்டும். அறுவடை செப்டம்பர் மாதத்தில் ஆரம்பமாகும். அதுமட்டுமல்லாமல், கார்டு முறையில் விநியோகம் நடைபெறவேண்டும். கார்டு இல்லாமல் பலரும் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கார்டு வழங்கப்படவேண்டும். நிரந்தரமாக என்ன செய்ய வேண்டுமென்று சொன்னால், நிரந்தரமாக உணவுப் பங்கீட்டு முறை விளவங்கோடு, கல்குளம் போன்ற கம்மிப்பகுதியில் கொண்டுவரப்பட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறவிரும்புகிறேன். கல்குளம் பகுதியில் இப்போது ரேஷன் முறை இருக்கிறது. அது திருப்திகரமாக இல்லை. உணவுப் பங்கீட்டு முறை நல்ல முறையில் நடப்பதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அது மட்டுமல்லாமல், அங்கே போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டவர்களையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும். நிரந்தரமாக எங்கள் பகுதியில் அரிசி கொடுக்க வேண்டுமானால், கட்டாயக் கொள்முதல் அரசாங்கம் வேண்டுமென்று நினைத்தால் அதை வைப்பதிலும் கஷ்டம் இருக்காது என்று நினைக்கிறேன். அது ஒரு எல்லை ஓரப்பகுதியாக இருப்பதால், அந்த எல்லை யோரப்பகுதியில் நிரந்தரமாக எங்களுக்குக் கார்டு வழங்கி, பூரண ரேஷன், முழு அளவு ரேஷன் தர வேண்டுமென்று முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இப்போது விளவங்கோடு பகுதியில் கார்டு மூலம் அரிசி வழங்கப்படுகிறது. கல்குளம் பகுதியில் வழங்கப்படுகிறது. தொடர்ந்து அறுவடை வரை வழங்கப்படும். எதிர்காலத்தில் வழங்கப்பட

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 ஆகஸ்ட் 8

வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் தலைவர் கோரிக்கை விட்டிருப் பதால், கல்குளம் பகுதியில் கார்டு மூலம் அரிசி வழங்கப்பட வேண்டுமானால், அங்கேயிருக்கும் விவசாயிகளிடமிருந்து லெவி முறையில் 'கட்டாயக் கொள்முதல்' செய்ய ஒப்புக்கொள் கிறார்களா என்று கேட்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எங்கள் கட்சியைப் பொறுத்த வரையில் அதிகமாக இருப்பவர்களிடமிருந்து இப்படிப்பட்ட கொள்முதல் செய்வது ஆட்சேபிப்பதாக இருக்கமுடியாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். 'ரேஷன்' வந்தால் 'லெவி' வரும் என்று உணர்ந்து இருக்கிறோம். ரேஷன் வந்தால் இதை நாங்கள் ஒப்புக்கொள்கிறோம். முழு அளவு ரேஷன் தரப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் காங்கிரஸ் கட்சித் தலைவருடைய அந்தக் கருத்தை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள் கிறேன். அதற்கேற்ப விளவங்கோடு, கல்குளம் தாலுக்காக்கள் சில பகுதிகளிலே குடும்பக் கார்டு மூலமாக அரிசி வழங்க எல்லா விதமான ஏற்பாடுகளையும் செய்ய நாங்கள் தயாராக இருக்கிறோம். இப்போது பேசப்பட்டதே நிலையானது, இப்போதே போராட் டத்தை நிறுத்தி விடுவதாக இருந்தால், கைது செய்யப் பட்டவர்கள் எல்லோரும்—எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களும் —விடுதலை செய்யப்படுவார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: எங்களுக்கு அது ஒரு நிரந்தர மான பிரச்னையாக இருப்பதால், அரசாங்கம் அதற்குச் செய்யும் ஏற்பாடுகளை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். போராட்டம் வேண்டுமென்று நாங்கள் நடத்தவில்லை. நீங்கள் முழு அளவில் கார்டு கொடுத்து, வேண்டிய அளவுக்கு ரேஷன் கொடுத்தால், நாங்கள் போராட்டத்தை நிச்சயமாக வாபஸ் பெறுவோம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, முதலமைச்சர் அவர்கள் கல்குளம், விளவங்கோடு தாலுக்காக்களில் கார்டு மூலம் அரிசி வினியோகிக்கப்படும் என்று உறுதிமொழி அளித்தார்கள். அதற்கு

1973 ஆகஸ்ட் 8] [திரு. ஜே. ஜேம்ஸ்]

நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது வழங்கப்படும் முறையில் சில கோளாறுகள் இருக்கின்றன. அவற்றையும் இலாக்காவோடு கலந்து ஆலோசித்து ஒழுங்கு முறையில் அதை வினியோகிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்லாமல் இப்போது கூட்டுறவு சங்கங்கள் வழியாக வினியோக முறையில் சில குறைகள் இருக்கின்றன. சில கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுத்து சில கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுப்பது இல்லை என்ற நிலை இருக்கிறது. காங்கிரஸ் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கொடுக்கக் கூடாது என்று அதிகாரிகள் உத்தரவு போட்டு இருப்பதாகத் தெரிகிறது. கூட்டுறவுச் சங்கம் என்று சொன்னால், எல்லாக் கூட்டுறவுச் சங்கங்களையும் ஒரே மாதிரியாகக் கருதி, அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அரிசி வினியோகிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இங்கே கன்னியாகுமரி மாவட்டப் பிரச்னை பற்றி எழுந்த விவாதத்திலே அவர்கள் சொன்ன கருத்தை நான் ஓரளவுக்கு ஏற்றுக்கொண்டு இருக்கிறேன். அவர்களும் நான் சொன்ன லெவி முறையை ஏற்றுக் கொள்வதாகக் கூறி இருக்கிறார்கள். அந்த வகையில் அந்த ஏற்பாட்டின்படி, அந்தப் போராட்டத்தையும் திரும்பப் பெற்று விடுவதாகக் காங்கிரஸ் கட்சித் தலைவர் சொல்லியிருக்கிற காரணத்தால் போராட்டத்தின் காரணமாகக் கைது செய்யப்பட்டிருக்கிற அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (கைதட்டல்)

திரு. கா. வேழவேந்தன்: சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இந்த அவை முன்னால் கொண்டுவரப்பட்டிருக்கிற 'அமைச்சரவை மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கிற தீர்மானத்தையும்', நம்முடைய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் கொண்டு வந்திருக்கிற 'கண்டனத் தீர்மானத்தையும்' நான் முழுக்க முழுக்க வன்மையாகக் கண்டித்து அதற்கு என்னுடைய காரணங்களையும் இங்கே சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன்.

வாராது வந்த மாமணி போல் இந்த 6 ஆண்டுக் காலமாகத் தமிழகத்தின் எதிர்காலத்தை எண்ணி எண்ணிப் பார்த்து பல்வேறு செயல்களை நிலையாகச் செய்து கொண்டிருக்கும் அரசாங்கத்தை

[திரு. கா. வேழவேந்தன்] [1973 ஆகஸ்ட் 8

ஒவ்வொரு முறையும் 'நம்பிக்கையில்லை', 'நம்பிக்கையில்லை' என்று சொல்வதன் மூலம் இந்த அவையிலே இப்போதும் ஒரு நம்பிக்கையின்மைத் தீர்மானத்தை எதிர்க் கட்சியினர் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இந்த முறை நம்முடைய சுதந்திராக் கட்சியின் தலைவராக இந்த அவையில் இருக்கும் திரு. வெங்கடசாமி அவர்கள் ஒரு தீர்மானத்தை நேற்றையதினம் இங்கே முன்மொழிந்து பேசியிருக்கிறார்கள். அவர்களுக்கும், இந்த அவைக்கும் தெரிய வேண்டுமென்பதற்காக, அவர்களுடைய தலைவராக இருந்த மறைந்த இராஜாஜி அவர்கள் சொன்னதை இங்கே முதலில் சொல்லவேண்டுமென்று விரும்புகிறேன். "அரசாங்கம் என்பது அடுப்பிலே ஏற்றி வைக்கப்பட்ட அரிசி உலையைப் போன்றது. அந்த அரிசி உலையை அரிசியை வேக வைக்க இருக்கின்ற விறகைப்போன்றது தான் மக்களுடைய நல்ல எண்ணமும், வாக்கும். அது 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை தேர்தல் என்ற முறையில் வரும் ஒன்று. புத்திசாலித்தனமான பெண் அடுப்பில் உலையை வைத்துவிட்டு, அடிக்கடி விறகை எடுக்க மாட்டாள். அப்போதுதான் அரிசி ஒழுங்காக வேகும். சரியாக மக்களுக்குப் பயன்படும் முறையில் வேகும். ஆனால் இடையில் எதிர்க் கட்சிக்காரர்கள் என்று சொல்லப்படுபவர்கள் அந்த விறகை அடிக்கடி இழுத்து விட்டுக் கொண்டே இருப்பார்களானால், அடுப்பும் எரியாது, சோறும் வேகாது. அந்தச் சோறு மக்களுக்கும் பயன்படாது. விட்டிலே இருக்கும் குழந்தைகளுக்கும் போட முடியாது" என்று ரொம்ப காலத்திற்கு முன்பே இராஜாஜி அவர்கள் நல்ல முறையில் இன்றைக்கு இருக்கும் திரு. வெங்கடசாமிக்கு அறிவுரை சொல்லிச் சென்றிருக்கிறார்கள்.

அது மட்டுமல்லாமல் நேற்றையதினம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், பொறுப்பில் இருப்பவர்கள் கூட இந்த நாட்டிலே தாங்கள் வாங்கிய கடன் தொகையைத் திருப்பிக் கட்டாமல் இருக்கிறார்கள். அதற்காகக் கிளர்ச்சி செய்கிறார்கள். தாங்கள் கட்ட வேண்டிய பாக்கிக்கு, முறையாகச் செலுத்த வேண்டிய வரியைக் கட்டாமல் இருக்கிறார்களே என்று சொன்னார்கள். இதற்கும்கூட திரு. இராஜாஜி அவர்கள் ஒரு முறை அழகான ஒரு உதாரணத்தை எடுத்துச் சொன்னார்கள். அரசாங்கம்

1973 ஆகஸ்ட் 8] *[திரு. கா. வேழவேந்தன்]*

மு..ப. 9-30

கூட ஒரு எருமை போன்றது. அவர்களுக்குத் தெரிந்தது அது. எருமைக்குத் தீனியைக் கொடுத்தால்தான், புல்லைக் கொடுத்தால் தான் பால் வழங்கும். அதே போல் நாட்டு மக்கள் வரியாகப் புல்லைக் கொடுத்தால்தான் அரசாங்கம் நாட்டு மக்களுக்கு நன்மை செய்ய முடியும். வரி கொடுக்க மாட்டேன், வாங்கிய கடனைத் திருப்பிக் கட்ட மாட்டேன் என்றால் எப்படி எருமை தீனி போடாவிட்டால் பால் வழங்க முடியாதோ அப்படித்தான் அரசாங்கம் எப்படி மக்களுக்கு நன்மைகளைச் செய்ய முடியும்? அவர்களுக்கெல்லாம் புரிகின்ற வகையில் இராஜாஜி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். அதையும் இந்த இடத்தில் உங்கள் மூலமாக இந்த அவையிலே இந்த அரசைக் கண்டிக்கிறேன் என்று சொல்லித் தீர்மானம் கொண்டுவந்தவர்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய அரசாங்கத்தினுடைய கொள்கையைக் கண்டிக்கிறேன், அதுவும் உணவு நெருக்கடியை நான் தீவிரமாகக் கண்டிக்கிறேன் என்று நம்முடைய திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் இந்த மன்றத்திலே தன்னுடைய கருத்துக்களை மிகத் தீவிரமாக எடுத்துச் சொன்னார்கள். ஒரு முறை தங்களையே அவர்கள் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளவேண்டும். ஏனென்றால் சில வாரங்களுக்கு முன்பாக கேரளத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் தமிழக அமைச்சர்களை—முதல் அமைச்சர், உணவு அமைச்சர் ஆகியோர்களை—சந்தித்து 'எங்கள் நாட்டிலே வறுமை தாண்டவமாடுகிறது. பல்வேறு பகுதிகளிலே பஞ்சம் தாண்டவமாடுகிறது. கஞ்சித் தொட்டிகளை ஏற்படுத்தவேண்டும். எங்களுக்கு சோற்றுக்கு வழி செய்யுங்கள்' என்று சொன்னார்கள். உடனே நம்முடைய முதல் அமைச்சர் அவர்கள் 1,000 டன் அரிசி தருகிறேன் என்று சொன்னார்கள். அது மட்டுமல்ல. ஏறக்குறைய 200 டன் அரிசியை இலவசமாக கஞ்சித் தொட்டிகளைத் திறப்பதற்காகத் தருகிறேன் என்று இங்கே பிரகடனம் செய்தார்கள். நான் இதை உங்கள் மூலமாக திரு. தங்கமணி அவர்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

ஆனால், அவர்கள் உருக்கமாக இங்கே பேசினார்கள். நாடெல்லாம் கள்வர்கள் கூட்டம் நடமாடுகிறது என்றெல்லாம் சொன்னார்கள் அவர்கள் யாரை நினைத்துக்கொண்டு சொன்னார்களோ?

[திரு. கா. வேழவேந்தன்] [1973 ஆகஸ்ட் 8

அன்றையதினம் தமிழ் நாட்டு எல்லையோரத்தில் நான்கு போலீஸ் அதிகாரிகள் கேரளத்தைச் சேர்ந்தவர்கள் அரிசியைக் கள்ளக் கடத்தல் செய்து அகப்பட்டுக்கொண்டார்கள். அவர்கள் மீது தமிழக அரசு எடுத்த நடவடிக்கையை ஒட்டி, கேரள அரசாங்கம் அவர்களை சஸ்பெண்டு செய்திருக்கிறது. ஆகவே கேரளத்திலிருந்து வந்த போலீஸ்காரர்கள் கள்ளக் கடத்தல் செய்திருக்கிறார்கள் என்ற எண்ணத்தில்தான் அப்படி அவர்கள் ஒருவேளை சொல்லியிருக்கவேண்டும். அச்சுத மேனன் அவர்களுக்கு இதை அவர்கள் அறிவுறுத்தியிருக்க வேண்டும். நாம் இன்றையதினம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

நம்முடைய மாநிலத்தில் உணவு உற்பத்தி பெருகிக்கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற மாநிலமாக இருக்கிற காரணத்தினால் வேறு குழப்பம் இல்லாத சூழ்நிலை இங்கே இருக்கிறது. இங்கேகூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் இப்பொழுது சொன்ன கோரிக்கைகளை நம்முடைய முதல் அமைச்சர் இந்த அவையிலே மிகவும் நிதானத்தோடு சிந்தித்து ஒத்துக்கொண்டார்கள். 'நான் எப்பொழுதும் உங்களோடு கலந்து பேசுவதற்கு விரும்புகிறேன். மனம் திறந்து நீங்கள் உங்களுடைய கருத்துக்களைச் சொல்லுங்கள். உங்களுடைய போராட்டத்தை எதிர்நோக்கி இருக்கவேண்டும் என்பது இல்லை. எப்பொழுதும் உங்களுடைய கருத்தைச் சொல்லுங்கள்' என்று உருக்கமாகக் கேட்டுக்கொண்டார்கள். நமது உணவு அமைச்சர் அவர்களும் இந்தப் பிரச்னையை ஆழ்ந்த கவலையோடு சிந்தித்து சட்டமன்ற உறுப்பினர்கள், எதிர்க்கட்சியினர்களையெல்லாம் கூப்பிட்டு, அதிலே கட்சி வேற்றுமை இல்லாமல் உணவுப் பிரச்னைக்குத் தீர்வு காண வேண்டும் என்று தீவிர கவனம் செலுத்திவருகிறார்கள்.

இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னால் இதே அவையிலே ஒத்திவைப்புப் பிரச்னை ஒன்று கொண்டுவந்தபொழுது திருமதி அனந்தநாயகி அவர்கள் ரொம்பவும் வேகமாகப் பேசினார்கள். லீக்கேஜ் ஏன் ஏற்படுகிறது என்றெல்லாம்கூடத் தீவிரமாகப் பேசினார்கள். அவர்களுக்கு இந்த அவையிலேயே ஒரு மூதறிஞர் சொன்ன கருத்தைப் பதிலாகச் சொல்லவேண்டும் என்று விரும்புகிறேன். 1966-ல் அவர்கள் திருமதி அனந்தநாயகிக்குப்

[திரு. கா. வேழவேந்தன்]

பதில் சொல்லியிருக்கிறார்கள். கன்யாகுமாரியிலிருந்து திருவனந்த புரத்திற்கு அரிசி போகிறது என்று கூறப்பட்டது. ஒரு பெரிய அணைக்கட்டில்கூட லீக்கேஜைப் பார்க்கிறோம். நல்ல ஸ்ட்ரயில் இருந்தாலும் தண்ணீர் லீக்கேஜ் ஆகிக்கொண்டிருக்கும். அது அவர்களுக்கு வந்த தமிழ்—அதனால் அணைக்கட்டே போய் விட்டது என்று சொல்ல முடியாது. அதைப் பெரிய லீக்கேஜ் என்றுகூடச் சொல்ல முடியாது. டன்னலில்கூட லீக்கேஜ் இருக்கும். அம்மாதிரிதான் உணவு தானியத்தைப் பொறுத்தும் இங்கும் அங்கும் கொஞ்சம் லீக்கேஜ் இருக்கும். அதைப் பெரிய ஹோர்டிங், ஸ்மக்லிங் என்று சொல்ல முடியாது. தப்பு செய்பவர் கள் மீது படிப்படியாக நடவடிக்கை எடுப்போம். இப்படி யெல்லாம் சொல்லியிருக்கிறார் அவர். இப்படி அன்றைக்கு 1966-ம் ஆண்டில் இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு இப்பொழுது பொதுப்பணித் துறை அமைச்சராக இருக்கிற திரு. ப. உ. சண்முகத்திற்கு அவர்கள் பதில் சொன்னார்கள். அப்படிச் சொன்னவர் முன்னாள் முதல் அமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள். லீக்கேஜ் இருக்கத்தான் செய்யும், பெரிய டன்னலில்கூட ஓட்டை இருக்கும். ஆகவே இதையெல்லாம் எதிர்க்கட்சிக்காரர்கள் பெரிதுபடுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்று அன்றையதினம் அறிவுரை வழங்கிய திரு. பக்தவத்சலம் அவர்கள் இன்றைக்கு இந்த அவையிலே இல்லையே என்று எங்களுக்குக் கவலையாக இருக்கிறது. அவர்கள் இன்றைக்கு இந்த அவையிலே இல்லை யென்றாலும், அவர்கள் பேசிவிட்டுப் போன கருத்துக்கள் வால்யூம் வால்யூமாக இங்கே இருக்கின்றன. இதையெல்லாம் நான் எதிர்க் கட்சிக்காரர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டுமென்று கூறினேன்.

நான் இங்கே இன்னொன்றையும் முதலில் சொல்லவேண்டு மென்று விரும்புகிறேன். இந்த ஆட்சி கொள்கையற்ற கொள்கை யையுடைய ஆட்சியாக இருக்கிறது என்று தங்கமணி அவர்கள் சொன்னார்கள். எங்களுக்கெல்லாம் வருத்தம்கூட. அதை அவர் 1971-ல் சொல்ல மறந்துவிட்டாரே? 1971-ல் கொள்கையற்ற கொள்கையுடைய கட்சியாக இருக்கிறது என்று சொல்லியிருக்க வேண்டும். முன்னால் ஏற்பட்ட நிலையை அவர்கள் சிந்தித்துப்

[திரு. கா. வேழவேந்தன்] [1973 ஆகஸ்ட் 8

பார்க்க வேண்டும். அன்றைக்கு அவர்களேகூட தி.மு.க.வின் நிழலோடு, ஆதரவோடுதான் இந்த அவைக்கு உள்ளே வந்திருக்கிறார்கள். அவர்கள் இப்பொழுது இப்படிச் சொல்வது எனக்கே ஆச்சரியமாக இருக்கிறது.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். 1971-ல் கம்யூனிஸ்டு கட்சியினர் நாட்டிற்குப் பிரகடனம் செய்த எலக்ஷன் மானிபெஸ்டோ இருக்கிறது. அதிலே அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். "The posts of governors should be abolished". எங்களுக்கு கவர்னர் மீது நம்பிக்கை இல்லை. கவர்னர் பதவி என்பது இந்த நாட்டில் இருக்கக் கூடாது என்று இந்திய கம்யூனிஸ்டு கட்சி தேர்தல் பிரகடனத்தில் சொல்லியிருக்கிறது. கொள்கையற்ற கொள்கையுடைய அரசு என்று இங்கே இந்த அரசைக் கண்டிக்கிற அவர் முதலில் யாரைத் தேடிக் கொண்டுபோனார் என்றால், கிண்டி ராஜபவனத்திலுள்ள கவர்னர் அவர்களைத் தேடிக்கொண்டு போய்ப் புகார் மனுவைக் கொடுத்தார் கவர்னர் பதவியே கூடாது என்று எலெக்ஷன் மானிபெஸ்டோவில் சொன்னார்கள். பிறகு அவரிடமே கொண்டு வந்து புகார் மனுவைக் கொடுத்து, நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்கிறார். அந்த நிலையில் எங்களைக் கொள்கையற்ற கொள்கையுடைய அரசு என்று கண்டிப்பது எங்களுக்கு வேதனையாக இருக்கிறது. அது மட்டுமல்ல. இதே மன்றத்தில் நம்முடைய தங்கமணி அவர்கள் சொன்னதை நினைக்கும்பொழுது வேடிக்கையாக இருக்கிறது.

நான் ஒன்றை வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன். உணவுத் துறைமட்டுமல்ல, மக்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதில் இந்த அரசு தவறிவிட்டதா? பேசுகிற நேரத்தில் சிந்தித்துப் பேசவேண்டும். இந்த ஆறு ஆண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மக்களுடைய அன்றாடப் பிரச்னையைக் கவனித்திருக்கிறதா என்று வற்புறுத்தவேண்டாமா? ஏதோ இங்கொன்றும் அங்கொன்றும் சிறிய சம்பவங்கள் நடந்து கொண்டுதான் இருக்கும். அதற்கு ஆளும் கட்சியிலிருப்பவர்கள் அவ்வப்பொழுது பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஒப்பிட்டுப் பார்க்கவேண்டாமா? சென்ற 20 ஆண்டு காலத்தில் நடந்ததையும்,

1973 ஆகஸ்ட் 8] [திரு. கா. வேழவேந்தன்]

இந்த ஆறு ஆண்டு காலத்தில் நடந்திருப்பதையும் ஒப்பிட்டுப் பார்த்து இது சோடை, இது சொத்தை என்று எடுத்துச் சொல்ல வேண்டாமா? இன்றையதினம் உணவுப் பிரச்னையை எடுத்துக் கொண்டாலும்கூட பெரிய பெரிய மாநிலங்களில் உத்திரப் பிரதேசமாக இருந்தாலும் சரி, பிஹார் மாநிலமாக இருந்தாலும் சரி, மராட்டிய மண்டலமாக இருந்தாலும் சரி, ஒரிசா மாநிலமாக இருந்தாலும் சரி அங்கெல்லாம் பெரிய திண்டாட்டம் ஏற்பட்டிருக் கிறது, பெரிய பிரச்னைகள் ஏற்பட்டிருக்கின்றன. அதே நேரத்தில் 4½ கோடி மக்கள் கொண்டுள்ள தமிழ்நாட்டில் ஏதோ 10 லட்சம் மக்கள் தொகை கொண்ட குமரி மாவட்டத்தில் வேண்டுமானால் ரேஷன்மூலம் அரிசி கொடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு சில காரணங்கள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அது தனிர இன்றைக்கு பெரிய நெருக்கடி ஏற்பட்டுவிட்டதாக கண்டிக்க வேண்டி ஒரு தீர்மானம் இங்கே கொண்டுவரவேண்டிய நிலைமை தமிழ்நாட்டில் ஏற்படவில்லை என்பதைத்தான் முதலில் அவர் களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மந்திரத்தில் மாங்காய் பறித்துவிட முடியாது. 1967-க்கு முன்னால் இருந்த காலத்தில் மொத்தம் எத்தனை ஏக்கர் உற்பத்தி யாயிற்று, இப்பொழுது லட்சம் டன் அரிசி உற்பத்தி அதிகமாக ஆக்கியிருக்கிறோம். இதெல்லாம் திடீரென்று செய்யக்கூடிய மாயா பஜார் வேலை அல்ல. அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை சீராக எடுத்ததால்தான் உற்பத்தியைப் பெருக்க முடிந்தது. நாட்டில் உள்ள ஒரு போக நிலங்களை இரு போகமாக மாற்றி, இரு போக நிலங்களை மூன்று போகமாக மாற்றி, விவசாயிகளுக்கு தீவிரமாக விதைகள் குறித்த நேரத்தில் கொடுத்து உதவி, ஏராள மான கடன் தொகையையும் அவ்வப்பொழுது விவசாயிகளுக்கு வழங்கி வந்திருப்பதால்தான் உற்பத்தி பெருகியிருக்கிறது. இந்த உண்மையான நிலையைப் பாராட்ட வேண்டாமா?

அது மட்டுமல்ல, இன்றைக்கு உணவை அடுத்து உறையுள் தரப்படவேண்டும். அண்ணா அவர்கள் பலமுறை மிக உருக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். பாம்புக்குக்கூட புற்று இருக்கிறது. குருவிக்குக் கூட கூடு இருக்கிறது. மனிதன் வாழ்வதற்கு இடம்

[திரு. கா. வேழவேந்தன்] [1973 ஆகஸ்ட் 8

இல்லையே என்று சொன்னார்கள். அடித்தட்டில் இருக்கிற மக்கள் வாழும் அடிமனைகள் அவர்களுக்கே சொந்தமாக்கிக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. புறம்போக்கு நிலங்களைக் கொடுப்பதோடு மட்டு மல்லாமல் தனியார்களுடைய நிலங்களில் குடியிருக்கும் ஏழை எளியவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கவேண்டும் என்பதற்காக ஏழைகளுக்கே அடிமனை சொந்தமாக்கப்பட வேண்டும் என்கின்ற அளவுக்கு சட்டம்கூட கொண்டு வரப்பட்டிருக்கிறது. இதெல்லாம் தவறு? இதையெல்லாம் செய்யவேண்டாமா?

அது மட்டுமல்ல, வேறு அரசுகள் செய்யாத அளவுக்கு இந்த அரசு டெவலப்மெண்டு ஆக்டிவிடீஸ், வளர்ச்சி வேலைகளைச் செய்தி ருக்கிறது. இந்த அரசு போதுமான அளவுக்கு வளர்ச்சி வேலை களைத் தீவிரமாகச் செய்துகொண்டு வருகிறது. அப்படிப்பட்ட ஒரு அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருபவர்கள் இதையெல்லாம் நினைத்துப் பார்க்கவேண்டாமா? இதற்கு முன்னால் எல்லாம் வரி போடத்தான் அரசாங்கத்திற்குத் தெரிந் திருந்தது. இந்த அரசுதான் போட்ட வரியை நீக்கவேண்டும் என்று, இதற்கு முன்னால் இருந்த அரசு சிந்திக்காத வகையில் சிந்தித்து நடவடிக்கை எடுத்திருக்கிறது. காங்கிரஸ்காரர்கள் போட்டிருந்த புஞ்சை நிலத்தின் மீதுள்ள வரியை இந்த அரசு ரத்து செய்திருக்கிறது. அதற்கு முன்னால்கூட ஆங்கிலேயர்கள் அந்த வரியை வசூலித்துக்கொண்டிருந்தார்கள். அதை நீக்கிய தோடு மட்டுமல்ல. விவசாயிகள் தலைமீது இருந்த ஒரு பெரிய பாரத்தை இந்த அரசு நீக்கிவிட்டது.

அதுமட்டுமல்ல. பணக்காரர்கள் மேலும் மேலும் பணக்காரர் களாக மாறக்கூடாது; ஏழைகள் ஏழைகளாகவே இருக்கக்கூடாது என்ற சோசலிச தத்துவத்தை மாநாடுகளிலே பேசிவந்தோம். ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடன் அந்த சோசலிச தத்துவத்தைச் செயல்படுத்தினோம். அதன் அடிப்படையிலே தான் பெரும் பெரும் தொழில்களை எல்லாம் நாட்டுடைமையாக் கினோம். நாட்டுமக்களுக்குச் சொந்தமாக்குகின்ற வகையிலே பஸ்களை எல்லாம் நாட்டுடைமையாக்கினோம். நீலகிரி மாவட்டத் திலே, ஒரே நாள் இரவில் அங்குள்ள பஸ்களின் பெயர்களை எல்லாம்

1973 ஆகஸ்ட் 8] [திரு. கா. வேழவேந்தன்]

மாற்றி நாட்டுடைமையாக்கியது மிகப் பெரிய சாதனை அல்லவா? இன்றையதினம் அகில இந்தியாவே பஸ்கள் நாட்டுடைமையாக்கப் பட்டதைப் பாராட்டிக்கொண்டிருக்கிறது.

அதேமாதிரி உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்பது சாதாரணமான சட்டமா? மற்ற மாநிலங்கள் எல்லாம் இந்த மாதிரியான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கின்றனவா? இல்லையே.

இன்றைக்கு இந்த முதலமைச்சர் விலகவேண்டும்; அவர்கள் பதவியில் இருக்கக்கூடாது; அவர்கள் மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை; ஆகவே இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறோம் என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கெல்லாம் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அகில இந்திய முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர்—அவர் ஒரு சிறந்த அறிஞர், ஒரு பேராசிரியர்—பல்வேறு நூல்களைப் படித்தறிந்த வித்தகர்—அவர் மாண்புமிகு முதலமைச்சரவர்களைப் பற்றிக் குறிப்பிட்டதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

அகில இந்தியாவிலும் பல்வேறு முதலமைச்சர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால் இந்த முதலமைச்சர் தமிழகத்திலே ஆட்சி புரிவதையும் பார்த்திருக்கிறேன். இப்படிப்பட்ட ஒருவர் முதலமைச்சராக இருப்பது முழுக்க முழுக்க பொருத்தமானது. இவருக்கு மாதம் ஒரு பிறந்த நாள் விழா வரக்கூடாதா என்றே நான் எண்ணுகிறேன். இதற்கு முன்னால் முதலமைச்சர்களாக இருந்தவர்களுக்கெல்லாம்கூட பிறந்த நாள் விழாக்கள் நடைபெற்றன. அவர்கள் பிறந்த நாள் விழாவிலே கோயிலிலே இருந்து அபிஷேகம் செய்து பிரசாதம் வரும்; அல்லது மயிலாப்பூர் கோயிலிலே அர்ச்சனை நடைபெறும் என்று சொல்வார்கள். ஆனால் இந்த முதலமைச்சர் பிறந்த நாள் விழாவிலே, விழியற்றோருக்கு விழி வழங்குகிறார்கள்; பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வளிக்கிறார்கள்; காலம் முழுவதும் கையாலே இழுத்துச் சென்ற கை ரிக்ஷாத் தொழிலாளர்களுக்கு அந்த கை ரிக்ஷாக்களை அகற்றி விட்டு சைக்கிள் ரிக்ஷாக்களை வழங்குகிறார்கள். ஆகவே, இந்த

[திரு. கா. வேழவேந்தன்] [1973 ஆகஸ்ட் 8

முதலமைச்சருக்கு அடிக்கடி பிறந்த நாள் விழா வரவேண்டும் என்று சுலைமான் சேட் அவர்கள் முதலமைச்சரின் பிறந்த நாள் விழாவிலே குறிப்பிட்டார்கள்.

இப்படி சிறந்த பணிகளை ஆற்றிக்கொண்டிருக்கின்ற முதலமைச்சர் அவர்கள் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்வது வேடிக்கையாக இருக்கிறது. ஒரு குறையைச் சொல்லும்போது நிகழ்ந்த சம்பவங்களை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டாமா? இந்த ஆறரை ஆண்டு காலத்திலே என்னென்ன நடைபெற்றிருக்கின்றன, அதற்கு முன்னாலே என்னென்ன நடைபெற்றிருக்கின்றன என்பதை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டாமா? இந்த ஆறரை ஆண்டு காலத்திலே நடைபெற்றுள்ள சில முக்கிய குறிப்புகளை இங்கே நான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே 15 அமைச்சர்கள் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் அந்தந்தத் துறையிலே என்னென்ன நடைபெற்றிருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்வதற்குப் போதுமான நேரம் இருக்காது. தங்களுடைய மானியத்திலே பதில் சொல்கிறார்கள். குற்றச்சாட்டுகளைச் சொல்பவர்கள் எதிலே சோடை, எதிலே சொத்தை என்பதை எடுத்துக்காட்ட வேண்டும். கல்வித் துறையிலே எடுத்துக்கொண்டால், 1967-க்கு முன்னால் கல்விக்காக 44 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது. இன்றைக்கு 208 கோடி ரூபாய்க்குமேல் இந்த அரசு செலவழித்து வருகிறது. கடந்த 20 ஆண்டு காலத்திலே தமிழ்நாடு முழுவதும் 105 கல்லூரிகள் இருந்தன. ஆனால் இந்த ஆறரை ஆண்டு காலத்தில் 65 கல்லூரிகள் திறக்கப்பட்டிருக்கின்றன. இது சாதனை அல்லவா?

அதேமாதிரி நேற்றையதினம் தொழில் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள் நாம் பெரிய தொழில்களை தொடங்கவேண்டுமானால் டில்லியினுடைய அனுமதியைப் பெற்றுத்தான் தொடங்க வேண்டும். அதிலே தாமதம் ஏற்படுகிறது. நாமாகத் தொடங்கக் கூடிய சிறு தொழில்களை ஏராளம் தொடங்கியிருக்கிறோம். 1967-ல் இருந்ததை விட இப்போது சிறு தொழில்கள் மூன்று மடங்கு பெருகி இருக்கின்றன என்று சொன்னார்கள்.

1973 ஆகஸ்ட் 8] [திரு. கா. வேழவேந்தன்]

வருவாய்த் துறை அமைச்சரவர்களும் இங்கே இருக்கிறார்கள். கடந்த 20 ஆண்டு காலத்தில் காங்கிரஸ் ஆட்சி காலத்தில் பட்டா கொடுக்கப்பட்டிருப்பது 1½ லட்சம் ஏக்கர்தான். ஆனால் இந்த ஆறுண்டு காலத்தில் 5 லட்சம் ஏக்கர் ஏழை எளியவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இது சாதனை அல்லவா?

அடுத்து, மின்சாரத் துறையை எடுத்துக்கொண்டால், இன்றைக்கு இந்தியா முழுவதும் மூன்று மின்சார பம்பு செட்டுகள் இருக்கின்றன என்றால் அவைகளில் ஒன்று தமிழ் நாட்டிலே ஓடிக்கொண்டிருக்கிறது என்ற அளவுக்கு நாம் மின்சாரத் துறையிலே முன்னேறியிருக்கிறோம். மற்ற மாநிலத்துக்காரர்களும் நமது வளர்ச்சியைப் பாராட்டுகிறார்கள். இவைகள் எல்லாம் இந்த அரசின் சாதனைகள் அல்லவா?

கடைசியாக இன்னும் ஒன்றைமட்டும் கூற விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்களுடைய உருவத்தை கூட தங்களுடைய கொடியிலே பொறித்துக் கொண்டிருப்பவர்களுக்கு அண்ணா அவர்கள் குறிப்பிட்டதையே நினைவுபடுத்த விரும்புகிறேன். ஆட்சிக்கு வந்தவுடன் பேரறிஞர் அண்ணா அவர்கள் அருமையான ஒரு உவமையைச் சொன்னார்கள்.

இந்த அரசாங்கம் என்பது கூட ஒரு வாடகை வீடுதான். அதிலே ஆளும் கட்சி என்பது ஒரு ஐந்தாண்டுகாலம் குத்தகை பெற்றுக் குடியிருக்கவருகிறது. வாடகைப் பணம் இந்த நாட்டு மக்கள் தருகிற நல்ல எண்ணம் தான். அந்த வாடகைப் பணத்தைக் கொடுத்து ஆளும் கட்சி அரசு என்ற வீட்டிலே குடி வருகிறது. அது நிரந்தரமானதல்ல; ஒரு கட்சிக்கு சொந்த மானதல்ல. வாடகைப் பணம் என்ற மக்கள் நல்லாதரவு கிடைக்க வில்லை என்றால் வீட்டைக் காலி செய்துவிட்டுப் போகவேண்டியது தான் என்று வேடிக்கையாக இந்த உவமையைச் சொன்னார்கள். அறிஞர் அண்ணா அவர்களின் இந்த உவமையையே இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்திருப்பவர்களுக்குத் தெரிவித்து, அறிஞர் அண்ணா வழியிலே நேர்மையான முறையிலே நடை

பெறுகின்ற இந்த ஆட்சியை, நாட்டு மக்கள் எல்லாம் பாராட்டுகின்ற இந்த ஆட்சியை யாரும் அசைக்க முடியாது என்று கூறி என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, initiating the debate on behalf of Anna Dravida Munnetra Kazhagam, I wish to offer a few remarks in regard to the No Confidence Motion and also the Censure Motion moved by the hon. Member, Thiru K. T. K. Thangamani.

Sir, at the very outset, I would like to stress to the Hon. Chief Minister and his Cabinet, that they have no business to sit as Members of the Cabinet in this House especially after a stringent No Confidence Motion which has already been passed by the people in the Dindigul constituency by more than 5 lakhs of their votes, rejecting this Government *in toto*. After they have passed the No Confidence Motion by more than 5 lakhs votes, we have come before this House to pass the No Confidence Motion by 234 Members of this House. These 234 Members have to respect the feelings of 5 lakhs voters of the Dindigul constituency who have already passed the No Confidence Motion against this Government in unequivocal terms. So, the Members should consider their position and support the No Confidence Motion so that they will not again be subjected to further humiliation in their constituencies. In that particular context and in the light of the verdict at Dindigul, this No Confidence Motion assumes much more importance than the No Confidence Motions moved in the previous years and months.

Now, I would like to invite the attention of the Hon. Chief Minister to the fact that so far as the Dindigul Parliamentary constituency is concerned, in the three Assembly constituencies, D.M.K. candidates had been elected last time. For instance, in the case of Nilakottai Assembly constituency, the D.M.K. candidate this time got 13,634 votes only whereas they got about 38,000 votes last time. Is this not no-confidence against this Government ? So far as Sholavandan constituency is concerned, this time the D.M.K. candidate got only 18,290 votes but last time their candidate got about 43,000 votes. Is this not sufficient

proof to show that they have no business to continue in office? If they have got any sense of self-respect, they should quit office immediately and should not sit in their seats.

With regard to the agitation in the Kanyakumari district, the Hon. Chief Minister has made some announcement now which we do not appreciate. On behalf of the Anna Dravida Munnetra Kazhagam, I would like to say that we are not at all taken in by this sort of 'kanthudaippu'. Whatever he tries to do now, has absolutely no bearing or relationship to the situation prevailing in the Kanyakumari district. We do not value his assurance and therefore we reject his assurance because it has not taken into account the situation prevailing in the Kanyakumari district where the people are coninuing o suffer.

Then, with the limited time at my disposal, I would like to pinpoint certain important points. So far as the incident connected with Thiru V. P. Chintan is concerned, the Hon. Chief Minister has stated that he has nothing to do with that and that he has done all that is possible to save Thiru Chintan. My charge is that the Hon. Chief Minister is directly responsible for the stabbing injury caused to Thiru Chintan because of his failure to take immediate action in the matter. The Hon. Chief Minister himself has received a letter from Thiru V. P. Chintan. It runs as follows :—

"

No. 4, Stringer Street,
Madras,
Date : 17-7-1973.

To

The Hon'ble Chief Minister,

.....

Dear Thiru Karunanidhi,

Herewith please find a notice published by 17 organisations affiliated to the D.M.K.

[Dr. H. V. Hande] [1973 ஆகஸ்ட் 8

A meeting under the auspices of Milk Project Worker's Union at Madhavaram is to be held at 6 p.m. to-day. The obvious intent of this notice is to rouse passions of the D.M.K. followers and to attack our meeting. .....

I would request you to contact the D.M.K. leaders of the area and dissuade them from their design . . . "

Even Mr. Parameswaran had telephoned to the Hon. Chief Minister but the latter was not available and Mr. Parameswaran again telephoned to the P.A. to the Hon. Chief Minister about the contents of the notice. But no action was taken on the inflammatory nature of the notice which contained the words—

"கொலைகாரன் குசேலன் வருகிறான்
பொது மக்களே பாதுகாப்பாக இருங்கள்".

This notice was printed and distributed. What action has this Government taken against the persons responsible for it ?

So far as labour unions are concerned, it is the Hon. Chief Minister and D.M.K. supporters who are responsible for the violence unleashed on the workers of the labour unions and he wants to throttle the activities of his rival labour unions. He tried it in the case of Simpson Company by supporting the management against the workers. In the case of Ashok Leyland also he acted as a stooge and spokesman of the management and created a rift among the labour unions. Is this not a matter for the No Confidence Motion to be passed in this House ?

Not only is violence unleashed against the trade union workers. Violence has been unleashed against the entire A.D.M.K party workers. There are 25 lakhs workers in that party and against each one of them Mr. Karunanidhi's Government is unleashing violence.

Take my own constituency for instance. One member has written letters against Mrs. Satyavanimuthu previously. That member is completely ruling the Police station there. He has taken control of the Police station. The Sub-Inspector there has no work. The D.M.K. party is ruling there and not the Police

1973 ஆகஸ்ட் 8] [Dr. H. V. Hande]

officials. It is Karunanidhi's men who are ruling there. I ask, is this law and order ? Is this the way in which administration should be carried on ? Can anyone withstand this kind of onslaught ?

One member of A.D.M.K. in Chindambaram was tied to a pole, kerosene oil was poured on him and he was set fire to. One Municipal Councillor had been arrested. We had written to the I.G. of Police. But nothing has happened so far. The only sin that the man had committed was that he wanted to join A.D.M.K. party. Similarly I can quote a number of instances.

Forty-one members from Bhuvanagiri belonging to A.D.M.K. had been given trouble. Take my own place, Shenoynagar. Number of persons there were arrested simply because I had gone there to address a public meeting. This is shocking to us.

Here is the photostat copy of a letter written by one Thiru A. Mani, Chairman, Panruti Municipality, dated 11th February 1973, to the local Police Officer.

சங்கரன் எம்.ஜி.ஆர். கட்சியில் இருந்து விலகி வந்து கழகத்தில் சேர்ந்துவிட்டதாக எழுதியிருக்கிறார்கள். அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை.

Could there be any better proof to destroy the demon-like ' atchi ' of Karunanidhi? What a scandalous thing? The whole of India must be shocked at the way in which things like this are happening. I have got two photostat copies and if necessary, I shall give one copy to the Hon. Speaker. This is exactly the *modus operandi* of D.M.K. men. I have read the photostat copy of the letter. Could there be any better proof ?

To-day it is happening to A.D.M.K. workers. To-morrow it may happen to Congress (O), then to C.P.I. and afterwards to Congress (R). I mean the threat of the D.M.K. It is very shocking. The Hon. Chief Minister may be smug about it. He may try to destory us. We are not afraid of what he does. We are prepared to lay down our lives. We have withstood the British Police during 1942 August movement. We are prepared to face

[Dr. H. V. Hande] [1973 ஆகஸ்ட் 8

Karunanidhi's Police. I have recently escaped from an attempt on my life. I have lived my life. I am not in the least bothered about my life.

THE HON. THIRU P. U. SHANMUGAM : I wish Dr. Hande long life.

DR. H. V. HANDE : The Hon. Minister may say so. But what is the thinking of your Cabinet ? What is the thinking of Mr. Karunanidhi ? You may say one thing here. It remains to be seen what you speak outside. I cannot be hoodwinked by all these. You have tried to unleash violence on A.D.M.K. party workers. The whole of India must be shocked at the atrocious way in which Karunanidhi and his men are treating the workers of A.D.M.K. party. In my own constituency for the past six months one D.M.K. party man is ruling the Police station . . .

THE HON. THIRU P. U. SHANMUGAM : Mr. Speaker, I want to know whether the hon. Member Dr. Hande is addressing you or addressing the Press there ?

DR. H. V. HANDE : If the Hon. Minister Thiru P. U. Shanmugham does not know the rules, I can teach him the rules. The rule is we have to address through the Chair. It is not as if all the 24 hours that I should be facing the Hon. Speaker, Pulavar Govindan. I would ask the Hon. Minister to brush up the rules.

I was speaking about Mr. Karunanidhi and his mis-rule. No member of the Cabinet is an exception. Nobody knows how to conduct the administration. Either they are inefficient or incompetent.

Take the Education Minister. Is he fit to be an Education Minister ? According to me, Mr. Nedunchezhian is unfit to be an Education Minister. If Mr. Karunanidhi were to go, Mr. Nedunchezhian has also to go. He does not know what is happening in his own Education Department. I have received a telegram " students strike continuing in Erode for fifth day. Management using rowdies against student " etc., It is signed P. U. Shanmugham, Union Chairman, Chickkanaickenpalayam. This is how students are being victimised. There are no laboratories in colleges, in Government colleges and this our Education Minister

does not know. Leaders do not bother about this. The Education Minister is impervious to all these things. In my opinion he is totally unfit to be an Education Minister. Every Member of the Cabinet is totally unfit to be Ministers. If I had the time, I will prove it by giving facts and figures.

Take the ' medical side '. I would like to say that Mr. Anbazhagan is totally unfit to be the Health Minister. (Interruption). All the members of the Ruling Party are unfit. (Interruption). I challenge every one of you. If you contest the election, you will lose deposit. If Mr. Karunanidhi were to contest from Saidapet he will lose deposit. I challenge . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, டாக்டர் ஹாண்டே டெபாசிட்டாவது வாங்கலாம் என்றுதான் அடுத்த கட்சிக்குப் போயிருக்கிறார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: என்ன? என்ன சொன்னீர்கள்? காதில் விழவில்லை.

(திரு. ஆறுமுகம், திரு. முனுசாமி, திரு. துரைமுருகன் ஆகிய எல்லோரும் குறுக்கிட்டார்கள்.)

திரு. கே. ஏ. மதியழகன்: இதுதான் முறையா? முறையைச் சொல்லிக் கொடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மெம்பர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். தலைவர்களுக்குத் தெரியவேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் என்ன சொன்னீர்கள்? அதைத்தான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நான் சொன்னதைத் திருப்பிச் சொல்கிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் டெபாசிட் டாவது வாங்கலாம் என்றுதான் அடுத்த கட்சிக்குப் போயிருக் கிறார்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் சொல்கிறேன் . . . தைரியம் இருந்தால் நான் சொன்னதற்குப் பதில் சொல்லுங்கள் . . . . . (கூச்சல், குழப்பம்.)

[1973 ஆகஸ்ட் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் விவாதத்திற்கு வந்திருப்பது நம்பிக்கையின்மைத் தீர்மானம். அரசு செய்கிற குற்றங்களை, தவறுகளை டாக்டர் ஹாண்டே அவர்கள் சுட்டிக்காட்டுவதில் தவறு இல்லை. உறுப்பினர்கள் எல்லாம் லாயக்கற்றவர்கள், உறுப்பினர்கள் எல்லாம் உபயோகம் இல்லாதவர்கள் என்று சொல்வது முறைகேடான முறை. டாக்டர் ஹாண்டே அவர்களைத் திருத்திக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய சபாநாயகர் அவர்களுக்கு ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்கிறேன். இந்த அவையின்மீது நம்பிக்கையில்லா தீர்மானம், முதலமைச்சர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த அவையின்மீது அல்ல, அமைச்சரவையின் மீது....

(திரு. கு. காமாட்சி, திரு. மு. சின்னசாமி மற்றும் சில உறுப்பினர்கள் குறுக்கிடு.)

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் பேசுவதற்கு வாய்ப்பு தருகிறீர்களா, இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே, கொஞ்சம் உட்காருங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நான் முடித்துவிடுகிறேன், பிறகு நீங்கள் சொல்லுங்களேன். முதலமைச்சருடைய தலைமையில் உள்ள இந்த அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம். இந்த முதலமைச்சரைத் தேர்ந்தெடுத்தவர்கள் இந்த சட்டமன்ற உறுப்பினர்கள். அவர்கள் அத்தனை பேர் மீதும், இந்த அமைச்சரவை மீதும் நம்பிக்கையில்லாத் தீர்மானம். தனிப்பட்ட உறுப்பினர் என்கிற வகையில் அவர் ஒரு உறுப்பினர்—ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறோம். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை முதலமைச்சரைமீது நாங்கள் கொண்டு வருகிறோம். நான் என்ன சொல்கிறேன் என்றால், பொதுமக்கள்

1973 ஆகஸ்ட் 8] [டாக்டர் எச். வி. ஹாண்டே]

இங்கே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அத்தனை பேர் மீதும் நம்பிக்கை இழந்திருக்கிறார்கள். அடுத்த பொதுத் தேர்தலிலே அவர்கள் டெபாசிட் வாங்க முடியாது; ஆகவே, இங்கே உட்கார்ந்திருப்பதற்கு எந்தவிதமான நியாயமும் இல்லை. (குறுக்கீடு) நான் அவருக்குச் சொல்கிறேன், இன்றையதினம் சொல்கின்ற இந்த வார்த்தைகளை வைத்துக் கொள்ளுங்கள். முதலமைச்சருக்கு தைரியம் இருந்தால், உண்மையாக பூங்காநகர் தொகுதியிலே, எந்தத் தொகுதியிலே வேண்டுமானாலும் அவர் நிற்கட்டும், நான் சந்திக்கத் தயார், நான் 'சாலஞ்' பண்ணுகிறேன் . . . . நான் 'சாலஞ்' பண்ணுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நான் புலிகளை சந்தித்துத் தான் பழக்கம். பூனைகளை சந்தித்துப் பழக்கம் அல்ல. *(ஆளும் கட்சித் தரப்பில் பலத்த ஆரவாரம்.)*

டாக்டர் எச். வி. ஹாண்டே : யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது. புலியும் கிடையாது, சிறுத்தையும் கிடையாது, பூனையும் கிடையாது. புலியையும் . . .

திரு. கே. ஏ. மதியழகன் : அருமையான கதை, வசனம். . .

(திரு. முனு ஆதி, திரு. என். கணபதி, திரு. துரை முருகன் மற்றும் சில உறுப்பினர்கள் குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்களும் எழுந்து கொள்கிறார்கள், நீங்களும் எழுந்து கொள்கிறீர்கள். மதி, நீங்கள் உட்காருங்கள். நீங்கள், என்னைக் கேட்டு அல்லவா பேசவேண்டும்? ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது நீங்கள் பேசினால் எப்படி?

திரு. முனு ஆதி : எல்லோரையும் கேளுங்கள், எங்களை மாத்திரம் உட்கார், உட்கார் என்று சொன்னால்? சில பேர் எழுந்துகொள்வது தெரியவில்லை, நாங்கள் எழுந்த உடனேதான் உங்களுக்குத் தெரிகிறது.

[1973 ஆகஸ்ட் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் சவால் விட்டுப் பேசினர்கள். அது முறையல்ல. டாக்டர் ஹாண்டே அவர்கள் எப்படிப் பேசவேண்டும் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நீங்களே எழுதிக் கொடுத்து விட்டால், நன்றாக இருக்கும். உங்களிடம் கேட்டுக் கொண்டே பேசவேண்டுமா ? அப்படிப் பேசு, இப்படிப் பேசு என்று கூறுகிறீர்களே. நீங்களும் ஒருகாலத்தில் எதிர்க் கட்சியிலே இருந்தீர்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சருக்கு எந்தப் புலியைப் பார்த்தாலும் பூனையாகத் தெரிகிறது. அது வேறு விஷயம்.

Sir, I was referring to the Public Health Ministry. For instance, there is a copy of a letter written by Dr. Annamalai. He has asked for extension of 3 or 4 years. Last time also I had mentioned that the present Director of Medical Education was asking for extension. But the Government Order on the question is quite clear. It says that whenever anybody asks for extension, it must be done five years earlier. That is the Government Order and that is very clear. I have got the copy of the Government Order also. Dr. Annamalai had asked for extension. Nothing was done. (Interruption.) I do not know. He might have destroyed the papers. He has asked for extension on 9th April 1973, enclosing a copy of the horoscope to show his correct date of birth. My point is that there is large-scale protest from the Indian Medical Association and members of the Association have protested and they have said that extension whether it is for the Director of Medical Education or for anybody, injures the interests of the members of the entire medical service. I charge the Minister for Health, the Hon. Mr. Anbazhagan, that he is demoralising the entire medical service and is inviting and incurring the wrath of the Indian Medical Association who are all very furious that such irregularities should come to the surface.

Again, in the Cardiography Department, they have indented for furniture worth Rs. 7 lakhs. For what purpose ? When an important microscope has been denied, for whom is the furniture

bought? They say it is for important Ministers and V.I.Ps. who come there. Is it for them to sit and chat the Hospital is there ? Or is it for the cure of patients ? He has not been able to solve even the Cipmol compound case 'Who is exactly responsible for it ? He has brought discredit to the fair name of Tamil Nadu by this scandal. He has not done anything in the matter. How many deaths due to cholera ? It is all woeful story which tell their own tales.

I come to the other point. Our Hon. Chief Minister is an adept and an expert in taking letters, getting it signed previously and suddenly he will give to the presiding officer and corner the person with that. He has done it. I have got proof for it. For all these Municipal Councillors of Chidambaram *(வெறும் கடிதத்திலே கையெழுத்து வாங்கிக் கொண்டு)* they have signed and he has collected. I have got proof here. Mr. K. R. Ganapathi who was the councillor of Chidambaram Municipality was involved. A letter was taken from him. He has told me. I have concrete evidence and a letter signed earlier by Ganapathi was taken by the Hon. Chief Minister. Ganapathi has also objected to it .....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: *தலைவர் அவர்களே, இந்தக் குற்றச்சாட்டை நான் மறுக்கிறேன். அப்படி யாரிடமும் நான் கடிதம் வாங்கி, அதை ராஜினமா என்று யாருக்கும் நான் அனுப்பிவைக்கவில்லை.*

டாக்டர் எச். வி. ஹாண்டே: *நான் ப்ரூவ் பண்ணுகிறேன். "20—11—1972 அன்றைய தினம் சுமார் காலை 11 மணி அளவில் நகர மன்ற கமிஷனர் அவர்களிடம் நான் ராஜினமா செய்ததாக கடிதம் யாராவது கொண்டு வந்து கொடுத்தால், அது செல்லத் தகாதது. நான் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்தவுடன் வெறும் காகிதத்தில் நான் கையொப்பமிட்டுக் கொடுத்த மாதிரி தலைவரிடத்திலே வாங்கிக் கொண்டு, நம்முடைய முதலமைச்சரிடத்திலே சொல்லி" . . . (குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அப்படி நான் யாரிடத்திலும் வாங்கவில்லையென்று சொல்கிறார்கள். அதன் பிறகு, யாரோ ஒருவர் எழுதிய கடிதத்தை*

வைத்துக்கொண்டு நீங்கள் சொன்னால், அதற்கு நீங்கள் பொறுப்பேற்கவேண்டும். இந்த அவையில் நீங்கள் அவர்கள் சொன்னார்கள் என்று சொல்லித் தப்பித்துக்கொள்ள முடியாது. அவையிலே ஒன்றைச் சொல்கின்றபோது அதைச் சொல்கின்ற அந்த உறுப்பினர் அதற்குப் பொறுப்பேற்க வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைதியாக, தயவுசெய்து, பொறுமையாக என்னுடைய பேச்சைக் கேட்டால் உங்களுக்கே சந்தேகம் இருக்காது. நீங்கள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைத் தலைவரவர்களைப் பார்த்து, உங்களுக்கு தெரியவேண்டும் என்று சொல்வது முறையல்ல. நீங்கள் பல வருஷம் சட்டமன்றத்திலே இருந்திருக்கிறீர்கள் அவைத் தலைவருக்குத் தெரியவில்லை என்று சொல்லாதீர்கள். அவைக்குத் தெரியவேண்டும், அமைச்சர்களுக்குத் தெரிய வேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: உங்களுக்கு என்றால் உங்கள் மூலமாக அவர்களுக்கு என்று அர்த்தம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் மூலமாக அமைச்சர்களுக்குத் தெரிவிக்கிறேன் என்று பேசுவதுதான் முறை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: உங்கள் மூலமாக அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றால் முதலமைச்சருக்குத் தெரிவிக்கிறேன் என்பது பொருள் இது ரொம்ப சிம்பிள்.

அப்படிப் பேசினர், இப்படிப் பேசினர் என்று . . .

திரு. துரைமுருகன்: இந்த அவையிலே ஒரு கடிதத்தையோ வேறு எதையாவதையோ படிக்க வேண்டுமானால் சபாநாயகருடைய அனுமதி வேண்டும். அதை அவர் பெற்றிருக்கிறாரா என்று அறியவேண்டும்.

திரு. முனு ஆதி: நாங்கள் பேசினால் உட்காருங்கள் என்று சொல்கிறீர்கள். அவர்கள் பேசலாமா? அவர் எவ்வளவு பேசுகிறார் பாருங்கள்.

1973 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முன்னால், போட்டோ எடுத்த லெட்டரைப் படிக்கவேண்டுமென்று என்னை அனுமதி கேட்டீர்கள். அந்த லெட்டரைப் பார்த்துப் படியுங்கள் என்று சொன்னேன். அதைக் காட்டியிருக்கும்போது, நீங்கள் படிக்கிற எல்லா லெட்டர் களையும் காட்டியிருக்கவேண்டும் அல்லவா? எதைப் படிப்பதாக இருந்தாலும் அவைத் தலைவரிடத்திலே காட்டியிருக்கவேண்டும். இதைச் சொன்னால் கூட, நீங்கள் எதிர்க்கட்சியிலே இருந்தீர்களே என்று கூறுவீர்கள். நாங்கள் எதிர்க்கட்சியிலே இருந்தபோது அப்படித்தான் பண்ணினோம். ஆக, பேரவைத் தலைவருடைய அனுமதி பெற்றுத்தான் படிக்கவேண்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: நீங்கள் சொல்வதிலே எனக்கு தப்பு தெரியவில்லை. ஆனால், கடிதத்தைப் படிக்கின்ற நேரத் திலே . . .

திரு. மு. சின்னசாமி: அவர் படித்துவிட்டார். கவர்ன்மென்ட் செக்கார்டில் செக்கார்டாகிவிட்டது. அதற்கு என்ன சூலிங்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு அவர் பொறுப் பேற்றுக்கொள்கிறார்.

திரு. கே. டி. கே. தங்கமணி: பொதுவாக நாங்கள் இந்த அவையிலே ஏதாவது தஸ்தாவேஜுகளை முழுவதும் படிக்க வேண்டுமென்றால் தங்களுடைய பெர்மிஷன் வாங்கிக் கொள்கிறோம். சில சமயங்களிலே எங்களுக்குக் கடிதங்கள் வருகின்றன. முழுமையும் படிக்காமல்—எங்களுக்கு வருகின்ற கடிதங்களிலிருந்து இப்பொழுது சிதம்பரத்திலிருந்து வருகிறது என்றால் அதிலிருந்து—ஒன்று இரண்டு விஷயங்கள் இப்படி இருக்கின்றன என்று எடுத்துச் சொல்வதற்குக்கூட எங்களுக்கு உரிமை இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது தப்பு இல்லை. அப்படிப் பேசலாம். ஆனால் முழுமையும் அனுமதியில்லாமல் அவையிலே படிக்கக்கூடாது.

[1973 ஆகஸ்ட் 8

திரு. கே. டி. கே. தங்கமணி : பல ரிப்போர்ட்டுகள் எங்களுக்கு வருகின்றன. சிலவற்றை நாங்கள் சொந்த சரக்குகளாக்கிக் கொள்கிறோம், சிலவற்றை உங்கள் பெர்மிஷன் வாங்கி அப்படியே படிக்கிறோம். இப்படி இப்படி விஷயங்கள் அதிலே சொல்லப்பட்டிருக்கின்றன என்று சொல்வதற்கு எங்களுக்கு உரிமை கிடையாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பகுதியை 'கோட்' பண்ணுவதில் எந்தவிதமான தவறும் இல்லை.

DR. H. V. HANDE : I may tell the House this. The Hon. Chief Minister, Dr. M. Karunanidhi, the Hon. Thiru P. U. Shanmugham, the Hon. Thiru S. Ramachandran, the Hon. Thiru N. V. Natarajan and Thiru Swaminathan, M.P., have assembled in the Palani Vidudhi in Chidambaram and they assembled there to collect the 'Rajinama Kadithams' from the M.L.As. I can prove this by a simple method. Let him bring the resignation letters and let the Leaders of all the parties, Thiru R. Ponnappa Nadar, Thiru K. T. K. Thangamani, Thiru K. Mathialagan and other leaders discuss about the matter with the Hon. Speaker in his Chamber. Let the resignation letters be brought here and let the handwriting be examined by hand writing experts. Let him examine the date on which the letter was written and also the ink in which it was written and the contents of the letter be examined by them. I will take the full responsibility in this matter. Let the letters be brought and kept on the Table of the House and let all the party leaders discuss the matter and judgement may be given by the Hon. Speaker. My point is this. There is discrepancy in the date. It will show that the letter was taken earlier. Is this the way of doing things ? After the member had joined the D.M.K. the letter was taken from the member.

A similar complaint was voiced by a member of the Legislative Council. I charge that this Government is indulging in misuse of powers and nefarious methods. The Hon. Chief Minister is adopting nefarious methods by which he is threatening all the members of his party and by this method he is blackmailing all the members of his party by collecting such a 'rajinama letter' By collecting such a letter, he is threatening the members that,

1973 ஆகஸ்ட் 8] [Dr. H. V. Hande]

if you do not do this you will be removed from the party and your resignation will be released '. This is the method which the Hon. Chief Minister is adopting. I strongly object this. I, therefore, request the Hon. Speaker himself to go into the matter and to give his ruling. I am prepared to take up full responsibility and also accept the punishment that is given by the Hon. Speaker.

THIRU S. KANDAPPAN : The expression ' blackmailing ' used by the hon. member Dr. Hande is objectionable. He said that the Hon. Chief Minister is blackmailing which is obnoxious and it should not find a place in the official record of the proceedings. It is a charge against the Hon. Chief Minister and it must be expunged from the proceedings. It is a very serious charge against the Hon. Chief Minister and it must be removed.

DR. H. V. HANDE : I do not know whether that is too strong a word. I withdraw that word. The hon. Member Thiru S. Kandappan said many words yesterday but they were not withdrawn by the hon. Member. If the word hurts anybody's feeling, I will withdraw that word.

ஆனல் அதே கண்ணியத்தை அவர்களும் கடைப்பிடிக்க வேண்டுமென்று தான் கேட்டுக்கொள்கிறேன்.

This is how the hon. Members are kept under control by the Hon. Chief Minister.
இப்படித்தான் அவர்கள் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறார்கள். The Hon. Chief Minister is adopting such obnoxious and nefarious methods. otherwise, what is the reason for him to talk to them privately? I have heard many members telling that we are unfortunate that we are in the D.M.K. Why this sort of feeling ? This is an important matter.

Finally, I would like to lay stress on wall-writing. The Hon. Chief Minister, Dr. M. Karunanithi is always my friend. He will always be my friend. Because he is my good friend, I want to say this. In the interest of my affectionate friendship with him and in his own interest I want to tell him that there is no point in his continuing in office. The public also exhibited their verdict in the recent Dindigul election. Out of every 10 people, 9 people

are against the present Government. That is the verdict of the Dindigul election, but still the ministry is clinging to power and the members are clinging to the party to extract certain favours from the Hon. Chief Minister. There is complete demoralisation in the services, in the administration and everywhere. Therefore, I ask the Hon. Chief Minister to immediately quit the office. If he has the guts, let him dissolve the Assembly in view of the extraordinary circumstances and situation that prevail to-day. I repeat what our Deputy Leader Thiru Mathialagan has said on the other day. If he has the guts, if he has any sense of self-respect and if he has a sense of duty, I am asking him to quit the office. I am not threatening him because he is my affectionate friend. I am asking him in affectionate terms to quit the office.

அவர்கள் அவர்களை காப்பாற்றிக் கொள்வதற்காகத்தான் நான் இதை சொல்கிறேன்.

I am also asking him in his own interest to dissolve the Assembly and come forward to face the electorate because of the extra-ordinary situation that has arisen. Yesterday, my hon. friends, Thiru B. Venkatasami, Thiru K. T. K. Thangamani and to-day Thiru J. James, all spoke about the defects of the Karunanidhi Ministry. All the Opposition Parties are clear about one thing. The Karunanidhi Ministry is against labour, the Karunanidhi Ministry is against the interest of the students, it is against the interest of handloom weavers, this Government is against the interest of the unemployed people and above all, this Government is against the interest of its own employees N.G.G.Os. In view of all these, is it necessary that it should continue ? Should it continue is a question?

My final point is this. Now the public is against this Government and many of the members of the Assembly are trying to extract a pound of flesh from the Hon. Chief Minister. The entire administration is demoralised. The entire Police force is demoralised. All are with the hope that the present Government will not continue. In his own interest, I not only request the Hon. Chief Minister to quit the office but also to dissolve the Assembly and seek fresh election if they have the guts to do so. In that you will be the loser and none of us.

1973 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நண்பர் ஹாண்டே அவர்கள் பேசும்பொழுது சுயமரியாதை இருந்தால், சுயமரியாதை இருந்தால் என்று கூறி எங்களை ராஜினாமா செய்யச் சொன்னார்கள். நாங்கள் சுயமரியாதை இயக்கத்திலே இருந்து வளர்ந்தவர்கள்தான். பெரியார் ராமசாமி அவர்களுடைய அரவணைப்பிலே வளர்ந்தவர்கள் நாங்கள். அவர்கள் சேர்ந்திருக்கிற புதுக் கட்சியிலே இருக்கிறவர்களும் சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான். நீங்கள்தான் அந்தக் கட்சியில் இப்பொழுது சேர்ந்துகொண்டு புதிதாக சுயமரியாதைப் பற்றிப் பேசுகிறீர்கள். அவர்களுடைய பாணியிலேயே சொல்ல விரும்புகிறேன், அவர்கள் முன்பிருந்த சுதந்திராக் கட்சியினர் அவரை ராஜினாமா செய்யச் சொல்கிறார்கள், அவருக்குச் சுயமரியாதை இருந்தால் அவர் அதை நிறைவேற்றட்டும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: எனக்குச் சுயமரியாதை இருந்தால் ராஜினாமா செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். அவருக்கு நான் சொல்கிறேன். அவர்கள், முதலமைச்சர் கருணாநிதி அவர்கள், இப்பொழுது தி.மு.க.விலே இல்லை, இன்னும் அதிலே இருப்பதாக நம்பிக்கொண்டிருக்கிறார். நான் முன்னாலேயே ஓட்டு எண்ணிக்கையைப் பற்றி எல்லாம் சொன்னேன். அவர்கள் இப்பொழுது இருப்பது உயிரில்லாத கட்சி. தி.மு.க.விலே இருந்த உயிர் வெளியே வந்துவிட்டது. தி.மு.க. விலிருந்து உண்மையான உயிர் வெளியே வந்திருப்பதால் (மகளிர் மாடத்தில் இருந்து துண்டுப் பிரசுரங்கள் அவைக்குள் விழுந்தன) It is only body which has no life. அதற்காகத் தான் நான் சொல்கிறேன், மதிப்பிற்குரிய கருணாநிதிக்கு சுயமரியாதை இருந்தால்—அவர் அந்தக் கட்சியிலே இல்லை, போன மாதிரிதான், அங்கேயுள்ள அத்தனை பேர்களும் கட்சி மாற வேண்டுமென்று எண்ணுகிறார்கள். தி.மு.க. வின் உயிர்நாடி மட்டுமல்ல. மற்ற எல்லாக் கொள்கைகளும் வெளியேவந்து அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே தான் இருக்கிறது.

[1973 ஆகஸ்ட் 8

It has only body but no life. He is no longer in the D.M.K. He has got only his henchmen and supporters. He has also defected because the voters have stopped supporting Mr. Karunanidhi .....

திரு. மு. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இன்று இந்த மாமன்றத்தில் என்னுடைய மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர்கள் திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது கொண்டு வந்திருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்த்து ஒருசில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதைச் சொல்வதற்கு முன்னால் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு பேரவை உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் கொஞ்சம் உணர்ச்சிவசப்பட்டு, வழக்கம்போல் பேசி யிருக்கிறார்கள். அதைப்பற்றி முதலிலே எடுத்துக்கொண்டு, பிறகு பிரச்னைகளுக்கு வருவதற்கு ஆசைப்படுகிறேன். அவர்கள் திண்டுக்கல் தேர்தலைப்பற்றிக் கொஞ்சம் வேகமாகப் பேசினார்கள். திண்டுக்கல் தேர்தலில் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை வாக்காளர்கள் கொடுத்துவிட்டார்கள் என்று டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்வது எனக்கு வியப்பாகவும் விசித்திரமாகவும் இருக்கிறது. நானும் திண்டுக்கல் தேர்தல் நேரத்திலே 10 நாட்கள் அங்கே இருந்தேன். மதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்களும், திரு. பொன்னப்ப நாடார் அவர்களும், ஸ்தாபன காங்கிரசுக்கு ஓட்டுப்போட வேண்டுமென்று பேசினார்கள். அப்படி டாக்டர் ஹாண்டே அவர்கள் எந்தக் கட்சிக்கு ஓட்டுப் போட வேண்டுமென்று சொன்னாரோ அந்தக் கட்சி வெற்றி வாய்ப்பை இழந்த பிறகு ஏதோ காரணத்தால், என்ன இரகசியமோ, என்ன காரணமோ எனக்குத் தெரியாது, இந்தக் கட்சிக்கு வந்து திண்டுக்கல் தேர்தல் பற்றிப் பேசியது எவ்வளவு அரசியல் நாகரிகம் உள்ளது என்பதை டாக்டர் ஹாண்டே அவர்கள் உணர வேண்டுமென்று நண்பர் என்ற முறையில் விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்குக் காரணம், நான் இப்பொழுது பேசுவதற்கு முன்னால் ஒரு அசாதாரணமான பிரச்னை இங்கே எற்பட்டது. நான் இந்த மாமன்றத்தில் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

1973 ஆகஸ்ட் 8] [திரு. மு. சின்னசாமி]

பண்டிட் ஜவஹர்லால் நேரு அவர்களை நான் அதிகமாக மதிப்பவன். அவர்கள் ஒரு புத்தகத்தை எழுதியிருக்கிறார்கள். இராமாயணத்தை, ஆரியருக்கும் திராவிடருக்கும் நடந்த யுத்தம் என்று எழுதியிருக்கிறார்கள். ஆடு மேய்க்க, மாடு மேய்க்க இந்தத் துணைக் கண்டத்திற்கு வந்தவர்கள் என்னுடைய தாய்த்திரு நாட்டில் உள்ள இந்திய இனத்தை ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்று எவனுவது நினைத்தால் அவன் வாழ்நாளில் வெற்றிபெற முடியாது என்று ஆரம்பத்திலே சொல்லி என்னுடைய வார்த்தைகளை ஆரம்பிக்கிறேன்.

நான் ஆரம்பிப்பதற்கு முன்னால், என்னுடைய கோவை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயப் பெருங்குடி மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு சிறையிலே இருந்தவர்களை என்னுடைய தானைத் தலைவர் நேற்றே விடுதலை செய்து இருக்கிறார்கள். அந்தப் பிரச்னையிலே மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் பேசினார்கள். பொதுவாக, நான் இங்கே 1973-ம் ஆண்டிலே, தமிழகத்திலே ஒரு விசித்திரமான அரசியலைப் பார்க்கிறேன். மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்களும் நானும் 1948 ஆம் ஆண்டில் விவசாயிகள் பொதுஜன இயக்கப் போராட்ட காலத்திலே வேலூர் சிறையில் ஆண்டுக்கணக்கில் தோழமை உள்ளத்தோடு பழகியிருந்தோம். அவர் மட்டுமல்ல, அவருக்குப் பின்னால் இருக்கிற திரு. ஏ. சுப்பிரமணியம் அவர்களும், அவர்களுக்குப் பின்னால் இருக்கிற திரு. சுரேந்திரன் அவர்களும் ஆக அத்தனை நண்பர்களும் ஆண்டுக் கணக்கிலே வேலூர் சிறையிலே வாடி வதங்கிய கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். அந்த கே. டி. கே. தங்கமணி அவர்கள் நேற்று பேசிய பேச்சிலே எனக்கு ஒரு சந்தேகம் வந்திருக்கிறது. அதை எனக்காக அல்ல, இந்த நாட்டிற்குத் தெளிவுபடுத்தியாக வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைக் கேட்டுக் கொள்கிறேன்.

நான் கொள்கை ரீதியாக வருகிறேன். சாதாரண சின்னப் பிரச்னைக்கு, சாக்கடைப் பிரச்னைக்குப் போக விரும்பவில்லை. அந்த முழுப் பொறுப்பை திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள்

[திரு. மு. சின்னசாமி] [1973 ஆகஸ்ட் 8

ஏற்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் கண்ணோட்டத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பார்வையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தூர நோக்கத்தில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் லெனின் பாதையில், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சித்தாந்தத்தில் விவசாயிகள் என்றால் யார் என்ற கேள்விக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பதில் சொல்லியாக வேண்டும். மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் மாமன்றத்திற்குப் பதில் சொல்லியாக வேண்டும். பழைய கோட்டை பட்டக்காரரிடத்திலே தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் முடிவுக்கேற்ப எனது அருமை நண்பர் திரு. கே. டி. கே. ராஜு அவர்கள் அந்தப் பூமியை எடுக்கச் சென்றார். ஏன் பழைய கோட்டை பட்டக்காரரைத் தேர்ந்தெடுத்தது தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி? தமிழ்நாட்டில் 10,600 ஏக்கர்களுக்குச் சொந்தக்காரர், ஆயிரக் கணக்கான தொழிலாளர்களை அடித்துத் துன்புறுத்திய சண்டாளன், எனவேதான், கம்யூனிஸ்ட் கட்சி என்னுடைய கொங்கு நாட்டில் பழைய கோட்டை பட்டக்காரரின் இடத்தை யுத்தகளமாகத் தேர்ந்தெடுத்தது. யாரைத் தளபதியாகத் தேர்ந்தெடுத்தது என்றால் ஈரோடு கே. டி. ராஜுவைத் தேர்ந்தெடுத்தது. என்னுடைய சிறையிலே 1948 ஆம் ஆண்டிலே இருந்த என் அருமைத் தோழரை சென்று வா கே. டி. ராஜுவே கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக, என்று பழைய கோட்டை பட்டக்காரரிடத்திலே, நிலப் பிரபுக்களின் தலைவனிடத்திலே போய் நிலத்தை எடு என்று தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி ஆணையிட்டது.

நான் வேறு இயக்கத்திலே இருந்தாலும் அந்த ஆணைக்குத் தலை வணங்கினேன். 36 ஆண்டுக் காலமாக எந்த ஆசையை நான் நினைத்திருக்கிறேனே அந்த ஆசை இந்த நாட்டிலே நிறைவேற வேண்டுமென்று நினைத்துக் கொண்டு, எந்த ஆசைக்காக மீண்டும் சாகத் தயாராக இருக்கிறேனே அந்த ஆசை நிறைவேற தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி ஆணையிட்டுவிட்டது, அதற்காக கே. டி. ராஜு போகிறார் என்று வாழ்த்தினேன், மரியாதை செய்தேன். அந்த பழைய கோட்டை பட்டக்காரரைச் சிறையிலே அடைக்க வேண்டுமென்று சொல்லும் கம்யூனிஸ்ட் கட்சி, போர்க் குரல் எழுப்ப வேண்டுமென்று இருந்த கே. டி. கே. தங்கமணி அவர்கள்

1973 ஆகஸ்ட் 8] [திரு. மு. சின்னசாமி]

எப்படியோ, என்ன விதிவசத்தாலோ, அவர் நம்புகின்ற ஆண்டவனின் அருளினாலோ அவருக்கு வக்காலத்து வாங்கும் தலைவிதி 1973-லே இந்த மாமன்றத்தில் வந்துவிட்டது என்று விசனப்படுகிறேன், கண்ணீர் வடிக்கிறேன். அவரோடு சிறையிலே இருந்து துன்பப்பட்ட சாதாரணத் தொண்டன் என்ற முறையிலே இதைச் சொல்கிறேனே தவிர, அரசியல் காழ்ப்புணர்ச்சியால் நான் சொல்லவில்லை. என்னுடைய இதயம் பேசுகிறது. என் இப்படிப்பட்ட நிலை வந்துவிட்டது என்று பார்க்கிறேன். எங்கேயோ பிறந்து, எங்கேயோ வளர்ந்து இங்கே வந்து என்னுடைய தாய்த் திருநாட்டில் ஒரு படத்திற்கு 7 இலட்சம், 9 இலட்சம் என்று, அதில் 75,000 ஒயிட் மணி, எட்டே கால் இலட்சம் ப்ளாக் மணி என்று. . .

திரு. முனு ஆதி : பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார். எங்கேயோ இருந்து, எங்கேயோ பிறந்து, எங்கேயோ ஓடி வந்தவர்கள் இங்கே 7 இலட்சம், 9 இலட்சம் என்று ஒரு படத்திற்கு வாங்குவதாகவும், 75,000 ரூபாய் வெள்ளைப் பணமாகவும், மீதி கறுப்புப் பணமாகவும் வைத்திருப்பவர்கள் என்று சொல்வது நியாயம்தானா? அதற்கு அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா? அதை நிரூபிக்கின்ற பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்களா என்று கேட்கிறேன். இல்லாவிட்டால் பேசக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வாங்கியவர்களே, பத்திரிகைக்காரர்களிடம், வாங்குவது உண்மைதான், வாங்குவதில் தவறில்லை, வேறு வழியில்லை என்று பத்திரிகை நிருபர்களிடத்தில் பேட்டி கொடுத்திருக்கிறார்கள்.

திரு. முனு ஆதி : 7 இலட்சம், 9 இலட்சம் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. முனு ஆதி அவர்களே தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். சின்னசாமி அவர்கள் யாரைச் சொன்னதாகக் கருதுகிறார்கள்?

[1973 ஆகஸ்ட் 8

திரு. முனு ஆதி : யாரைச் சொன்னர்கள் என்று அவர்கள் சொல்லட்டும், உறுப்பினர்கள், பேசுபவர்கள்தானே பொறுப்பேற்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் யாரைச் சொன்னர்கள் என்று கருதுகிறீர்கள் என்று சொன்னால் நல்லது.

திரு. முனு ஆதி : எங்கள் தலைவரைச் சொன்னர்கள். எங்கோ பிறந்து இங்கே ஓடிவந்து 9 இலட்சம், 7 இலட்சம் என்று ஒரு படத்திற்கு வாங்குவதாகவும், 75,000 வெள்ளைப் பணம் என்றும், மீதி கறுப்புப் பணம் என்றும் சொல்கிறார்கள். அவர் யார் என்று சொல்லச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்கள் தலைவரை என்று ஏன் நீங்கள் கருதுகிறீர்கள் ?

திரு. முனு ஆதி : வேறு யார் என்று சொல்லச் சொல்லுங்கள். அதைத் தெரிந்து கொள்ள வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யாரையாவது குறிப்பிட்டுச் சொன்னால்தான் ப்ரிவிலேஜ் எழுப்பலாம்.

Thiru K. T. K. Thangamani : Sir, I want to make a submission. பொதுவாக இந்த மன்றத்திலே இதற்கு முன்னால் கூட இம்மாதிரியெல்லாம் பேசப்பட்டது. குல்லாய்க்காரர், வயது வந்தவர் என்று இம்மாதிரி முறைகளிலே பேசுவதென்றால், வக்கணையாகவும் குத்தலாகவும் ஒவ்வொரு வருக்கும் பேசத் தெரியும். அப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால், மேடையிலே பேசுவதைப் போல் பேசக்கூடாது, அப்படிப் பேசுவது என்றால் எவ்வளவுக்கெவ்வளவு பேச வேண்டுமோ அப்படிப் பேச எங்களுக்கும் திறமையுண்டு, சாமர்த்தியம் உண்டு. இதில் என்ன எற்படுகிறது என்றால், நேரடியாக விஷயங்களை எடுத்துச் சொல்வதற்குப் பதிலாக மறைமுகமாகவும், குத்தலாகவும் பேசினால் மற்றவர்களுக்கு, இங்கே உள்ளவர்களுக்குப் புரியாதா ? இங்கேயிருப்பவர்கள்

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. டி. கே. தங்கமணி]

எல்லாம் புரிந்தவர்கள்தானே? எனவே இந்த முறையிலே பேசுவது சரியல்ல. இந்த முறையிலேயே எல்லோரும் பேசுவதற்கு அனுமதி ஏற்பட்டால் விவரங்கள் வராது.

மு.ப. 10-30

இதை டிஃபெண்ட் பண்ணுகிற நிலைமை ஏற்படுமானால் இது சரிதானா என்பதைத் தங்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குல்லாய்க்காரர், கிழவன் என்றெல்லாம் சொல்லும் அளவுக்கு வந்தால் அனுமதிக்க மாட்டேன்.

திரு. முனு ஆதி: என்னுடைய ஒழுங்குப் பிரச்சினைக்கு சபாநாயகர் இன்னும் தீர்ப்புக் கொடுக்கவில்லை. 'உங்கள் தலைவரைச் சொல்லவில்லை' என்று அவர் ஒத்துக்கொள்ளட்டும். இல்லையென்றால் யாரைச் சொல்லுகிறார் என்று நேரடியாகச் சொல்லட்டும். இப்படிப்பட்ட கோழைத்தனமான பேச்சு தேவையில்லை. தைரியம் இருந்தால் நேரடியாகப் பேசட்டும். இப்படிப் பேசுவதை சபாநாயகர் அவர்கள் அனுமதிப்பதாக இருந்தால் நானேக்கு நான் பேசும்போதும் அப்படிப் பேச முடியும். அப்போது நான் பேசும்போது நீங்கள் அனுமதிக்கவில்லையென்றால் அது நியாயமாக இருக்காது.

திரு. மு. சின்னசாமி: தலைவர் அவர்களே, நண்பர்கள் ஆத்திரப்படுகிறார்கள். இந்த நாட்டிலே வந்து கொள்ளையடிக்கிறார்கள், கோடீஸ்வரர்களாகிறார்கள் என்று நடப்பதை சாதாரணமாகச் சொன்னேன். எங்கோ பிறந்து இங்கே வந்து சர்க்காரை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று தமிழ்நாட்டில் பிறந்ததன் காரணமாக, தமிழ் மொழிப் பற்று காரணமாக, தாய்நாட்டின் மீது பற்று காரணமாகச் சொன்னேன்.

* * * ஆகவே . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: * * என்று சொல்லுவது சரியா? இதுதான் முறையா? இந்த முறையில்தான் எல்லோரும் பேசவேண்டுமென்று டைரக்ஷன் கொடுப்பதாக இருந்தால் எங்களுக்கும் நல்லதுதான். அதே முறையில் நாங்களும் பேசுவோம்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[1973 ஆகஸ்ட் 8

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. சின்னசாமி அவர்கள் * * * என்று சொன்ன வார்த்தைகளை அவை நடவடிக்கையிலிருந்து எடுத்து விட வேண்டுமென்று ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : [* * *] என்று சொன்ன வார்த்தைகளை அவை நடவடிக்கைக் குறிப்புகளிலிருந்து நீக்கி விடுமாறு ஆணையிடுகிறேன்.

திரு. கே. ஏ. மதியழகன் : எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து இங்கே தலைமை தாங்க வந்திருக்கிறார் என்று சொல்லுவது யாரை? இதுபற்றி சபாநாயகர் அறிந்து எங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். பெயரைச் சொன்னால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சில நேரங்களில் பொதுவான குற்றச்சாட்டுகளாகக் கூறலாம். அப்போது யாரைப் பற்றிக் குற்றச்சாட்டுச் சொல்கிறார் என்று கேட்க முடியாது.

திரு. கே. ஏ. மதியழகன் : எல்லாவற்றிலும் இல்லாவிட்டாலும் முக்கியமானவற்றில் கேட்கக்கூடாதா ?

திரு. க. சுப்பு : திரு. சின்னசாமி அவர்கள், தமிழகத்தில் கள்ள நோட்டு அடிப்பவர்கள், கள்ள மார்க்கட்காரர்கள், சூதாடுகின்றவர்கள், கள்ளப் பணம் சம்பாதிக்கின்றவர்கள் நிறைந்துவிட்டார்கள் என்று பேசுகின்றார்கள். அதுவே இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானத்திற்கு அஸ்திவாரமாக இருக்கிறது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, on a point of order. I was born in Kerala. I have been here in Tamil Nadu for 42 years. The people have elected me five times to the Corporation of Madras. They have also elected me to this Assembly last time . . .

எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து இங்கே வந்திருக்கிறார்கள் என்றால் தேர்ந்தெடுத்த ஒரு லட்சம் பேரும் 'இடியட்சா'? Am I not representing them ? I think this should be withdrawn because it is a direct insinuation against me.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

1973 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து இங்கே வந்திருக்கிறார் என்று சொல்லுவதில் குற்றம் இல்லை. தவறு செய்தார் என்று சொல்லுகின்ற நேரத்தில்தான் பாதிக்கும்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: அவர் சொன்னது தவறு.

I am a citizen of India according to the Constitution and you should protect me.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, அரசியல் சட்டம் வழங்கியிருக்கும் உரிமை இந்தியாவில் எந்தப் பகுதியில் பிறந்திருந்தாலும் யார் வேண்டுமானாலும் எங்கும் போக முடியும், வாழ முடியும், தலைமை தாங்க முடியும். அரசியல் சட்ட விதிகளுக்குப் புறம்பாக, அவையின் கண்ணியத்தைக் குறைக்கின்ற அளவுக்கு ஒரு உறுப்பினர் இங்கு 'எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து இங்கு வந்து தவறு செய்கிறார்' என்ற முறையில் பேசுவது சரியா? அப்படியானால் இங்கு இருப்பவர்கள் மட்டும் தவறு செய்வதற்கு உரிமை படைத்தவர்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த பாயிண்டுக்கு முதலிலேயே தீர்ப்புச் சொல்லிவிட்டேன்.

THIRU K. SUPPU: Sir, I am on a point of Order and let me finish my point of Order.

ஆகையால் அவையின் கண்ணியத்தைக் குறைப்பது மாத்திரமல்ல, அரசியல் சட்ட முறைகளுக்குப் புறம்பாகவும் பதப் பிரயோகங்கள் கையாளப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட முறைகேடான போக்குக்கு இப்போதாவது முற்றுப்புள்ளி வைக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலிலேயே தீர்ப்பு வழங்கி இருக்கிறேன். 'எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, எங்கோ வந்து' என்பதிலே தவறு இல்லை. இங்கு வருவதிலே தவறு இல்லை. இங்கு வரலாம், அவர்களுக்கு உரிமை இருக்கிறது. இங்கு வந்து தவறு செய்கிறார் என்ற பகுதி. . .

திரு. க. சுப்பு: தங்கள் தீர்ப்பே தப்பு. தாங்கள் சொல்வதே தவறு. . .

[1973 ஆகஸ்ட் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சுப்பு நீங்கள் உட்காருங்கள்.

(திரு. சுப்பு, திரு. துரைமுருகன், திரு. அழகர்சாமி, திரு. முனு ஆதி, திரு. கே. எம். சுப்பிரமணியம் மற்றும் சில உறுப்பினர்கள் எழுந்து நின்று கொண்டே ஒருவருக்கொருவர் உரத்த குரலில் பேசிக் கொண்டனர். சிலர் உட்கார்ந்தபடியே குரல் கொடுத்தனர்—கூச்சல்—குழப்பம்)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் ஆளும் கட்சி உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்வேன். ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக இல்லாவிட்டால் நாங்கள் வேண்டுமானால் வெளியேறிவிடுகிறோம். அதைத் தவிர வேறு வழி இல்லை. என்னதான் எதிர்க்கட்சியினர் வேகமாகப் பேசினாலும் இரு தரப்பிலிருந்தும் வேகமாகப் பேசி அமளி உண்டாக்குவதால் 'தமிழ்நாடு சட்டமன்றம் ஒவ்வொரு நாளும் அமளியோடு நடைபெற்றது என்ற அவப்பெயருக்கு தமிழ்நாடு ஆளாக வேண்டாம்' என்ற நிலையில் ஆளும் கட்சித் தலைவர்களும், நானும், அவை முன்னவரும் இங்கிருந்து வெளியேறுவதைத் தவிர வேறு வழி இல்லை.

நண்பர் சுப்பு அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். 'எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்து, இங்கு வந்து கள்ள மார்க்கட் போன்றவைகளில் ஈடுபடுகிறார்கள்' என்று சொன்னது இங்குள்ள உறுப்பினர்களைப் பற்றிச் சொல்லவில்லை. பொதுவாக நாட்டிலே இருப்பவர்கள் கள்ள மார்க்கட் போன்றவைகளில் ஈடுபடுகிறார்கள் என்ற முறையில் சொன்னதுதான் அது.

இங்கு உறுப்பினர்களாக இருக்கக்கூடியவர்களைப் பற்றிச் சொல்லியிருந்தால் எடுத்துக் காட்ட வேண்டியதுதான்.

திரு. க. சுப்பு: மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நடுவில் எழுந்து ஒரு படத்திற்கு எவ்வளவு வாங்குகிறார்கள் என்பது பற்றி அவர்கள் பத்திரிகைக்கே ஸ்டேட்மெண்ட் விட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். பெயரைச் சொல்லாமல் இந்த அளவுக்குக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பேசுவதெல்லாம் நடவடிக்கைக் குறிப்பில் இருப்பது சரியா? நாம் மரபை

1973 ஆகஸ்ட் 8] [திரு. க. சுப்பு]

உருவாக்க வேண்டும். மரபைக் காப்பாற்ற வேண்டும். சபாநாயகர் அவர்கள் அந்த வகையில் முனைந்து உறுதியோடு நடந்து கொள்வது நல்லது.

திரு. கே. எம். சுப்பிரமணியம் : ஆடு மாடு மேய்த்துக் கொண்டிருந்தவர்கள் தலைமை வகிக்க வந்து விட்டார்கள் என்று பேசுவது சரியா என்று சபாநாயகரைப் பார்த்துக் கேட்காமல் சபையில் யாரைப் போய்க் கேட்பது?

திரு. கே. கந்தசாமி : பாயின்ட் ஆப் ஆர்டர், சார். ஆரியர்கள் முதல் முதலில் இந்தியாவுக்குள் நுழைந்தபோது ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு வந்தார்கள் (கூச்சல்—குழப்பம்)

THIRU K. M. SUBRAMANIAM : I do not need that explanation.

திரு. கே. கந்தசாமி : இந்தியச் சரித்திரத்தைக் கண்ணுற்றுப் பார்க்கிறபோது இந்தியாவை ஆளுவதற்கு வந்தவர்களும் குறிப்பாக ஆரியர்களும் ஆடு மாடுகள் மேய்க்க வந்ததாகவும். (கூச்சலும் குழப்பமும்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கந்தசாமி, நீங்கள் உட்காருங்கள். திரு. சுப்பு அவர்கள் ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர் எழுப்பினர்கள். அவர்கள் எழுப்பியது, இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி எங்கு பிறந்தாலும் எங்கு வளர்ந்தாலும் இந்திய நாட்டில் வாழ உரிமை இருக்கிறது என்று சொன்னர்கள். அதை யாரும் மறுக்கவில்லை. எந்தவிதமான மறுப்பும் இல்லை. திரு. சின்னசாமி சொன்னதில் எங்கேயோ பிறந்து, எங்கேயோ வளர்ந்து என்பதில் அதுவரை தவறு இல்லை. இங்கே வந்து தவறு செய்தார்கள் என்பது. இங்கே இருக்கிறவர்கள் தவறு செய்தாலும் வெளியே இருந்து வந்து தவறு செய்தாலும், தவறுதான். அந்தப் பகுதிதான் தவறு. வெளியே இருந்து வருகிறவர்கள் இங்கே வாழக் கூடாது என்பதோ இருக்கக் கூடாது என்பதோ பொருள் அல்ல. அந்த உரிமையை யாரும் மறுக்கவில்லை. ஆகவே, அதில் எந்தவிதமான பாயின்ட் ஆப் ஆர்டரும் இல்லை.

[1973 ஆகஸ்ட் 8

திரு. முனு ஆதி : ஒரு படத்திற்கு ஏழு லட்சம், ஒன்பது லட்சம் என்று சொன்னார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதை நாமல்ல, பார்லிமென்டில் கூடச் சொல்லியிருக்கிறார்கள். சினிமா நடிகர்கள் எல்லோரும் அப்படித்தான் வாங்குகிறார்கள். அதை சினிமா நடிகர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள்.

திரு. முனு ஆதி : அவர்கள் ஏழு லட்சம், ஒன்பது லட்சம் ரூபாய் கள்ளப் பணம் என்று சொன்னது நியாயமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பேசுவதற்கு என் அனுமதி இல்லை.

திரு. முனு ஆதி : நான் உட்காருவதாக இல்லை.

திரு. மு. சின்னசாமி : எனது தலைவரின் ஆணைக்கிணங்க இந்தச் சூடான பிரச்னைக்கு இத்துடன் முற்றுப்புள்ளி வைத்து அடுத்த பிரச்னைக்கு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : திரு. முனு ஆதி திரும்பத் திரும்பக் கேட்பது, ரூ. 75,000 வெள்ளைப் பணம்; ஏழு லட்சம் அல்லது எட்டு லட்சம் ரூபாய் கள்ளப் பணம் வாங்குகிறார்கள் என்று சின்னசாமி அவர்கள் சொன்னார்கள். . .

திரு. முனு ஆதி : யாரை ? அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்கிறார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : யாரை, வாங்குகிறவர்களை. நான் பொறுப்பேற்றுக் கொள்கிறேன். (ஆரவாரம்.)

திரு. மு. சின்னசாமி : அடுத்து, நேற்றையதினம் மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் விலைவாசி உயர்வைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள். 1948-ம் ஆண்டு நான் சிறையில் இருக்கும்போது 'டு டே இந்தியா' என்ற புத்தகத்தைப் படித்தேன். அது சர்வதேச கம்யூனிஸ்ட் கட்சியின் மூலை என்று கருதக்கூடிய ரெஜினி பாம் டெட் எழுதிய புத்தகம். விலைவாசி உயர்வுக்கு ஒரு காரணம், சர்க்கார் தன்னிடம் உள்ள தங்கத்தின் அடிப்படையை வைத்து அதற்கு மேலாக ஒரு முக மதிப்பு

1973 ஆகஸ்ட் 8] [திரு. மு. சின்னசாமி]

வைத்து இவ்வளவு நோட்டுகள் என்று அச்சடிக்கிறார்கள். அச்சடிக்கும் நோட்டுக்களின் மதிப்பை வைத்து விலைவாசி ஏறும் என்று அவர்கள் எழுதியிருக்கிறார்கள். நான் ஒன்று கேட்கிறேன். மைய அரசு எவ்வளவு நோட்டுகள் அச்சடித்து எவ்வளவு மடங்கு விலை ஏறியிருக்கிறது என்பதை அரசியல் நுணுக்கம் தெரிந்த மதிப்பிற்குரிய கே. டி. கே. தங்கமணி அவர்கள் அறிவார்கள். அவர்கள் அந்தப் பிரச்னையை அணுகாமல் கழகத்தின் மீது சேற்றை வாரி பூச ஆசைப்படுகிறார்கள். அது சரியான முறை அல்ல. அடுத்து, திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது ஒரு பெரிய குற்றச்சாட்டைச் சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் மற்ற அரசியல் கட்சிகளுக்கும் இருக்கிற வித்தியாசத்திலே ஒன்று அடிப்படைக் கருத்தில் வேறுபாடு உண்டு. அரசியல் பிரச்னை, பொருளாதாரப் பிரச்னை இத்தனைக்கும் மேலாக அடித்தளம், ஆணி வேர் சமுதாயப் பிரச்னையாகும். சமுதாயப் பிரச்னை என்றால் தமிழகத்தில் ஜாதியை ஒழிக்க வேண்டும் என்பதை மூலப் பொருளாக, மையப் பொருளாக வைத்து உர்க்கப்பட்ட, வளர்க்கப்பட்ட இயக்கமாகும் திராவிட முன்னேற்றக் கழகம். மைலாப்பூர் கோவிலில், திருச்செந்தூர் முருகன் கோவிலில், பழனி ஆண்டவன் கோவில் * * * போகலாம் என்ற சட்டத்தைக் கொண்டு வந்தோம். இங்கு எங்கேயோ இருந்து வந்த ஆடு மாடுகள் மேய்க்கும் கூட்டம் அதை எதிர்த்து கோர்ட்டுக்குப் போயிற்று.

திருமதி த. ந. அனந்தநாயகி: * * * என்று சட்ட சபையில் சட்டத்திற்குப் புறம்பான வார்த்தைகளை உபயோகித்ததற்கு அதற்கு அவர் மேல் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். அவர்களை கோவில்களுக்குள்ளே அழைத்துச் சென்றது திராவிட முன்னேற்றக் கழகமா அல்லது காந்தி மகானா என்று சொல்ல வேண்டும்.

திரு. எஸ். வடிவேல்: வெளியே அப்படிச் சொன்னால் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள். மதிப்பிற்குரிய உறுப்பினர் * * * என்று சொல்வது எங்களை

---

* * * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

[திரு. எஸ். வடிவேல்] [1973 ஆகஸ்ட் 8

அவமதிக்கும் முறையில் பேசுவதாகும் என்று தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதை அவர்கள் வாபஸ் பெற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அந்த இரண்டு வார்த்தைகளையும் நிகழ்ச்சிக் குறிப்பிலிருந்து எடுத்து விடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன்.

திரு. மு. சின்னசாமி: அதற்கான சட்டத்தைக் கொண்டு வந்ததற்காக மேல் ஜாதிக்காரர்கள், மேட்டுக்குடி மக்கள் எல்லாம் எங்கள் மீது ஆத்திரப்படுகிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது யார் யார் ஆத்திரப்படுகிறார்கள் என்றால் சமுதாயத்தில் உள்ள மேட்டுக்குடி மக்கள், நிலச் சுவான்தார்கள், மூதலாளித்துவ சக்திகள் அத்தனை பேர்களும் ஒன்று சேர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை எதிர்ப்பதற்கு சோஷலிஸம் என்ற பெயரால் இயங்குகிற சக்திகள் அத்தனையும் திராவிட முன்னேற்றக் கழகத்தை சந்திக்க ஆசைப்படுகிறார்கள்.

அ.தி.மு.க. தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் தில்லிக்குச் சென்று மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து, உங்கள் கட்சிக்கு நிச்சயமாக செல்வாக்கு இருக்கிறது; கவலைப்பட வேண்டாம் என்று வாழ்த்து சொல்லி ஆசி வாங்கிய பிறகு மேல் நாடு சென்றிருக்கிறார். எனவே அவர்களுக்கும் கே. டி. கே. தங்கமணி அவர்களுக்கும் இடையே இருக்கிற காதலுக்கு அரசியல் காரணம் அல்ல. உண்மையில் திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு ஸயன்டிபிக் சோஷலிஸ்ட் பார்ட்டி. ஆகவே திராவிட முன்னேற்றக் கழகமும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியும், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியும் ஒரு அணியில் இருந்து வேலை செய்வதுதான் அரசியலில் நியாயமான தூரத்துப் பார்வை என்பதை மட்டும் எடுத்துச் சொல்லி, விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவையில் தீர்மானம் கொண்டு வந்திருப்பதால் உரிமைக் குழுவிற்கு விடவேண்டிய தேவையில்லை. இது அவையின் உரிமையை மீறிய குற்றமாகும். எனவே இதை உரிமைக் குழுவிற்கு அனுப்ப வேண்டிய தேவையில்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்தக் குற்றத்தை அந்தப் பெண்மணிதான் செய்ததா அல்லது இதற்குப் பின்னால் வேறு யாராவது இருக்கிறார்களா என்பதை முழு விசாரணை செய்து அதற்கப்புறம் தண்டிப்பது சரியாகயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை அவை விசாரிக்க முடியாது. குற்றம் செய்தவர்கள்மீதுதான் நடவடிக்கை எடுக்க முடியும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

DR. H. V. HANDE : Mr. Speaker, Sir, there is a motion before the House . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்மானம் நிறைவேற்றப்பட்டு விட்டது.

(2) அமைச்சரவையின்மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்—தொடர்ச்சி.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, நேற்று ஆரம்பிக்கப்பட்ட நம்பிக்கையின்மைத் தீர்மானத்தின்மீது விவாதம் இன்று தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வெங்கடசாமி அவர்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை எதிர்த்து பார்வர்ட் கட்சியின் சார்பாக இந்த அரசின் மீது முழு நம்பிக்கை மக்களுக்கு இருக்கிறது, இந்த அவை மீது நம்பிக்கை இருக்கிறது என்ற கருத்தைத் தெரிவிக்கும் பாணியில் என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. கந்தசாமி]

அவர்கள் கூறிய குற்றச்சாட்டுகள், இந்த நாட்டில் அமைதி இல்லை, ஒழுங்கு இல்லை, மக்கள் இந்த அரசின் மீது நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்பதாகும். ஏதோ பூச்சாண்டி காட்டுவது போல் 'மர்மப் பேழை' என்று சொல்லி அதன் மூலம் இந்த அரசின் மீது ஊழல் மலிந்து இருக்கிறது என்று சொல்லி, இந்த அரசின் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விட்டார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் கூறிய பல புகார்களுக்கும் ஆதாரப்பூர்வமாக சட்டமன்றத்திலும், வெளியேயும் சவால் கொடுக்கும் வகையில் பதில் அளித்தார்கள். அப்படியிருந்த போதிலும், அதையும் ஒரு குற்றமாகக் காட்டி இன்று இந்த நாட்டில் விலைவாசிகள் ஏறுமுகமாக இருக்கிறது, விலைவாசி உயர்வு மக்களுக்கு மிகவும் தொல்லை தருகிறது, வேலையில்லாத் திண்டாட்டம், இன்னும் பல போலீசார் அடக்குமுறை போன்றவையெல்லாம் உதாரணம் காட்டி பெரியகுப்பம் சம்பவங்களையெல்லாம் சுட்டிக்காட்டி, அரசின் மதுவிலக்குக் கொள்கையைக் கண்டித்து, இந்த அரசின் மீது நம்பிக்கையில்லை என்று இப்போது தீர்மானம் கொண்டு வந்திருக்கிறார்கள். இத்தனை காரியங்களுக்கும் அவர்கள் காட்டிய காரணங்கள் ஆதாரம் அற்றவை. உண்மை நிலைக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பதை இந்த நாட்டு மக்களும், இந்த சட்டமன்ற உறுப்பினர்களும் நல்ல வகையில் புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்வதற்கு ஆதாரம் இல்லை. ஆந்திரா போன்ற இடங்களில் பல விதமான துப்பாக்கிச் சூடுகள் அடிக்கடி நிகழ்ந்தவண்ணம் இருக்கின்றன. இங்கே எவ்வளவோ ஆத்திரமூட்டக் கூடிய சம்பவங்கள் நடைபெற்றப்போதிலும், அதிகாரத்தைப் பயன்படுத்தி அதை அடக்க முடிந்தபோதிலும், விவசாயப் போராட்டங்கள் நடத்தக்கூடிய காலத்தில் மிகவும் பொறுப்புணர்ச்சியோடு, மனிதாபிமானத்தோடு அந்தப் பிரச்னையை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அணுகுகிறார்கள். அப்படி அமைதியாக, அன்போடு நடந்து கொண்டதை நாம் காணுகிறபோது நாம் மகிழ்ச்சியடைந்தோம்.

[திரு. கே. கந்தசாமி] [1973 ஆகஸ்ட் 8

நாம் இன்றுதான் ஜனங்கள் மத்தியில் போலீஸ் அதிகாரத்தைக் காட்டியது இல்லை. கடந்த 20 ஆண்டு காலத்தில் எப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெற்று இருக்கின்றன என்பதைப் பார்க்க வேண்டும். மாண்புமிகு பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1965-ம் ஆண்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடந்தது. அந்தப் போராட்ட காலத்தில் தமிழ்நாட்டில் ரத்த வெள்ளம் ஓடியது. மானவர்களை எல்லாம் இரக்கம் இல்லாமல் காக்கை குருவிகளைச் சுடுவதுபோல் சுட்டுத் தள்ளினர்கள். போலீசார்மீது வண்டியை ஏற்றி பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தினர்கள். அப்படிப்பட்ட அடக்குமுறையெல்லாம் நடைபெற்று இருக்கிறது.

நம்முடைய நண்பர் ராஜாங்கம், பாராளுமன்ற உறுப்பினராக இருந்தவர்—இப்போது அவர் இங்கு இல்லை—அவர் கூடலூரில் அமைதியை நிலைநாட்டுவதற்காக போலீசாருக்கு உதவச் சென்ற போது அவரையும் கைது செய்து 1-வது எதிரியாகப் போட்டு விட்டார்கள். அவரை அன்-லா புல் கஸ்டடியில் வைத்திருந்தார்கள நான் கூட அப்போது சென்று அவரைப் பார்த்து வந்தேன். அவரை இரவு 1 மணிக்கு மேல் 3 மணிக்குள் சுட்டுத் தள்ளிவிட வேண்டுமென்று திட்டம் போட்டிருந்தார்கள். அங்கேயிருந்த மக்கள் எழுப்பிய குரலின் காரணமாக அவரை உள்ளே தள்ளி சித்திரவதை செய்தார்கள். ஆயிரக்கணக்கான அப்பாவி மக்கள் மீது கேஸ் போட்டார்கள்.

அத்தனை கொடுமைகளைப் பார்த்தோம். இத்தனைக்கும் சிகரம் வைத்தார்போல் 1957-ல் முதுகுளத்தூர் சம்பவம். இந்த மன்றத்தில் அது குறித்து பல முறை பேசப்பட்டிருக்கிறது என்ற காரணத்தால் கூறுகிறேன். உலகத்தில் எங்குமே நடக்காத கொடுமை அது. பட்டப்பகலில் வெட்ட வெளியில் கண்ணை, கையைக் கட்டிவிட்டு ஒரு அநாகரீகமான முறையில் மக்களை சுட்டுத் தள்ளினர்கள். அப்படிப்பட்ட முறையிலா இன்றைய தினம் ஆட்சி நடத்துகிறார்கள்? இன்று எவ்வளவு கொடூரமான, கொந்தளிப்பான சூழ்நிலை இருந்தாலும், கலைஞர் அரசு போலீசாருக்கு ஒரு ரகசியமான உத்தரவு போட்டு இருக்கிறது. துப்பாக்கியால் சுடக்கூடாது. மிகவும் அத்தியாவசியமாக இருந்தால் கூட பெரிய அதிகாரிகளை வைத்துக்கொண்டுதான்

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. கந்தசாமி]

சமாளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உண்மையிலேயே நம்முடைய முதலமைச்சர் அவர்கள்தான் மிகவும் ஜனநாயகப் பண்பாட்டைக் கடைபிடித்துக் கொண்டு வருகிறார்கள். ஒரு உதாரணத்திற்கு சொல்கிறேன். திரு. பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது மதுரைக்கு வந்திருந்தார்கள். அவரை வக்கீல்கள் சங்கத்தின் சார்பாகச் சந்திக்கச் சென்றிருந்தோம். மதுரையில் இருக்கும் நீதிஸ்தலம் மிகவும் அபாயகரமான சூழ்நிலையில் இருக்கிறது. அங்கே ஜனங்கள் வந்து போகும் இடம். ஆகவே, புதிய நீதிஸ்தலத்தை கட்டித் தரவேண்டுமென்று வேண்டுகோள் விடுப்பதற்காக வக்கீல்கள் சங்கத்தின்சார்பாக நாங்கள்—சில பிரதிநிதிகள் சென்றிருந்தோம். அவர்கள் சுற்றுலா மாளிகையில் இருந்தார்கள். பேட்டி காண்பதற்காக அவருக்குத் தகவல் அனுப்பி இருந்தோம். அவர் அதற்கு என்ன பதில் அனுப்பினர் தெரியுமா—அதற்காக அவர்கள் வாய்க்கு சர்க்கரை போட் வேண்டும்—மதுரை ராமநாதபுரம் வக்கீல்கள் சங்கத்தினர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது அரசாங்கத்தை ஆதரிக்கவில்லை, அதற்குப் பதிலாக நாங்கள் செய்தது தவறு, ராஜினாமா செய்ய வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றினீர்கள். ஆகவே உங்களுக்கு நான் இன்டர்வியூ கொடுக்க மறுக்கிறேன். உங்களுடைய கோரிக்கையை நீங்கள் விரும்புகிற அரசு வருகிற போது நிறைவேற்றித் தருவார்கள் என்று சொல்லிவிட்டார். நாங்கள் விரும்பிய அரசும் வந்தது. இப்போது புதிதாக அங்கே நீதிஸ்தலமும் கட்டியாகிவிட்டது. அப்படிப்பட்ட முதலமைச்சரவர்களையெல்லாம் தமிழகம் கண்டிருக்கிறது.

ஆனால், இன்றைக்கு இருக்கும் முதலமைச்சர் எப்படி நடந்து கொள்கிறார் என்பதைப் பார்க்க வேண்டும். விவசாயத் தலைவர்கள் சிலர் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களை விடுதலை செய்ய வேண்டும், அப்போது தான் பிரச்னையைப் பேசித் தீர்ப்பது எதுவாக இருக்கும் என்று இங்கே வேண்டுகோள் விடுத்த நேரத்தில், அதை உடனடியாக ஏற்றுக்கொண்டார்கள். இப்படி நியாயப்பூர்வமான கோரிக்கைகளை எழுப்பும்போது அதை

[திரு. கே. கந்தசாமி] [1973 ஆகஸ்ட் 8

மனிதாபிமான உணர்ச்சியோடு ஏற்றுக்கொள்கிற முதலமைச்சர் கலைஞர் அவர்களே இந்த நாடு பாராட்டுகிறது. நானும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திண்டுக்கல்லைப் பற்றி மிகப் பிரமாதமாகப் பேசினர்கள். பூ இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை என்பார்கள். அதுபோல் புதிதாக ஆரம்பித்து இருக்கும் கட்சிக்கு ஒரு நம்பிக்கை தரும் வாய்ப்பாக அது அமைந்து இருக்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: பூ இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை என்று சொல்கிறீர். சர்க்கரை இல்லாத ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை . . .

திரு. கு. காமாட்சி: நீங்கள் சொன்னது கூட தவறு. ஆலியில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சர்க்கரை'.

திரு. கே. கந்தசாமி: திருத்திக்கொள்கிறேன். நன்றி. ஜனநாயக நாட்டில் வெற்றி தோல்வி என்பது சர்வ சாதாரணமாக உள்ள ஒன்று. அது மாறிமாறி வருவது இயல்பு. 1967-ல் நடைபெற்ற தேர்தலில் நாடு முழுவதும் பெருத்த மெஜாரிட்டியோடு வந்த கட்சிகள், 1971-ல் படுதோல்வி அடைந்து இருக்கின்றன. 1971-ல் சில மாநிலங்களில் ஆட்சிக்கு வந்த இந்திரா காங்கிரஸ் கட்சி சில மாதங்களுக்குள்ளேயே தன்னுடைய நிலையை இழந்து இருப்பதை மறந்து விடக் கூடாது. அதோடு அரசியல் ரீதியில் தமிழ்நாட்டில் செல்வாக்கை 1967-ல் இழந்து விட்ட காங்கிரஸ் கட்சியின் தலைவர் காமராஜர் பிறகு நடைபெற்ற இடைத் தேர்தலில் வெற்றி பெற்றார். ஆகவே தேர்தலில் வெற்றி பெறுவதும் தோல்வியடைவதும் நிரந்தரமான ஒன்றல்ல. இதை நான் சொல்வதற்குக் காரணம் வெற்றி ஒரு சந்தர்ப்பத்தில் ஏற்பட்டால் அது நிரந்தரமான வெற்றி என்று பொருள் கொள்ளக் கூடாது என்பதற்காகத்தான்.

மு.ப. 11-00 டாக்டர் ஹாண்டே அவர்கள் இங்கே பேசுகிறபோது மிக ஆவேசமாகப் பேசினர்கள். ஆதாரத்தோடு பேசுகிறேன், செல்ஃப்-ரெஸ்பெக்ட் இருந்தால் ராசினமா செய்யுங்கள் என்று முதலமைச்சர் அவர்களைக் குறிப்பிட்டே பலமுறை சொன்னர்கள். செல்ஃப் ரெஸ்பெக்ட் என்ன என்பதை அவர்கள் பதில் மூலமாக

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. கந்தசாமி]

விளக்கிவிட்டார்கள். அந்த அளவுக்கு ஆத்திரப்பட வேண்டியதில்லை. இன்னும் வரப்போகிற கால மாற்றத்தில் மக்களுடைய மன நிலைமைகளைப் பொறுத்துத்தான் வருகிற தேர்தல்களின் முடிவுகள் இருக்குமே ஒழிய, அதை விட்டுவிட்டு, ஏதோ திண்டுக்கல்லில் வெற்றி பெற்றுவிட்டால் அந்த ஒன்றை வைத்துக்கொண்டு 'நாங்கள் எல்லாம் வெற்றி வீரர்கள், மற்றவர்களெல்லாம் கோழைகள், மக்களுடைய நம்பிக்கைக்கு பாத்திரமாகாதவர்கள் என்று கூறுவது அரசியல் விவேகமாகாது என்பதைக் கூறி, இந்த விஷயத்தை இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

மர்மப் பேழையைப் பொறுத்த அளவிலே ஒன்றுமே இல்லாத ஒன்றை பெரிதுபடுத்திப் பேச வேண்டிய அவசியமில்லை என்ற நிலையில் அதையும் விட்டுவிடுகிறேன்.

அடுத்தாற்போல் 'ஸோரிங் பிரைஸஸ்' விலைவாசி உயர்வைப் பற்றி திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் மிகத் தெளிவாகவும் தீவிரமாகவும் பேசினார்கள். அவர்கள் நிர்மாணத்தை ஆதரித்துப் பேசும்பொழுது சொன்னார்கள். நான் ஒன்றைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். நேற்று பேசுகிறபொழுது மாண்புமிகு கந்தப்பன் அவர்கள் தெளிவாகச் சொன்னார்கள். மத்திய அரசு தான் அதற்குப் பொறுப்பு என்ற விவரத்தைச் சொன்னார்கள். அதற்கு ஆதாரமாக மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியின் பேரில் இன்றைய இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வந்திருக்கிற ஒரு செய்தியைப் படித்துக் காட்ட விரும்புகிறேன்.

Black money in circulation far in excess of given figures என்ற தலைப்பின் கீழே 7-வது பக்கத்தில் எக்ஸ்பிரஸ் பத்திரிகையிலே வெளியிடப்பட்டிருக்கிறது. பாராளுமன்ற உறுப்பினர்கள் பல கட்சியைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர் D. D. Puri (Congress) warned Government that the present rise will eat us alive, if no acceptable solution was found to this problem. In his view, black money was exerting a colossal

' pressure on the economy. Mr. Puri said that as long as the present system of financing election continued, the menace of black money would not be curbed. '

என்ற விவரத்தை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். பிளாக் மணி, கறுப்புப் பணம் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு இந்த நாட்டில் நடமாடுகிறது, சுழலுகிறது. பொருளாதார நிலை சம்பந்தமாக அவர்கள் தீட்டியிருக்கிற திட்டங்களினால் இப்பொழுது கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு விலைவாசி உயர்வு ஏற்பட்டுவிட்டது என்ற நிலையை தெரிவித்திருக்கிறார்கள். அதைப்போலவே திரு. பகவதி பேசியிருக்கிறார்கள். அதுவும் வெளியிடப்பட்டிருக்கிறது. . .

திரு. க. சுப்பு : ஆன் எ பாயிண்டு ஆஃப் ஆர்டர். ஒருவர் பேசும்பொழுது பேப்பரிலிருந்து வாசிக்கலாமா. அப்படி வாசிக்கலாம், வாசிப்பதற்கு 'நோ அப்ஜெக்ஷன்' என்று தாங்கள் சொல்லிவிட்டால் நாங்களும் பேசும்பொழுது அம்மாதிரி பேப்பரிலிருந்து வாசிக்கலாம். அப்படி வாசிப்பது விதிமுறையின் படி சரிதானு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் முன்பே சொல்லி விட்டேன். பேப்பரிலிருந்து படிக்கக்கூடாது என்று சொல்லி விட்டேன். குறிப்புகளை மட்டுமே சொல்ல வேண்டும், படிக்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறேன்.

திரு. க. சுப்பு : அப்படி தாங்கள் சொல்லியதையும் மீறி உறுப்பினர் அவர்கள் படிக்கலாமா ?

திரு. கே. கந்தசாமி : காண்டெக்ஸ்டுக்காக ஒன்றிரண்டு வரிகளை கோட் செய்தேனே தவிர, அது விதிகளுக்கு முரணாக இருக்குமானால் அதை விட்டுவிடுகிறேன். பகவதி அவர்கள் பேசுகிறபொழுது

' the authorities are playing fraud on the people by releasing wrong figures of whloesale and consumer prices. '

என்று கூறியிருக்கிறார். அதாவது, மத்திய அரசாங்க அதிகாரிகள் தவறான புள்ளிவிவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரத்தை அவர்கள் பேசியிருக்கிறார்கள்.

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. கந்தசாமி]

அதே போல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. குப்தா அவர்கள் பேசுகிறபொழுது நாட்டிலே இன்று விலைவாசி உயர்வு மிக அதிகமாகப் போய்விட்டது, மக்களுடைய அன்றாட தேவைகளுக்கு வேண்டிய பொருள்களெல்லாம் விலை உயர்ந்து கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு போய் இருக்கிறது. 1965-ல் ஒரு ரூபாயின் மதிப்பு 25 பைசாவாக இருந்தது என்று வைத்துக்கொண்டால் இன்று ஒரு ரூபாயின் மதிப்பு நான்கு மடங்காக உயர்ந்திருக்கிறது. இதற்கு மத்திய அரசு தான் பொறுப்பு என்ற விவரத்தை அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

ஆக, இதை நான் குறிப்பிட்டதற்குக் காரணம் மாண்புமிகு தங்கமணி அவர்கள் மாநில அரசு தான் விலைவாசி உயர்வுக்குக் காரணம், ஆகவே, இந்த அரசு பதவியிலிருந்து இறங்க வேண்டும் என்ற கருத்தைச் சொன்னார்கள். இந்த விலைவாசி உயர்வுக்குக் காரணம் இந்த மாநில அரசு மாத்திரம் அல்ல, மத்திய அரசு முழு பொறுப்பு என்ற விவரத்தை அவர்களுடைய கொள்கையை, கோட்பாடுகளை பின்பற்றுகிறவர்கள், தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரஸ்தாபித்திருக்கிறார்கள். அவசியம் ஏற்படுகிறபொழுது அத்தனை மாநில முதல் அமைச்சர்களையும் சந்தித்து விலை உயர்வை எப்படித் தடுப்பது என்பது பற்றி கலந்து விவாதிப்பதாக இந்திரா காந்தி அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் அதற்கான கூட்டத்தைக் கூட்ட இருக்கிறார்கள் என்ற விவரத்தை இன்றைய பத்திரிகையிலே நாம் பார்க்கிறோம். ஆகவே, இந்த மாநில அரசு மாத்திரம் பொறுப்பு என்று சொல்லிவிட்டால் மட்டும் பிரச்னை தீர்ந்துவிடாது.

இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன்: விலைவாசியினுடைய உயர்வுக்கு நாட்டில் நடமாடுகின்ற கட்டுப்படுத்த முடியாத பிளாக் மணி சர்குலேஷனைப் பொறுத்து ஒரு தீர்வு காண்பதற்கு நம்முடைய அரசு மாத்திரம் முழுப் பொறுப்பு அல்ல என்ற நிலை இருந்தாலும் கூட, அதற்குரிய ஆலோசனைகளைக் கேட்பதற்கு மாற்றுக் கட்சியினர்களைக்

[திரு. கே. கந்தசாமி] [1973 ஆகஸ்ட் 8

கூப்பிட்டு வைத்து அத்தனை தலைவர்களையும் ஆலோசனை கேட்டு, அதற்கான ஒரு நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது.

திரு. கே. கந்தசாமி : இன்னும் பல விவகாரங்கள் இருந்தாலும், இந்த அரசு மிகச் சிறந்த அரசு, நல்லதைச் செய்கிற அரசு என்று நான் கூறிக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஒன்று மாத்திரம் சொல்லிக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். மதுரை டி.ஆர்.ஓ. அவர்களைப் பற்றி அதிகார துஷ்பிரயோகம் செய்கிறார் என்று திரு. தங்கமணி அவர்கள் வன்மையாகக் கண்டித்தார். அதற்கு ஆதாரமாகக் கூட சில விவரங்களைக் கொடுப்பதாகச் சொன்னார். கொடுத்தால் அதற்கு தக்கபடி நடவடிக்கை எடுப்பதாக முதல்வர் அவர்களும் உறுதி கொடுத்திருக்கிறார்கள். டி.ஆர். ஓ. வீட்டுக் கலியாணத்திற்கு திருப்பறங்குன்றத்திற்கு போயிருந்த பல விருந்தினர்களில் நானும் ஒருவன். நான் அங்கே போயிருந்தேன். உற்றார், உறவினர், நண்பர்கள் சாதாரணமாக திருமண விழாக்களின் பொழுது என்ன பரிசு கொடுப்பார்களோ அதைத் தான் வழங்கினார்கள். அதுதான் அங்கே நடந்ததே ஒழிய யாரும் வந்து ஏதோ அதிசய பரிசுகளை கொடுத்ததை நான் அறியேன். இதை நேரிடையாக அறிந்ததால் சொல்கிறேன். அப்படிப்பட்ட அதிகாரிகளின் மீது தங்களைச் சார்ந்தவர்களுக்கோ அல்லது தங்களுடைய கட்சிக்காரர்களுக்கோ ஏதோ சலுகை செய்யவில்லை என்ற ஒரு காரணத்திற்காக இப்படி வேறு காரணங்களைச் சொல்லி குற்றம்சாட்டுவது அவ்வளவு சிறப்பு அல்ல. ஆதார பூர்வமாக நிரூபித்தால் அதன் பேரில் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கிறபொழுது நியாயமாக நடந்துகொள்கிற அதிகாரிகளின் மனது புண்படும்படி இங்கே பேசவேண்டிய அவசியம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. க. சுப்பு : எங்கள் கட்சிக்காரர்களுக்கு ஏதோ சலுகை செய்யவில்லை என்று வேண்டுமென்றே குற்றம் சாட்டுவதாக அவர்கள் பேசுகிறார்கள். . .

1973 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள், உங்கள் கட்சித் தலைவர் அதற்குப் பதில் சொல்வார்கள் வேண்டுமென்றால், எல்லா உறுப்பினர்களும் பேச முடியாது. உங்களுக்கு வாய்ப்பு வரும்பொழுது பேசுங்கள்.

THIRU K. KANDASAMY : I am not yielding.

திரு. க. சுப்பு : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர். ஒரு கட்சியைப் பற்றி பேசும்பொழுது கட்சி உறுப்பினர்கள் அதைப்பற்றி சொல்வதற்கு உரிமை இருக்கிறதா, இல்லையா ?

THIRU K. KANDASAMY : I am not yielding.

THIRU K. SUPPU : On a point of order, Sir. When the leader of the party is absent, canot other members of the party raise point of order, if the party is atacked?

எங்கள் கட்சியைப் பற்றி சொல்லும்பொழுது அந்தக் கட்சி உறுப்பினருக்கு அதைப்பற்றி விளக்குவதற்கு உரிமை இருக்கிறதா, இல்லையா. தலைவரைப் பற்றி அவர் சொல்லவில்லை. கட்சித் தலைவர் அவர்கள் வருகிற வரைக்கும் காத்திருக்க வேண்டுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உரிமை இல்லை. யார் வேண்டுமானாலும் குறுக்கிட்டுப் பேசுவது என்பது கூடாது. திரு. தங்கமணி அவர்கள் பேசும்பொழுது திரு. கந்தசாமி அவர்கள் எழுந்து குறுக்கிட்டுச் சொல்லவில்லை. கந்தசாமி அவர்களுக்கு பேசுகிற வாய்ப்பு வரும்பொழுது அவர்கள் அதைப்பற்றி பேசுகிறார்கள். அதுபோல உங்களுக்கு பேசுகிற வாய்ப்பு வரும்பொழுது நீங்கள் கந்தசாமி அவர்களை மறுத்துப் பேசலாம். அதுதான் முறை.

திரு. க. சுப்பு : அவர் தங்கமணி அவர்களைப் பற்றி பேசவில்லை. கட்சியைப் பற்றி அவர் சொன்னார். கே. டி. கே. அவர்களைப் பற்றி அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்பு கிடைக்கும்பொழுது இதைப்பற்றி சொல்லுங்கள்.

[பேரவைத் தலைவர்] [1973 ஆகஸ்ட் 8

அவ்வப்பொழுது எழுந்து உங்கள் கட்சி சார்பிலே பதில் சொல்ல வேண்டாம். நீங்கள் அடுத்து பேசும்பொழுது இதைப்பற்றி கூறுங்கள்.

திரு. கே. கந்தசாமி : ஆகவே அப்படி அதிகாரிகள் மீது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். தங்கமணி அவர்கள் ஏதோ சொல்ல விரும்புகிறார்கள் ; அவர்கள் சொல்லட்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், என்னுடைய பெயரை இங்கே இழுத்ததால் வெளியிலே இருந்து ஓடி வருகிறேன். நான் நேற்று இதுபற்றி சில விபரங்களைச் சொன்னேன். நான் பதில் சொல்லும்போது மேலும் சில தகவல்களைச் சொல்லிக் கொள்ளலாம் என்று ஓரளவில் நிறுத்திக் கொண்டேன். டி. ஆர். ஓ. வைப் பற்றி நான் நேற்று சொல்லும்போது பொறுப்போடுதான் சொன்னேன். யார் யார் பிரசென்ட் செய்தார்கள், யார் யார் எவ்வளவு பணம் கொடுத்தார்கள் என்பதைப்பற்றி எல்லாம் ஆதாரத்தோடுதான் சொன்னேன். அதே டி. ஆர். ஓ. அதிக விலைக்கு விற்க உத்தரவு போட்டார். அதாவது டி. எஸ். ஓ. போட்ட உத்தரவை மீறி ரூ 1.05-க்கு விற்க வேண்டுமென்று டி. எஸ். ஓ. வுக்கு அதிகாரம் இல்லாததைப்போல அவரே உத்தரவு போட்டிருக்கிறார். ஆகவே, அவர்தான் விலைவாசி ஏற்றத்திற்கு காரணமாக இருந்தார், தவறு செய்தார் என்று நான் சொன்னேன். முதலமைச்சரவர்கள் அதைப்பற்றி விசாரித்து நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். அதுபற்றி மேலும் சில விபரங்களைக் கேட்டார்கள். நானும் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். அந்த அதிகாரி மீது எனக்கு விருப்பு-வெறுப்பு கிடையாது. அவர் ரிட்டயர் ஆகப்போகிறார். அவர் தவறான முறையில் சம்பாதித்த பணத்தை அரசு விட்டுவிடாது என்ற எண்ணம் அவருக்கு ஏற்பட வேண்டும். அதுதான் என் நோக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னால் அதை மறுத்துச் சொல்ல இன்னொரு உறுப்பினருக்கு உரிமை இருக்கிறது.

1973 ஆகஸ்ட் 8]

திரு. கே. கந்தசாமி: அந்த அதிகாரி தவருன முறையில் பணம் சம்பாதித்தாரா இல்லையா என்பது இன்னும் விசாரணையில் இருக்கும்போது தவருன முறையில் சம்பாதித்தார் என்று சொல்வது அவ்வளவு சிறப்பாக இல்லை என்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ 5 பைசா கூட்டி விற்கவேண்டுமென்று உத்தரவு போட்டார் என்று சொல்கிறார்கள். நேற்று கூட கோதுமை இறக்குமதி செய்து விற்றதில் பெரும் லாபம் வந்திருக்கிறது என்று எழுத்து மூலமாக தெரிவித்தார்கள். அவர் வியாபாரத்தின் நுணுக்கம் நன்றாகத் தெரிந்தவர். வியாபாரம்—ஏற்றுமதி, இறக்குமதி, போக்குவரத்து சம்பந்தமாக அட்மினிஸ்டிரேட்டிவ் எக்ஸ்பென்ஸ் ஓரளவு இருக்கும். அதை எல்லாம் கணக்கிட்டுப் பார்த்து, நியாயமான விலை நிர்ணயம் செய்யப்பட்டு, சட்டத்திற்கு உட்பட்டு, லாபம் சம்பாதிக்கப் பட்டிருக்கிறது என்ற விபரம் தான் உண்மையானது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். உணவு உற்பத்தியைப் பொறுத்த வரையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் முடியுங்கள். நீங்களே நேரத்தை நீட்டிக்கொண்டு போனால் உங்கள் கட்சியைச் சேர்ந்த மற்றவர்கள் பேசுவதற்கான வாய்ப்பு குறைந்துவிடும்.

திரு. கே. கந்தசாமி: இன்னும் ஒன்றை மட்டும் சொல்லிக் கொண்டு முடித்துவிடுகிறேன். உணவு உற்பத்தியில் எல்லா மாநிலங்களும் தமது மாநிலத்தைப் பாராட்டுகின்ற அளவுக்கு, மத்திய அரசாங்கம் கௌரவமாக நம்முடைய அரசை பாராட்டுகின்ற அளவுக்கு நாம் தன்னிறைவு பெற்றிருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் வேறு மாநிலங்களுக்கு உதவி செய்யக்கூடிய அளவுக்கு முன்னேறியிருக்கிறோம். கன்னியாகுமரியில் ஏதோ சில தவறுகள் நடந்துவிட்டதாகவும் அரிசி கிடைக்கவில்லை என்றும் சொன்னார்கள். அதற்கு உரிய நடவடிக்கைகள் இந்த அரசினால் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே இப்படி பல்வேறு வகைகளிலே சிறப்பாக விளங்குகின்ற இந்த அரசைப் பாராட்டி, இந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தேவையில்லாதது. வேண்டுமென்றே காழ்ப்புணர்ச்சியோடு கொண்டுவரப்பட்ட

[திரு. கே. கந்தசாமி] [1973 ஆகஸ்ட் 8

தீர்மானம் இது என்று கூறி, இந்தத் தீர்மானத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன் என்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. வை. பாலசுந்தரம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவரவர்களே, சட்டமன்றம் கூட்டப்படுவதும், அதிலே எதிர்க் கட்சிக்காரர்கள் நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டுவருவதும் ஒரு வாடிக்கையான செய்தியாகிவிட்டது என்பதை எடுத்துக் கூற எனக்கு உரிமை உண்டு என்ற முறையிலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொண்டு வந்து ஒரு உறுப்பினர் பேசுகிறபோது, எதிரிலே இருக்கின்ற அமைச்சர்களைப் பார்த்து "இன்றைக்கே வா, தேர்தலிலே நிற்போம், உனக்கு என்ன நிலை எற்படுகிறது பார்" என்று பேசுவதும் ஒரு வாடிக்கையான செய்தியாகிவிட்டது.

நான் இன்றையதினம், பேரவைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாக அப்படிப்பட்டவர்களுக்கு தெரிவித்துக்கொள்வதெல்லாம், "காட்டிக் கொடுக்கின்ற துரோகிகளே, நாணயமற்றவர்களே என்றைக்குமே தமிழகம் வாழ வைத்ததில்லை என்ற சரித்திரத்தை வரலாற்றுச் சுவடிகள் அறிவிக்கின்ற பாடமாக இருக்கிறது" என்பதுதான். அதைத்தான் நான் தங்கள் மூலமாக காட்டிக் கொடுக்கின்ற துரோகிகளுக்கு, கட்சிமாறிகளுக்கு இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அகில இந்தியாவிலே, அமைதியாக, மிகப் பெருமையாக, மிக உறுதியாக நிலையான ஒரு ஆட்சியாக இருப்பது தமிழகத்தில்தான் என்று மிகப் பெரிய அரசியல் வாதிகள் எல்லாம், அரசியல் விற்பன்னர்கள் எல்லாம் பாராட்டிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில், இந்த ஆட்சியின் மீது மதிப்பும் மரியாதையும் ஏற்படுவதை காணச்சகியாதவர்கள், பொறுக்காதவர்கள், காழ்ப்புணர்ச்சியோடு புழுதி வாரி தூற்றுகிறார்கள் என்று எண்ணும்போது எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது என்பதை தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 8] [திரு. வை. பாலசுந்தரம்]

இந்த ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறவர்கள், எந்தக் காரணத்திற்காக அப்படிச் சொல்கிறார்கள் என்று எண்ணிப் பார்க்கின்றபோது, நேற்றும் இன்றும் பேசிய நண்பர்கள் எல்லாம் சொன்ன குற்றச்சாட்டு திண்டுக்கல்லிலே என் இந்த ஆட்சி மதிப்பை இழந்துவிட்டது; திண்டுக்கல்லில் என் இந்த கழகம் மரியாதையை இழந்துவிட்டது என்று முதலிலே குறிப்பிட்டார்கள். அப்படிக் குறிப்பிட்டுவிட்டு, அதனால் இந்த அரசு இராஜினாமா செய்ய வேண்டும் அதுதான் இந்த ஆட்சிக்குப் பெருமை என்று சொன்னார்கள். அப்படிப் பட்டவர்களுக்கு எல்லாம், தலைவர்களே, தங்கள் மூலமாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, இந்தமாதிரியான நிகழ்ச்சி ஒன்றும் புதியதல்ல. நாடாளுமன்றத்திலே சில வருடங்களுக்கு முன்பு ஒரு முறை நேரு அவர்கள் பிரதம அமைச்சராக இருந்தபோது பல இடங்களில் காங்கிரஸ் கட்சி தோல்வியை அணைத்துக் கொண்டது. அப்போது எதிர் முகாமிலே இருந்தவர்கள், பண்டித நேரு அவர்களைப் பார்த்து, 'உங்கள் கட்சி தோல்வியை தழுவிக்கொண்டே வருகிறது; அதனால் நீங்கள் இராஜினாமா செய்வதுதான் அரசியல் நாகரிகம்' என்று சொன்னார்கள். அதற்கு மதிப்பிற்குரிய நேரு அவர்கள், 'உங்களுடைய வாதத்தை நான் மறுக்கிறேன்' என்று சொல்லி, 'ஒன்றிரண்டு இடங்களிலே ஆளும் கட்சி தோற்றுவிட்டது என்ற காரணத்திற்காக என்னை இராஜினாமா செய்யச் சொல்கிறீர்கள். ஆனால் பல பாகங்களிலிருந்து வெற்றி பெற்று வந்திருக்கிற நூற்றுக்கணக்கான உறுப்பினர்களை வைத்து நான் எங்கே போய் ஆள்வது, இராஜ்ஜிய பரிபாலனம் செய்வது' என்று பதில் சொன்னார்கள்.

அரசியலில் வெற்றி தோல்வி என்பது சர்வசாதாரணமான தாகும். அரசியல் விற்பன்னர்களுக்கு அது நன்றாகத் தெரியும். அதற்கு இன்னும் ஒரு சான்றினைத் தெரிவிக்க விரும்புகிறேன். சமீபத்தில் வங்காள தேசம் விடுதலைப் பெற்று, அதை மனிதாபிமான உணர்ச்சியோடு பாரத நாடு அங்கீகாரம் செய்தது; உலக நாடுகளும் அதை அங்கீகரித்துவிட்டன. அந்த வங்கத்தின் சிங்கமாக முஜிபுர் ரகிமான் விளங்கி வருகிறார்கள். அதை இந்த நாடு நன்றாக அறியும்; இந்த அவையும் நன்றாக அறியும். அந்த வங்கத்தின் சிங்கம் முஜிபுர் ரகிமான் பதவியேற்று

[திரு. வை. பாலசுந்தரம்] [1973 ஆகஸ்ட் 8

ஓராண்டு காலம் கூட ஆகவில்லை என்று கருதுகிறேன். அவருடைய தலைமையிலே அந்த நாட்டின் விடுதலைக்காக நடத்தப் பெற்ற போராட்டத்தில் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடியது. அந்த இரத்தப் பசை கூட இன்னும் காயவில்லை. அந்த நாட்டிலே அண்மையில் நடைபெற்ற இடைத்தேர்தலில் இரண்டு இடங்களில் முஜிபுர் ரகிமான் கட்சி தோல்வியை அணைத்துக் கொண்டது. உடனே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் 'நீங்கள் இராஜிநாமா செய்யுங்கள்' என்று சொன்னார்களா என்று பார்த்தால் இல்லவே இல்லை. அரசியல் தெளிவு பெற்றவர்கள் அங்கே இருக்கிறார்கள் என்பதைத் தான் அது நமக்கு உணர்த்துகிறது.

அவ்வளவு தூரம் போவானேன். இந்த தமிழகத்திலேயே கூட ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. இந்த மன்றத்திலே பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இப்போது இந்த அவையிலே வீற்றிருக்கின்ற திரு. கந்தப்பன் அவர்கள் நாடாளுமன்றத்திற்கு ஏற்பட்ட இடைத் தேர்தலில் நின்றார்கள். அந்தத் தேர்தலில் அவர்கள் வெற்றி வாகை சூடினார்கள். அப்படி அவர் வெற்றிவாகை சூடிய நேரத்திலே தமிழகத்தில் இருக்கிற எதிர்க்கட்சிக்காரர்கள் எல்லாம் 'முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களே, 'நீங்கள் ராஜிநாமாச் செய்யுங்கள்' என்பதாகக் கண்டனக் குரல் எழுப்பினார்களே 'ஆம் நீங்கள் சொல்வது உண்மைதான். நாங்கள் எழுந்துவிடுகிறோம். நீங்கள் வந்து என் இடத்தில் உட்கார்ந்துகொள்ளுங்கள்' என்று சொன்னாரா? அப்போது அவர் சொன்னது என்ன? 'இது மக்கள் கொடுத்த தீர்ப்பாக இருந்தாலும் இடைத்தேர்தல்தான். பொதுமக்களுடைய ஒருமித்த கருத்தை இது பிரதிபலிப்பது இல்லை. பொதுமக்களுடைய ஒருமித்த கருத்தைத் தெரிந்து கொள்வது பொதுத் தேர்தலில்தான் முடியும்.' என்று திரு. பக்தவத்சலம் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்களே, அதை எண்ணிப் பார்க்கிறபோது இந்த உண்மை நிலையை அறியாதவர்கள், அரசியல் அரிச்சுவடியைத் தெரியாதவர்கள் பேசுகின்ற தன்மை போல இங்கு பேசப்படுகிற பேச்சுகள் இருப்பதைக் கண்டு நான் வேதனைப்படுகிறேன் என்பதை தங்கள் மூலமாக தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1973 ஆகஸ்ட் 8] [திரு. வை. பாலசுந்தரம்]

தண்டுக்கல்லுக்குப் பின்னால் அவர்கள் அடுத்துப் பெரிது படுத்திப் பேசுகிற விஷயம் பெரியகுப்பம் சம்பவமாகும். அந்தத் தாலுகாவில் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற நான்—அந்த தாலுகாவில் அதுவும் ஒரு கிராமத்தில் நடந்த ஒரு சின்ன நிகழ்ச்சியை இவ்வளவு பெரிதுபடுத்தியிருக்கிறார்களே என்பதை எண்ணிப்பார்க்கும்போது ஒன்றைப் புரிந்து கொண்டேன். ஒரு சாதாரண விஷயத்தைக்கூட மிகப் பெரிதுபடுத்திப் பேசுவதில் தமிழ்நாட்டிலுள்ள எதிர்க் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் மிகவும் சாமர்த்தியசாலிகள்—இல்லாததை இட்டுக்கட்டிப் பேசுவதில் வல்லமை பெற்றவர்கள்—என்பதைத் தெரிந்து கொண்டபோது தான், பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரியகுப்பம் சம்பவத்தோடுகூட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களை சம்பந்தப்படுத்திப் பேசுகின்ற நேரத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த தாய்மார்கள் ஆபாசப் படுத்தப்பட்டார்கள்—இன்னும் வேகமாகச் சொல்கிற நேரத்தில் அவர்கள் கற்பழிக்கப்பட்டார்கள் என்று பேசுகின்ற நேரத்தில் நான் வருத்தத்தோடு ஒன்றைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்களை, தங்களது சொந்த அரசியல் லாபத்திற்காக பகடைக் காய்களைப்போல எண்ணிப் பயன்படுத்த நினைக்காதீர்கள் என்பதாக பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாக எச்சரிக்கை விடுகிறேன். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை பகடைக் காய்களைப்போல பயன்படுத்திக்கொள்ள நினைத்தால் அவர்கள் பாயும் புலியாக எதிர்த்துத் தாக்கும் நிலைமை உருவாகி விடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அரசியல் ஆதாயத்திற்காக, அரசியல் சொந்த லாபத்திற்காக இப்படிப்பட்ட காரியங்களைச் செய்வது எந்த ஒரு கட்சிக்கும் பெருந்தன்மை அளிக்காது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரியகுப்பம் நிகழ்ச்சியை தொடர்ந்து அநாகரீகமான முறையில் பெரிதுபடுத்திக் கொண்டே போனால் தாழ்த்தப்பட்ட அந்தச் சமுதாய மக்கள் வீறுகொண்டெழுந்தால் அவர்களது கொந்தளிப்பை எந்த வகையிலும் அடக்க முடியாது என்பதை நான் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1973 ஆகஸ்ட் 8

ஆகவே, நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம் இந்த ஆட்சியின் மீது நம்பிக்கையில்லை என்கிறார்களே, இந்த ஆட்சி மக்களது செல்வாக்கை இழந்துவிட்டது என்கிறார்களே அது எந்தக் காரணத்தினால்? விவசாயப் பெருங்குடி மக்களது துயரக் கண்ணீரை, துன்பக் கண்ணீரைத் துடைக்க உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்கிற சட்டத்தை டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்களே அதன் காரணத்தினால் இந்த ஆட்சியின் மீது நம்பிக்கை இல்லை என்று சொல்கிறார்களா என்று கேட்கிறேன்.

சோஷலிசம் பேசுகின்றார்கள்—வெளியில் ஒரு சோஷலிசம், உள்ளே ஒரு சோஷலிசம்—மார்க்சிஸ்ட் சித்தாந்தங்களைப் புரிந்து கொண்டவர்களைப்போல பேசுகின்றவர்கள்கூட எப்படி எப்படி மாறிவிடுகிறார்கள் என்பதை நாம் புரிந்துகொண்டுதான் வருகிறோம். சோஷலிசம் என்பது பொருளாதாரத் துறையில் இந்த நாட்டில் மக்களிடையே நிலவி வந்த ஏற்றத்தாழ்வை அகற்ற வேண்டும் என்கிற ஒரு அடிப்படையில்—பல காலமாக உள்ளத்தில் புழுங்கிக் கொண்டிருந்த ஒரு கருத்தைச் செயலாக்க வேண்டும் என்பதற்காக பல் கம்பெனிகளை எல்லாம் தேசியமயமாக்க வேண்டும் என்கிற அடிப்படையில் பல் முதலாளிகளின் எதிர்ப்பை எல்லாம் தாங்கிக்கொண்டு பல் கம்பெனிகளை எல்லாம் தேசியமயமாக்க டாக்டர் கலைஞர் அவர்கள் முன்வந்தார்களே—அந்தக் கொள்கை தவறானது என்கிற அடிப்படையில் இந்த அரசின்மீது நம்பிக்கையில்லை என்கிறார்களா என்பதை பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாகக் கேட்கிறேன்.

தொழிலாளர்களது வாழ்வு உயர வேண்டும் என்பதற்காக சேலம் அலுமினியம் தொழிற்சாலையை தேசியமயமாக்க வேண்டும் என்கிற ஒரு புரட்சிகரமான கொள்கையை தமிழகத்தில் முதன் முதலாக மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் அறிவித்துக் காட்டினார்களே, அந்த தேசிய உடைமையாக்கும் கொள்கை தவறானது என்கிற அடிப்படையில் இந்த அரசின்மீது நம்பிக்கை யில்லை என்கிறார்களா என்று கேட்கிறேன்.

எத்தகைய புரட்சிகரமான திட்டங்களை எல்லாம் இந்த அரசு தீட்டி செயல்படுத்தி வருகிறது என்பதை இந்த நேரத்தில் நாம் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம். பிறந்த நாள் விழாவாக

19-3 ஆகஸ்ட் 8] [திரு. வை. பாலசுந்தரம்]

இருந்தாலும் இந்த நாட்டின் அடித்தளத்தில் உள்ள மக்களது நன்மையையே கருத்தாகக் கொண்டு—இன்றைக்கு கல்லூரி மாணவர்கள் விடுதியா, பிச்சைக்காரர்கள் விடுதியா என்று கேட்கிற அளவில் மாவட்டங்கள்தோறும்—பிச்சைக் கேட்கிறவர்களே இருக்கக்கூடாது என்கிற உயர்ந்த எண்ண அடிப்படையில்—பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள் அமைத்துக் கொண்டு வருகிறார்களே, அதன் காரணமாக இந்த அரசின்மீது நம்பிக்கை இல்லை என்கிறார்களா என்று கேட்கிறேன்.

இன்றைக்கு ரிக்ஷா இழுப்பு என்பது கேவலமாக, கேலிக் கூத்தாக இல்லையா? அதுவும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மக்கள்தான் 98 சதவிகிதம். இல்லை இல்லை, முழுக்க முழுக்க இந்த அவலமான தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள்—மனிதனை மனிதன் வைத்து இழுக்கிற அந்தக் கோரக் கொடுமை ஒழிய வேண்டும் என்பதற்காக—கை ரிக்ஷாக்களை ஒழிக்க டாக்டர் கலைஞர் அவர்கள் முன்வந்தார்களே, அந்தக் குற்றத்திற்காக இந்த அரசின்மீது நம்பிக்கையில்லை என்கிறார்களா என்பதை பேரவைத் தலைவர் அவர்களே, நான் தங்கள் மூலமாகக் கேட்கிறேன்.

நோம் இல்லை பேசுவதற்கு, இந்த அரசின் சாதனைகளை நாள் பூராவும் சொல்லிக் கொண்டு போகலாம். ஆனால் ஒன்று சொல்வேன். எந்தத் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக இந்த அரசு செயல்பட்டு வருகிறதோ, சமுதாயத்தின் அடித்தளத்தில் ரத்தக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த எந்த மக்களது துயரத்தைத் துடைக்க இந்த அரசு செயல்பட்டுக் கொண்டு வருகிறதோ அவர்கள் எல்லாம் இன்றைக்கு அரசியல் விழிப்போடு டாக்டர் கலைஞர் அவர்களது கரத்தை வலுப்படுத்த உறுதி பூண்டிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். கார் உள்ளமட்டும், கடல் நீர் உள்ளமட்டும் தங்கள் உயிரைக் கொடுத்தேனும் இந்த அரசைக் காப்போம் என்கிற உறுதியினை—உள்ள அன்பைக் கொண்ட கோடானுகோடி மக்கள் காட்டுகிற ஆர்வத்தினை நாம் உணர்ந்தாக வேண்டும் என்பதனை நாங்கள் தங்கள் மூலமாக தலைவர் அவர்களே, இந்தப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. வை. பாலசுந்தரம்] [1973 ஆகஸ்ட் 8

மு.ப. 11–30

கடைசியாக, நான் கேட்டுக் கொள்வதெல்லாம், இன்றைக்கு உணவுத் துறையில் தமிழகம் அகில இந்தியாவிற்கும் வழிகாட்டியிருக்கிறது. உணவுத் துறையில் தமிழகத்து நிலையைப்பற்றி தாங்கள் அறிவீர்கள், இந்த நாடு அறியும், இந்தியத் துணைக் கண்டம் அறியும். உணவில் தமிழகம் தன்னிறைவு பெற்றிருக்கிறது. தமிழகத்தை, தன்னிறைவு இல்லாத தமிழகம் என்று அவர்கள் கூறினர்கள். அது எந்தவகையிலேப் பொருந்தும்.

விவசாயத் துறையில் தமிழகம் அக்கறை காட்டவில்லை, நடவடிக்கை எடுத்துக்கொள்ளவில்லையென்று எதிர்க்கட்சிக் காரர்கள் சொல்லட்டும், ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன். அவர்கள் சொந்தக் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக, சொந்த விரோதத்தின் காரணமாக, சொந்த விவகாரத்தின் காரணமாக, பதவி பறிபோய் விட்டதே என்ற காழ்ப்புணர்ச்சியின் காரணமாக வேண்டுமானால் இந்த ஆட்சி இருக்கக்கூடாது என்று சொல்கிறார்களே தவிர, பொதுநல நோக்கத்தோடு சொல்கின்ற அத்தனை பேரும் இந்த ஆட்சிதான் இருக்க வேண்டும், இருக்க வேண்டும் என்று சொல்வார்கள் என்று கூறி, முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கிற தீர்மானத்தின் பேரில் என்னுடைய கருத்துக்களைச் சொல்கின்ற நேரத்திலே முதலாவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஏனென்று கேட்டால், தலைவலி உள்ள ஒருவருக்கு அந்தத் தலைவலி நீண்ட தலைவலியாக இருக்கிற நேரத்திலே, டாக்டர் உடனே நல்ல மருந்தாக கொடுத்து தீர்ப்பதைப் போல, உணவுத் துறையில் கன்னியாகுமரி மாவட்டப் பிரச்சினையை இவ்வளவு எளிதாக இந்த மன்றத்திலே, இங்கே, தீர்த்தார்கள் என்ற அடிப்படையிலே மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினையை தீர்க்கதரிசனத்தோடு தீர்த்திருப்பதற்காக நான் நன்றி கூறி என்னுடைய உரையைத் துவக்குகிறேன்.

உணவுப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே, இந்தியத் துணைக் கண்டத்திலேயே நமது மாநிலத்தில்தான் உற்பத்தி பெருகியிருக்கிறது என்பதற்காக சிறப்பு, பசுமைப் புரட்சி கண்டிருக்கிற சிறப்பு உண்டு என்பதை அத்தனை

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. எ. வகாப்]

கட்சிக்காரர்களும் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். இங்கு பேசியவர்கள், மராட்டியத்திலே, உத்தரப் பிரதேசத்திலே, கேரளத்திலே, பீகாரிலே என்ன நடக்கிறது என்பதை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். உணவுப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து பற்றாக்குறை காரணமாக அங்கே நடக்கிற அவலநிலை இங்கே இல்லை. குமரி மாவட்டத்திலே இருந்தது, அதுவும் இப்பொழுது இங்கே தீர்க்கப்பட்டது என்று எண்ணுகிறபொழுது நிச்சயமாக இப்படிப்பட்ட அரசின் பேரிலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டு வருவது அவசியமா என்று கேட்கலாம். ஆனால், எதிர்க்கட்சிகளுக்குச் சில பொறுப்புகள் இருக்கின்றன. அதன் காரணமாக, அவர்கள் இங்கே கொண்டு வந்திருக்கலாம். அது அவர்களுடைய கடமை. ஆனால் நல்ல முறையிலே செயலாற்ற வேண்டியது அரசின் கடமை என்ற முறையிலே இன்றைய தினம் நாங்கள் தமிழக அரசை வரவேற்கிறோம்.

பெருமதிப்பிற்குரிய டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும் பொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். திண்டுக்கல் தேர்தலினுடைய முடிவினால் இந்தத் தமிழக அரசு ராஜினமா செய்ய வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அவருடைய வாதத்தை எடுத்துக் கொண்டால், 234 தொகுதிகளிலே திண்டுக்கல் தேர்தலை வைத்தே இப்பொழுது தமிழக அரசு ஆட்சியை விட்டு விலக வேண்டுமென்று சொன்னார்கள். இன்றையதினம் அவர்கள் கூட ஒரு கட்சியை விட்டு மற்றொரு கட்சிக்குச் சென்றார்கள். ஆகவே, அவருடைய தொகுதியைச் சேர்ந்த ஆயிரம் பேர் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால், அவர் ராஜினமா செய்யத் தயாரா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த வாதத்திற்கும் காரணம் பொருத்தமாக இருக்க வேண்டும். ஆனால், திண்டுக்கல்லைப் பொறுத்தவரையிலே எங்களுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நான் சார்ந்துள்ள முஸ்லிம் லீக் கட்சி எந்த மதுவிலக்கை அமல் செய்யுங்கள் என்று சொல்லிவந்ததோ அந்த மதுவிலக்கை ஒத்தி வைத்ததுதான் தோல்விக்குக் காரணம் என்பதை தயங்காது இந்த நேரத்திலே சொல்ல விரும்புகிறேன். இந்த மதுவிலக்கை அமல் படுத்தாததால், ஏழை, பாட்டாளி மக்கள், சமுதாயத்தின் அடித்தளத்திலே இருப்பவர்கள் எல்லாம் இன்றைய

[திரு. கே. எ. மகாப்] [1973 ஆகஸ்ட் 8

தினம் எவ்வளவு அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பார்க்க வேண்டும். எவ்வளவு பேர் வாழ்க்கை பாதிக்கப் பட்டிருக்கிறது என்ற அடிப்படையிலே சொல்ல விரும்புகிறேன். இதுதான் முக்கியமான காரணமாக இருக்கும். மதுவிலக்கை அமல்படுத்தினால் தமிழக அரசினுடைய ஆட்சிக்கு நல்ல ஒரு பெயர் நீடித்து இருக்கும் என்பதை எங்களுடைய கட்சியினுடைய சார்பிலே எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தேர்தலுக்குப் பிறகு, இன்றைக்கு டாக்டர் கலைஞர் அவர்கள் மதுவிலக்கில் இப்படி ஒரு முடிவிற்கு வந்திருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் மின்னல் வேகத்திலே முடிவெடுத்து, மிகத் திறமையாக செயலாற்றுகின்றவர் என்ற பெயர் எடுத்தவர். அந்த முறையிலே, படிப்படியாக வேண்டாம், இன்றைய தினமோ அல்லது இன்னும் சில நாட்களுக்குள்ளோ, தயவுசெய்து நீங்கள் பூரண அமலுக்கு அறிவிப்பு அளித்திட வேண்டும். அது எல்லா ஏழை மக்களுடைய உள்ளத்திலேயும், வயிற்றிலேயும், மதிலேயும் பாலை வார்ப்பது என்பதைக் கூற விரும்புகிறேன். நிச்சயமாகக் குடிப்பவர்கள் கூட, இந்தக் கள்ளுக் கடைகள் திறந்திருப்பதை விரும்பவில்லை. குடிப்பவன்கூட, தன் பிள்ளை குடிப்பதை விரும்பவில்லை. குடிப்பவன் கூட, தன் சகோதரன் குடிப்பதை விரும்பவில்லை. ஏதோ பழைய குடியர்கள் அதை விட முடியாமல் கஷ்டப் படுகிறார்கள். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதுபோல் அவர்கள் பழைய சந்ததியினர் ஆகிவிட்டார்கள். எதிர்கால சந்ததியினராவது கெட்டுப் போகாமலிருக்கட்டும் என்ற முறையிலே மதுவிலக்கை அமல் நடத்துவதிலே படிப்படியாக என்று தாங்கள் வைத்திருக்கிற கொள்கை வேறு சமயத்திலே எடுக்கப்பட்ட முடிவு. சமுதாயத்திலே உள்ள நிலையின் காரணமாக உடனடியாக மதுவிலக்கை முழுதும் அமல் செய்தால் எதிர்காலம் திராவிட முன்னேற்றக் கழகத்தின் காலம், இப்பொழுதுள்ள நல்ல ஆட்சியின் காலம், தமிழகத்தின் ஆட்சி எப்பொழுதும் இருக்கும் என்பதை நான் உங்களிடத்திலே உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்.

இன்னும் சில பிரச்சினைகளையும் இந்தத் தருணத்தில் நான் சொல்ல விரும்புகிறேன். உழுபவனுக்கு நிலம் கொடுத்தோம். அதனால் என்ன நிலைமை ஏற்பட்டது என்றால், கரையான்

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. ஏ. வகாப்]

புற்றிலே கருநாகம் புகுந்தது போல், இடைத்தரகர்களாக இருக்கிற சில நிலச் சுவான்தார்களாக இருக்கிறவர்களுக்குத்தான் அந்தத் திட்டத்தின் பலன் போய்விடுகிறது. சாதாரணமாக உபயோகத்தில் வைத்திருப்பவர்கள் நடுத்தர மக்கள். அப்படி நிலத்தை வைத்திருக்கும் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சமுதாயத்திலே அதிகமாக இருப்பவர்கள் நடுத்தர மக்கள். அவர்களுடைய அதிருப்தியை நாம் பெற்றிருக்கிறோம். கடைசியாக சொல்கிற காரணம், அது சினிமா மாயை என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட சில காரணங்களும் அதில் இருக்கின்றன.

நாங்கள் திண்டுக்கல் தேர்தலைப் பார்த்தோம். அங்கே ஆளும் கட்சிக்காரர்கள்தான் வன்முறை செய்தார்கள் என்று சொன்னார்கள். ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களுடைய மண்டை பிளக்கப்பட்டு வைத்திய விடுதியிலே இருந்ததைப் பார்த்தோம். அப்படி சில காரணங்கள் அடிப்படையிலே திண்டுக்கல்லிலே தோல்வி அடைந்திருக்கிறோம். ஆனால், நல்ல முறையிலே பரிசிலிக்கின்ற காலத்திலே, எதிர்காலம் இந்த ஆட்சியினுடைய கையிலேதான் இருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகத்து அந்த தீர்க்க தரிசனம், இப்பொழுது அவர்கள் நல்ல முறையில் சிந்தித்தால் பல்லாண்டுகளுக்கு இந்த ஆட்சியை யாரும் ஒன்றும் செய்ய முடியாது, பொது மக்கள் அப்படிப்பட்ட நிலையிலேதான் இருக்கிறார்கள் என்பது இன்று கிராமம் கிராமமாகச் செல்கின்ற எங்களுக்குத் தெளிவாகத் தெரிகிறது.

முஸ்லிம் லீக்கிற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள உறவைப் பற்றிச் சொல்கின்றபொழுது, இவர்கள் தோழமைக் கட்சி, இவர்களுக்குப் பேசுவதற்கு அதிகமான வாய்ப்பு கொடுக்காதீர்கள் என்றும் இன்னும் தரக் குறைவான அளவிலேயும் பேசப்பட்டது.

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு"

என்ற வள்ளுவருடைய வாக்கைச் சிறப்பிப்பதற்காக மட்டும் நாங்கள் நட்புறவு கொண்டிருக்கவில்லை. அவரவர்கள் தவறு செய்கின்ற நேரத்திலே அதைக் கண்டிக்க எந்நேரத்திலும்

[திரு. கே. எ. வகாப்] [1973 ஆகஸ்ட் 8

நாங்கள் தயங்கவில்லை. அதே நேரத்தில் நண்பனுக்கு இன்னல் வந்தால்,

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு"

என்று வள்ளுவர் கூறியதுபோல நாங்கள் செயல்பட்டு வருகிறோம். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நட்புக் கட்சியாக இருக்கிற காரணத்தாலேயே எங்கள் பேரில் சில அவதூறைச் சொன்னார்கள். எதிர்க்கட்சிகளை மூன்று வகையான கட்சிகளாகப் பிரித்தார்கள். நான், நான்கு வகைக் கட்சிகளாகப் பிரிக்கலாம் என்று கருதுகிறேன். ஆளும் கட்சி, தோழமைக் கட்சி, எதிர்க் கட்சி என்பதோடு எதிரிக் கட்சி என்று ஒன்று இருக்கிறது என்று நினைக்கிறேன். எதையாவது காழ்ப்புணர்ச்சியோடு, பொறுமையுணர்ச்சியோடு சொல்கின்றவர்களை நான் எதிரிக் கட்சி என்று சொல்ல விரும்புகிறேன். ஆகவேதான், இன்றைய தினம் திராவிட முன்னேற்றக் கழகத்தோடு முஸ்லிம் லீக் கொண்டிருக்கிற அந்த உறவானது நிச்சயமாக நல்ல பாசத்தின், அன்பின் அடிப்படையிலே உள்ளது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் நாங்கள் சொல்ல வேண்டிதை உரிமையோடு சொல்லலாம் கேட்க வேண்டியதை உரிமையோடு கேட்கலாம் என்ற அடிப்படையிலேதான் இங்கே செயல்பட்டு வருகிறோம் என்பதை இந்தக் கட்சிகளுக்கு நான் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவசாயச் சங்கக் கோரிக்கைகளைப் பற்றி பேசப்பட்டது. நேற்றையதினம் பேசிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் கூட்டுறவு சங்கங்களில் விவசாயிகள் எப்படியெல்லாம் துன்புறுத்தப் படுகிறார்கள், கடன்களை எப்படியெல்லாம் வசூல் செய்கிறார்கள் என்று குறிப்பிட்டார். அதிகாரிகளைப் பற்றி எல்லாம் குறைகள் கூறப்பட்டன. அது ஓரிரு இடங்களிலே நடைபெற்றிருக்கின்றன. ஒரு சில அதிகாரிகள் அப்படி இருக்கலாம். பொதுவாக அதிகாரிகளைப் பற்றிக் குறிப்பிட்டால் மட்டும் போதாது. மக்களுக்கும் கட்சிகளுக்கும் இங்குள்ள அங்கத்தினர்களுக்கும்

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. எ. வகாப்]

சில பொறுப்புகள் இருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெளிவுபடுத்துவது என்னுடைய கடமை என்று நினைக்கிறேன்.

2, 3 ஆண்டுகளில் அதிகாரிகளே விவசாயிகள் தாக்குகின்ற நிகழ்ச்சிகளெல்லாம் என்னுடைய சொந்த ஊரிலே நடைபெற்றிருக்கின்றன. அப்படிப்பட்ட நிகழ்ச்சிகளே கட்சிகள் கவனிக்க வேண்டும், விவசாயிகளுக்காக போராடுவது நம்முடைய கடமை. ஆனால், அதிகாரிகளே கை நீட்டி அடிக்கின்ற அளவுக்கு இந்த நாட்டிலே நாகரீகம் கெட்டுவிட்டது. அதிகாரிகள் கடன் வாங்கியவர்களிடம் கடனைத் திருப்பி வசூலிக்கப் போனால், இத்தகைய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. அரசாங்கக் கடன் என்றாலே ஒரு தனி மனப்பான்மை வந்துவிடுகிறது. யாராவது ஈட்டிக்காரனிடத்திலே கடன் வாங்கினால், ஈட்டியைக் காட்டினால் கொடுத்து விடுகிறோம். வட்டிக்காரனிடம் கடன் வாங்கினால், கோர்ட்டுக்குச் சென்று விடுகிறான். அரசாங்கக் கடன் என்றால் பொதுவாக மெதுவாகக் கொடுக்கலாம் என்ற உரிமையுண்டு. அது ஓளவுதான். அதே நேரத்திலே அந்த உரிமை இருக்கிற நேரத்திலே, கடமையுணர்ச்சியை நாம் கவனத்திலே கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

விலைவாசி உயர்வு இன்று நாட்டிலே மிகப் பெரிய பிரச்னையாகி விட்டது. விஷம்போல் விலை ஏறுகிறது என்று நேற்று இங்கே குறிப்பிடப்பட்டது. விஷம் எப்படி ஏறுமோ எனக்குத் தெரியாது. விலைவாசி போல் தான் விஷம் ஏறிக்கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். விலைவாசி பற்றி பல உறுப்பினர்கள் கருத்துக்களே எடுத்துச் சொன்னார்கள். இந்த நாட்டினுடைய பொருளாதார நிலையைப் பார்த்தால் இன்றைக்குப் பண வீக்கம் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் ஏற்பட்டிருக்கிறது. மத்திய அமைச்சர் சவான் அவர்கள்கூட காலம் கடந்து சென்றிருக்கிறது என்று தான் சொல்லியிருக்கிறார்கள், அது உலகமெல்லாம் இருக்கிற நிலைமை என்றும் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மையான நிலைதான். உலகத்திலே வளர்ச்சியடைந்த ஜப்பான் நாட்டிலே கூட 7 விழுக்காடு அளவிற்கும். அமெரிக்க நாட்டிலே 27 விழுக்காடு அளவிற்கும் விலை ஏறியிருக்கிறது. ஆனால் இந்திய துணைக்

[திரு. கே. எ. வகாப்] [1973 ஆகஸ்ட் 8-

கண்டத்திலோ நூற்றுக்கு நூறு விலை ஏறியிருக்கிறது, ஏறிக் கொண்டே இருக்கிறது.

விலைவாசிகளைக் கட்டுப்படுத்துகின்ற அந்தப் பொறுப்பு மாநில அரசைவிட மத்திய அரசுக்குத்தான் அதிகமாகி இருக்கிறது. பண வீக்கம் அதிகமாகத் தோன்றுவதற்கு நாட்டிலே உள்ள கள்ளப்பணம்தான் காரணம் என்று சொல்லப்படுகிறது. 5 ஆயிரம் கோடி அளவிற்கு இருந்த கள்ளப்பண புழக்கம் இன்றைக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமாகப் புழங்குவதாகத் தெரிகிறது. இதன் காரணமாக பட்ஜெட்டிலே துண்டு விழுகிறது. அதைச் சரிக்கட்ட வேண்டுமென்ற முறையிலே நம்மிடத்திலே அந்த அளவிற்குத் தங்கம் கையிருப்பு இல்லாத நிலையிலே காகித நோட்டுகள் அச்சடிக்கிறோம்.

ஒரு பலூனை ஊத ஊத ஓரளவிற்குத்தான் அது பெரிதாக ஆகும். ஒரு கட்டத்திலே அந்த பலூன் வெடித்து விடும். அதேமாதிரிதான் நாட்டிலே இன்றைக்குப் பொருளாதார நிலை சீர்கெட்டு வருகிறது. அதைச் செம்மைப்படுத்த மாநில அரசு தன்னுல் இயன்ற எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டும். பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய முறைகளை மத்திய அரசும் மூனைந்து அமல்படுத்த வேண்டும். ஏதோ நூறு ரூபாய் நோட்டுக்கள் செல்லாது என்று ஒரு வதந்திதான் வந்தது. உடனே 100 ரூபாய்க்கு 70 ரூபாய், 60 ரூபாய் கொடுத்து வங்கியிலே வாங்கிக் கொண்ட நிலைமையைப் பற்றிய செய்தியெல்லாம் பத்திரிகையிலே வந்தது. அப்படி ஒரு சட்டம் கூட அரசு கொண்டுவந்தால் நல்லது என்று நினைக்கிறேன். எனென்றால் கணக்கிலே உள்ள 100 ரூபாய் நோட்டுக்களை ஒப்புக்கொண்டு, கணக்கில் இல்லாத நோட்டுக்களையெல்லாம் செல்லாததாக்கி விடுவது என்ற முறையிலே கொண்டுவந்துவிட்டால் பொருளாதாரம் சீர்படும்.

விலைவாசி உயர்வு என்று கூறுகிறபொழுது உண்ணுகின்ற உணவின் விலை அதிகமாகிவிட்டது. விவசாயி பயன்படுத்துகின்ற உரத்தினுடைய விலை கன்ட்ரோலிலே 50 ரூபாய்க்குக் கிடைக்க வேண்டிய உரம், மூட்டை 75 ரூபாய், 70 ரூபாய் என்ற அளவிற்குத்

[திரு. கே. எ. வகாப்] [1973 ஆகஸ்ட் 8

தான் வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதிலே நிர்வாகச் சீர்கேடுகள் இருக்கின்றன, அதன் காரணமாகவும் விலை ஏறுகிறது.

மின்சார வெட்டுக் காரணமாக சிமெண்ட் உற்பத்தி குறைந்து இருக்கலாம். மின்வெட்டுக்குப் பிறகு ஆலைகளில் சிமெண்ட் தேங்கிக் கிடக்கிறது. வெளியிலே 12½ ரூபாய்க்கு கன்ட்ரோல் ரேட்டில் கிடைக்க வேண்டிய சிமெண்ட் 20 ரூபாய்க்கும் அதிகமாக விற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. நிர்வாக நடைமுறையைப் பொறுத்தவரையிலே தமிழகத்திலே முன்னுலே ஒரு முறையை வைத்திருந்தார்கள். இப்பொழுது அதை மாற்றி இருக்கிறார்கள். தொழில் வணிகத் துறையிலிருந்து அனுமதி வாங்கி சிமெண்ட் வாங்கிக் கொள்ளலாம் என்ற நிலைமை இருந்தது. இன்றைக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அந்த அனுமதியைக் கொடுக்கலாம் என்று மாற்றப்பட்டிருக்கிறது. அப்படி மாற்றப்பட்டு இரண்டு மூன்று மாதங்கள் ஆகியுங்கூட ஒரு கலெக்டர் கூட பெர்மிட்டுகள் கொடுத்ததாகத் தெரியவில்லை. அதன் காரணமாகத் தேவைப்படுகின்றவர்களுக்கு சிமெண்ட் கிடைக்கவில்லை. ஆனால் அதே நேரத்திலே சிமெண்ட் ஆலைகளிலே சிமெண்ட் தேங்கிக் கிடக்கிறது. இதற்கு இந்த அரசு உடனடியாக ஒரு முடிவு எடுக்க வேண்டும்.

எண்ணெயினுடைய விலை 4 மடங்கு அதிகமாகியிருக்கிறது. தமிழகத்திலே மனிலா விளைகிறது. வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, கோவை ஆகிய மாவட்டங்களிலே அதிகமாக உற்பத்தியாகிறது. ஆனால் எண்ணெய் ஒரு கிலோ 8.50 ரூபாய்க்கு விற்கிறது, என்ற சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய மாநிலத்திலேயிருந்து அது வெளி மாநிலங்களுக்கு போவதைக் கட்டுப்படுத்த வேண்டும். வெளி மாநிலங்களுக்கு மட்டுமல்ல, ரஷ்யா போன்ற நாடுகளுக்கு கடலைக்காய் ஏற்றுமதி செய்யப் படுகிற சூழ்நிலை இருக்கிறது. நம்முடைய பொருள்கள் நமக்கே சரியாகக் கிடைக்காத நிலையிலே வெளிநாடுகளுக்கு அனுப்ப வேண்டியது அவசியந்தானு என்பதைச் சிந்திக்க வேண்டும். அந்த அடிப்படையில் தயவுசெய்து இந்த அரசு விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கும் நிர்வாகத்திலே உள்ள சிக்கல்களைப் போக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கே. எ. வகாப்] [1973 ஆகஸ்ட் 8

நேற்றைக்கு வலது கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தலைவர் பேசும்பொழுது கம்பம் நிகழ்ச்சியைப் பற்றிச் சொன்னார்கள். மக்கள் தங்களுடைய கையிலே அதிகாரத்தை எடுத்துக் கொள்கிறார்கள், எடுத்துக் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள், அதிலே அவர்கள் மகிழ்ச்சி அடைகிறார்களா? அப்படி எண்ணினால் அதுதான் வன்முறையாகும். அப்படிப்பட்ட வன்முறையிலே மகிழ்ச்சியடைகிறார்களா என்று கேட்க விரும்புகிறேன். நேற்றைக்குக் கூட வங்காளத்திலே மக்கள் கடைகளைக் கொள்ளை அடித்திருக்கிறார்கள், வலது கம்யூனிஸ்டு கட்சிக்காரர்கள் தலைமையிலே நடத்தியிருக்கிறார்கள். அப்படிப் பட்ட நிலைமை தமிழகத்திலேயும் வரவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்களா? அப்படியென்றால் இந்த நாட்டிலே மக்களிடத்திலே ஒரு பரபரப்பான சூழ்நிலையை ஏற்படுத்தலாமே தவிர நாட்டினுடைய நிலைமையை அது எப்படி சீர்படுத்தும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, இங்கே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலேதான் மெம்பர்கள் இருக்கிறார்கள், வலது கம்யூனிஸ்ட் கட்சி என்று சொல்கிறார்களே, அப்படி ஒரு கட்சி இங்கே இருக்கிறதா?

திரு. கே. எ. வகாப்: இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்கள் வன்முறையை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்களா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றிப் பேசிக் கொண்டே இருக்கலாம். தொழில் துறையிலே ஒரு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினால்தான் தொழில் துறை முன்னேற முடியும். படித்தவர்கள் எல்லாம் வேலைக்குப் போக வேண்டுமென்ற எண்ணத்திலேயே படிக்கின்ற காரணத்தினால்தான், ஐந்தாம் வகுப்பு படித்தவன் அட்டெண்டர் வேலை வேண்டுமென்றும், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவன் வேலைக்குப் போக வேண்டுமென்ற முறையிலேயும்தான் எங்களையெல்லாம் அணுகுகிறார்களே தவிர தொழில் செய்யப் போகிறோம், வியாபாரம் செய்யப் போகிறோம், தொழில் துறைக்குப் போகிறோம் என்ற முறையிலே சொல்லக் கூடிய நிலைமை இல்லை. படிப்பது என்றால் வேலைக்குச் செல்வது என்ற அடிப்படை நோக்கத்தை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. ஏ. வகாப்]

நேற்றைய தினம் மதிப்பிற்குரிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு பாடலைப் பாடினார்கள். நாடெல்லாம் கள்வர் கூட்டம் என்று ஆரம்பித்தார்கள். அந்தப் பாடலின் ஆரம்பத்தையே நான் எடுத்துக்கொண்டு இன்னொரு பாடலையும் என்னுடைய பேச்சிலே இணைத்து முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

நாடெல்லாம் கள்வர் கூட்டம்
நல்லவர் இல்லை என்ற
பாடலை ஏற்றுக்கொண்டால்
நாமெல்லாம் கள்வராவோம்.
வீடெல்லாம் இன்பம் வேண்டும்
வேதனை தொலைய வேண்டும்
நாடெல்லாம் செழிக்க வேண்டும்
நல்லவர் பெருக வேண்டும்
காடெல்லாம் திருத்தி நல்ல
கழனியாய் ஆகவேண்டும்
பாட்டாளி வாழவேண்டும்
பண்புகள் பெருகவேண்டும் என்று
பாடெல்லாம் பட்டுவரும்
பண்பட்ட தமிழாட்சி
வாழவே கைகொடுப்போம்
வளரவே ஒத்துழைப்போம்

என்று கூறி என்னுடைய உரையை நிறைவு செய்து கொள்கிறேன், வணக்கம்.

*திரு. கே. பி. கோபால்: தலைவர் அவர்களே, இந்திப் பேரவையிலே கொண்டுவரப்பட்டிருக்கின்ற நம்பிக்கையில்லாத் தீர்மானத்தையும் கண்டனத் தீர்மானத்தையும் ஆதரித்து ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

கேரள எல்லையோரப் பகுதிகளில் அரிசி முறையாக விநியோகம் செய்ய இந்த அரசு தவறிவிட்டது என்ற குற்றச்சாட்டை நான் முதன்முதலிலே வைக்க விரும்புகிறேன். கள்ளக்கடத்தல்காரர்கள் மீதும், அவர்களுக்கு துணை நின்ற அதிகாரிகள் மீதும் நடவடிக்கை எடுக்கத் தவறியது குறித்தும், விவசாயிகளின் குழுவோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி அவர்களுடைய

[திரு. கே. டி. கோபால்] [1973 ஆகஸ்ட் 8

கோரிக்கைகளே நிறைவேற்றிக் கொடுக்காதது பற்றியும், ஊழல் புகார்களுக்கு அளிக்கப்பட்ட பதில்கள் திருப்திகரமாக இல்லையென்பது பற்றியும், நிர்வாகத்திலே அரசியல் குறுக்கீடுகள், காலதாமதம், பண விரயம், கவனக் குறைவு இன்னும் தொடர்கிறது என்பது குறித்தும், திண்டுக்கல் தேர்தலிலே ஜனநாயகத்திற்குப் புறம்பான செயல்கள் நடைபெற்றன என்பது பற்றியும், புதிய வரிகள், விலைவாசி உயர்வு, காவல் துறையிலே பாரபட்சமான போக்கு, பட்டதாரி ஆசிரியர்களை பழிவாங்கும் போக்கு இதுபோன்ற பல செயல்களினாலும் மக்களுக்கு இந்த அரசுமீது நம்பிக்கை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜூன் மாதம் 23 ஆம் தேதியன்று இரவும், 24 ஆம் தேதியன்றும் கம்பத்திலே நடந்த சம்பவத்தைப் பற்றி விளக்குவதற்கு முன்பு, அந்தச் சம்பவங்களுக்கு காரணம் இந்த அரசு முன்னதாகவே போதிய நடவடிக்கைகள் எடுக்காததுதான். ஆகவே அந்தச் சம்பவங்களுக்கு இந்த அரசேதான் பொறுப்பு ஏற்க வேண்டும். 19—7—1973 ஆம் தேதிய மதுரைப் பதிப்பு தினமணிப் பத்திரிகையிலே கன்னியாகுமரி கலெக்டர் ஒரு அறிக்கை விட்டார்கள், கள்ளக்கடத்தலை பொது மக்கள்தான் தடுக்க வேண்டுமென்று. கம்பம் தொகுதியிலே என்ன நிலைமை என்றால் அங்கே பட்டப் பகலில் அரிசி கடத்தப்படுகிறது. அதிகாரிகளின் சம்பந்தமும், சம்மதமும் இல்லாமல் பெரிய அளவில் அரிசி கடத்த முடியுமா என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும், அமைச்சர்களுக்கும் பலமுறை கடிதங்கள் எழுதியிருக்கிறேன். சட்டசபையிலும் பேசியிருக்கிறேன். மேலும், ஒரு பர்மிட்டை வைத்துக்கொண்டு பலமுறை அரிசியைக் கொண்டுவரும் முறையும் தொடர்கிறது. இந்த முறையிலே கம்பத்திலே தனிப்பட்ட சூழ்நிலை இருந்தது. நாகர்கோயிலில் இல்லாத முறை கம்பத்தில் கையாளப்படுகிறது. இந்தக் கள்ளக் கடத்தலில் கைப்பற்றப்படும் அரிசியை, பறிமுதல் செய்யப்பட்ட அரிசியை விற்கும் உரிமை பெற்றவர்கள் என்று ஒரு சிலர் நியமிக்கப்படுகிறார்கள். பெல்ட் ஏரியா என்று சொல்லப்படும் கூடலூரிலே எஜண்டாக இருக்கிறார்கள். அவர்கள் கம்பம் நகரத்திலே எஜண்டாக இருந்துகொண்டு பெல்ட் ஏரியா இல்லாத தேனி போன்ற இடங்களில் இருக்கிறார்கள். அவர்கள் பிடிக்கும்

அரிசிக்கு அவர்கள் கணக்கு கொடுப்பதில்லை. Seizure licence permit holders பலர் ஹோல்சேல் டீலராகவும் இருக்கிறார்கள். அவர்கள் வாரத்திற்கு ஒருமுறை வெளியிடத்திற்குச் சென்று ரீடெய்லர்களுக்குக் கொடுக்கும் முறையில் பெறுவதற்கு சீஷர் லிசென்ஸ் பெர்மிட் பெற்றவர்களுக்கு உரிமை உண்டு. பறிமுதல் செய்யப்பட்ட அரிசியை அவர்களுக்குக் கழிப்பதில்லை. கழிக்காமல் விற்று விடுகிறார்கள். இது மறைமுகமாக அதிகாரிகளே அரிசி கடத்தக்கூடிய முறைக்கு உதவுவதாகும் என்று சிலர் சொல்கிறார்கள். இது அந்தப் பகுதி மக்களுக்கு வேதனையை உண்டாக்கியது. எனவே கட்சி சார்பற்ற முறையிலே எல்லாப் பகுதிகளிலேயும் சர்வ கட்சிக் குழு அமைத்து இதை எப்படியும் போராடி, அந்தப் பகுதியில் நியாயமான விலையில் நல்ல தரமான அரிசி கிடைக்க வேண்டும், கள்ளக் கடத்தலைத் தடுக்க வேண்டுமென்று முயற்சி செய்தார்கள். அந்த அடிப்படையிலேதான் ஜூன் மாதம் 19 ஆம் தேதியன்று சர்வ கட்சியைச் சேர்ந்தவர்களும் உண்ணாவிரதம் இருந்தார்கள். 20 ஆம் தேதி முதல் இந்திய தேசிய காங்கிரசைச் சார்ந்த தொண்டர்கள் ஐந்து நாட்கள் தொடர் உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்கள் உண்ணாவிரதம் இருந்துகொண்டிருக்கும்பொழுது இந்த லாரி வந்தது. 8½ மணிக்கு கம்பம் வந்த லாரியை பொதுமக்கள் மறித்து, பர்மிட் இருக்கிறதா என்று கேட்டிருக்கிறார்கள். அந்த லாரி டிரைவர், என்னிடத்தில் பர்மிட் இல்லை, பின்னால் வருபவர்களிடம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இதைப் போலவே, அடுத்தடுத்து வரும் லாரிகளில் வந்தவர்களும் எங்களிடத்தில் இல்லை, பின்னால் வருகிறது, பின்னால் வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே பொதுமக்களும், பொறுப்பு மிகுந்த சர்வ கட்சியினரும் அதை இறக்கி ஏல விவசாயிகள் சங்கத்தினிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். பிறகு போலீசுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். அங்கு பொறுப்பிலிருந்த சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள் மேலதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்து மேற்கொண்டு என்ன செய்வோம் என்று இருந்தார்கள்.

நான் மதுரையிலே டி.டி.சி. கூட்டத்தில் கலந்துகொண்டு மாவட்ட ஆட்சித் தலைவரோடு இந்த அரிசி நிலைமையைப் பற்றி விவாதித்துவிட்டு கம்பத்திற்கு வரும்பொழுது இரவு 10 மணியாகி

[திரு. கே. பி. கோபால்] [1973 ஆகஸ்ட் 8

விட்டது. நான் வந்தவுடன் இருந்த நிலைமையை என்னிடத்தில் விளக்கினர்கள். என் முன்னாலேயே இந்த அரிசியை விநியோகம் செய்ய வேண்டுமென்று சொன்னர்கள். நான் அவர்களிடத்தில், அது முறையல்ல, என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும், இதைப்பற்றி மேலதிகாரிகளுக்கு தெரிவிப்போம் என்று சொல்லிவிட்டு சப்-இன்ஸ்பெக்டருக்கும் போன் செய்தேன். சப்-இன்ஸ்பெக்டர் அவர்கள், இதை கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் செய்ததாக அவர்கள் மனுக் கொடுத்திருக்கிறார்கள், ஆனால் பொதுமக்களும், சர்வ கட்சியினரும் சொல்வது அவர்கள் பர்மிட் இல்லாமல் அரிசி கொண்டு வந்திருக்கிறார்கள் என்பது, என்று சொன்னர்கள். நான் சொன்னேன், நானும் வருகிறேன், நீங்களும் வாருங்கள். செக் போஸ்டிற்குச் சென்று ரிஜிஸ்தரில் பதிவாகியிருக்கிறதா என்று பார்ப்போம் வாருங்கள் என்று சொன்னேன். நான் இப்படிச் சொல்லிக்கொண்டிருக்கும்போது உத்தமபாளையம் சர்க்கிள் இன்ஸ்பெக்டரும் வந்துவிட்டார். சர்க்கிள் இன்ஸ்பெக்டருடன் செக் போஸ்டிற்குச் சென்று ரிகார்டுகளைப் பார்த்தும், ரெவின்யூ இன்ஸ்பெக்டரை வரவழைத்தும் பார்த்ததில் செக் போஸ்ட் ரிஜிஸ்தரில் ஒரு லாரியைத் தவிர மற்ற லாரிகளுக்கு முறையான எண்ட்ரிகள் போடப்படவில்லை. பிறகு நானே சர்வ கட்சித் தோழர்களுக்குப் போன் செய்து, அவர்களை போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவழைத்து ஒரு புகாரை, நடந்த விஷயத்தை எழுத்து மூலமாக எழுதிக் கொடுங்கள், தக்க நடவடிக்கை எடுக்கப்படும், செக் போஸ்ட் ரிஜிஸ்தரில் ஒரு சில தவறுகள் நடந்திருக்கின்றன என்று எடுத்துக் கூறினேன். அப்பொழுது அவர்கள் சொன்னர்கள், இங்குள்ள முறைப்படி, இதுபற்றி எழுத்து மூலமாகப் புகார் கொடுக்கப்பட்டால், இது பறிமுதல் செய்யப்பட்ட அரிசி என்று எடுக்கப்பட்டு, யார் தவறு செய்தார்களோ அவர்களே மொத்தத்திற்கும் ரிலீஸ் ஆர்டர் வாங்கி அவர்களே கோளத்திற்குக் கடத்தி விடுகிறார்கள், எனவே நாங்கள் அப்படிக் கொடுக்க விரும்பவில்லை, இது பொது மக்களுக்கு வினியோகிக்கப்பட வேண்டுமென்று கூறினர்கள். இதற்கிடையே நான் மாவட்ட ஆட்சித் தலைவரவர்களும், எம்.பி. அவர்களும் வந்துவிட்டும் என்று இருந்தேன். தேனி டெபுடி அவர்கள் அதிகாலை இரண்டு மணிக்கு வந்து 4½ மணி வரையில் அங்கே இருந்தார்கள். இரவு 10 மணி முதல் காலை 5 மணி

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. பி. கோபால்]

வரையில் நாங்கள் எல்லோரும் கம்பத்திலே இருந்தோம். பொது மக்கள் கொள்ளையடிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அங்கே அந்த லாரியை நிறுத்தவில்லை. அப்படி நிறுத்தியிருந்தால் இரவு முழுவதும் அரிசி பாதுகாப்பாக இருந்திருக்காது. பொதுமக்கள் தான் இருந்தார்கள், இரண்டு மணி வரையிலும் நானும் காவல் துறையினரும் போலீஸ் ஸ்டேஷனில் இருந்தோம். எனவே, அவர்கள் அங்கே கடத்தலைத் தடுக்க நாமே தலையிட வேண்டுமென்ற நிலையில் இருந்ததுதான் காரணம். அதற்குக் காரணம் என்னவென்றால், அப்பகுதி மக்களுக்கு அதிகாரிகளின் மேல் நம்பிக்கை இல்லை. அது சம்பந்தமாக பல நோட்டீஸ்களை விநியோகம் செய்திருக்கிறார்கள். அதைப் பார்த்தால் அவர்கள் எந்த அளவிற்கு அதிகாரிகளின் மேல் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பது தெரியும். தலைவரவர்களே, உங்கள் அனுமதியுடன் அந்த நோட்டீஸ்களிலே ஒருசில பகுதிகளைக் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

"மதுரை ஜில்லா கடத்தல் தடுப்பு சூப்பரின்டெண்ட் வாசுதேவ பட் மற்றும் கம்பம் பகுதி கடத்தல் தடுப்பு சப்-இன்ஸ்பெக்டர் மோகன்தாஸ் வரை மாற்ற வேண்டும். சிவில் சப்ளை துறையில் T.S.O. முதல் வரையில் உள்ள அனைவரையும் மாற்றிவிட்டு புதிய அதிகாரிகளை நியமிக்க வேண்டும். . . ." இவண், இரா. சீரங்கு, (தி.மு.க. வட்ட பிரதிநிதி), ஆ. அன்னக்கொடி, (தி.மு.க. அவைத் தலைவர்) எஸ். ராசு (தி.மு.க. செயலாளர்) . . ." இன்னும் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதைப்போலவே, கம்பத்தில் சர்வ கட்சியின் சார்பிலே ஒரு நோட்டீஸ் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. "இந்த வீலை உயர்வுக்கு மொத்த வியாபாரிகளும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும்தான் காரணம்" என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றும் தனியாக கம்பத்தைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழகம் 21—6—73 ஆம் தேதியிலே ஒரு துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டிருக்கிறார்கள். அதில், "கேரளாவுக்கு அரிசி கடத்துபவர்கள் மீதும், அதற்கு உடந்தையாக இருப்பவர்கள் மீதும் பாதுகாப்புச் சட்டப்படி கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்" என்று கூறப்பட்டிருக்கிறது.

[திரு. கே. பி. கோபால்] [1973 ஆகஸ்ட் 8

எனவே, அவர்களுக்கு கிழ் மட்டத்திலேயுள்ள அதிகாரிகள் மீது மட்டுமல்லாமல், மேல் மட்டத்திலேயுள்ள அதிகாரிகளின் மீதும் நம்பிக்கையில்லை. எனவே, இதை உடனடியாக ரிலீஸ் ஆர்டர் என்ற முறையிலே, தவறு செய்பவர்களே மீண்டும் கோளத்திற்குக் கடத்தி விடுவார்கள் என்ற எண்ணம்தான் இருந்தது. காலை 5 மணிக்கு கம்பத்தை விட்டு பிரியும்பொழுது, டெப்டி அவர்களும், நாங்களும் பிரியும்பொழுது பொது மக்களிடம் சொன்னோம், லோயர் கேம்பிலே டிபுடி ஸ்பூட் செக்ரடரி தங்கியிருக்கிறார்கள், பேசி வருகிறோம் என்று சொல்லிச் சென்றோம். அந்த இரவைப் பொறுத்தவரையில் காவல் துறையினரும் மிகவும் பொறுமையாக இருந்தார்கள், பொதுமக்களும் பொறுமையாக இருந்தார்கள். நாங்கள் லோயர் கேம்பிலே டெப்டி ஸ்பூட் செக்ரட்டரியைப் பார்த்து விட்டு வரும் வரையில், அந்த பொதுமக்களையோ, காவல் துறையினரையோ குறை சொல்லத் தயாராக இல்லை. ஆனால் நான் கேள்விப்பட்டது, கள்ளக் கடத்தலில் சம்பந்தப்பட்டவர்கள், ஹோல் சேல் வியாபாரிகளும், சிஷர் லேகென்ஸ் பர்மிட் ஹோல்டர்களும், கட்டுப்பட்டவர்கள் குழப்பத்தை விரோவித்திருக்கிறார்கள், அதை அனுசரித்துத்தான் தடியடிப் பிரயோகம் நடத்தது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

கம்பம் பகுதியிலே உணவுக் கடத்தல் சம்பந்தமாக பல அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று கே. டி. கே. தங்கமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நானும் வலியுறுத்திக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஏப்ரல் மாதம் 3 ஆம் தேதி டி. என். ஆர். 006 என்ற லாரியையும், எம்.டி.ஜி. 465 என்ற லாரியையும் உத்தமபாளையம் தாசில்தார் பிடித்தபொழுது அவைகள் 91 மூட்டைகளோடு பிடிக்கப்பட்டன.

ற. ப. 12-00 தாசில்தார் இரண்டு லாரிகளைப் பிடிக்கிறார். டி.ஆர்.ஓ. வந்து சிறு குற்றம் என்று சொல்லி விட்டு விடுகிறார். டி.ஆர்.ஓ. என்ன செய்திருக்க வேண்டும்? நீதிமன்றத்தில் போய் முறையிட்டுக் கொள் என்று சொல்லி இருக்க வேண்டும். இன்னொன்றும் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

டெண்டர் முறையைப் பற்றிச் சொன்னார்கள். டெண்டர் முறை கொடுக்கப்பட்டதை டி.எஸ்.ஓ. அப்ரூவ் செய்தார். ஆனால் டி.ஆர்.ஓ. ஏற்றுக் கொள்ளவில்லை. 23-6-73 ஆம் தேதியன்று

1973 ஆகஸ்ட் 8] [திரு. கே. பி. கோபால்]

மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நாங்களும், கம்பம் ஊராட்சி ஒன்றியத் தலைவர் (திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்), கம்பம் முனிசிபல் நகரசபைத் தலைவர் (எங்கள் கட்சித் தலைவர்) இன்னும் பலரும் சந்தித்துப் பேசும்போது மாவட்ட விநியோக அதிகாரிகளும் இருந்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் நமது கலைஞர் அவர்களுக்கு நம்பிக்கையானவர்கள், பொறுப்பானவர்கள். அவர்களைக் கேட்டாலே தெரியும். எனக்கும் அவருக்கும் என்ன வாக்குவாதம் நடந்தது என்பதை அவரே சொல்வார். மாவட்ட விநியோக வருவாய்த் துறை அதிகாரிகள் லீசென்ஸ் முறையை மாற்றுவது இயலாது என்றார்கள். கம்பம் பகுதிக்கும் உத்தமபாளையத்திற்கும் வந்து சில்லரை வியாபாரிகளும் மொத்த வியாபாரிகளும் கொண்ட கூட்டத்தைக் கூட்டி அரிசியை எப்படி விநியோகம் செய்ய வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். நான் சட்ட சபையில் பலமுறை பேசியிருக்கிறேன். 17–7–71, 13–3–72, 10–8–72 ஆகிய நாட்களில் சட்டசபையில் பேசியிருக்கிறேன். தனிப்பட்ட முறையில் 12–6–71, 23–7–71, 23–10–71, 17–1–72, 21–8–72 ஆகிய தினங்களில் எல்லா அதிகாரிகளுக்கும் பதிவுத் தபால் மூலமாகக் கடிதம் எழுதியிருக்கிறேன். அப்படியிருந்தும் நான் அழைக்கப்படவில்லை. அங்கு நடந்தது என்னவென்றால் அவர்களுக்கு வேண்டிய ஒருசில ஹோல்சேல் வியாபாரிகளை சீஷர் லீசென்ஸ் வியாபாரிகளாக வைத்துக் கொண்டு ரிடெய்ல் டீலர்களைப் போகச் சொல்லிவிட்டார்கள். 8 மணிக்குக் கூட்டம். ஒரு மணி நேரம் கழித்து உத்தமபாளையத்தில் கூடலூரில் இருந்து மொத்த வியாபாரி வரும் வரை மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் காத்துக் கொண்டிருந்திருக்கிறார்கள்.

அடுத்து, விவசாயிகளுடைய கடனுக்காகக் கெடுபிடி ஜப்தி நடைபெறுகிறது. அமைச்சர் அவர்களும் சில விளக்கங்களைச் சொன்னார்கள். விவசாயிகள் மீது இவ்வளவு கெடுபிடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் இந்த அரசு நான் சொன்ன சீஷர் லீசென்ஸ் பர்மிட் ஹோல்டர்கள் ஆயிரம் குவிண்டால்களுக்கு மேல் பாக்கி வைத்துக் கொண்டு ஒரு லட்சம் ரூபாய் அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய நிலையில் செலுத்தாமலே இருந்தார்கள் என்பது உணவு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும்.

[திரு. கே. பி. கோபால்] [1973 ஆகஸ்ட் 8

அவர்கள் 73 ரூபாய் என்ற விலையில் ஓரளவு இங்கே கொடுத்து விட்டு மீதியை 222 ரூபாய் வீதம் கேரளாவுக்கு கடத்தி விடுகிறார்கள். இப்படிப்பட்டவர்களை எல்லாம் விட்டுவிட்டு ஏழை விவசாயிகளைத் துன்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

கரும்பு உற்பத்தி செஸ் வரி 9 தனியார் ஆலைச் சொந்தக்காரர் களிடமிருந்து 3½ கோடி ரூபாய் வசூல் செய்யப்படாமல் இருக்கிறது. கூடலூரை அடுத்த லோயர் டாம் பகுதியில் சென்ற ஆண்டு சாராயக் கடையை ஒருவர் ஏலம் எடுத்தார். அவர் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர். அந்தப் பகுதி வட்டச் செயலாளருடைய சகோதரர் என்ற காரணத்தால் பல ஆயிரக்கணக்கான ரூபாயை இதுவரை வசூல் செய்ய முடியவில்லை. அதிகாரிகள் அவரை அணுகப் பயப்படுகிறார்கள். அப்படி இருந்தும் மற்ற ஏழை விவசாயிகளைக் கொடுமைப்படுத்துகிறார்கள். விவசாயப் போராட்டத் தலைவர்களை சிறையில் 'சி' வகுப்பில் வைத்து எப்படிக் கொடுமைப்படுத்துகிறார்கள் என்று பலமுறை சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

ஊழல் புகார்களுக்குப் பதில் கொடுத்துவிட்டதாகக் கூறுகிறார்கள். அவை முழுமையாக இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். குற்றச்சாட்டில் ஒன்று மதுரை மாவட்ட மாநாட்டின்போது கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக ஆக்கியது பற்றியாகும். அதிலே ஒரு வெளியீடு 14—12—72-ல் வெளியிடப்பட்டது. மதுரை மாநாடோ ஆகஸ்ட் மாதம். அதிலே மதுரை மாநாட்டில் எவ்வளவு வசூலானது என்ற கணக்கு இல்லை. ஆனால் கலைஞர் அவர்கள் அந்த மாநாட்டில் வெளியிட்டிருக்கிறார்கள். செலவைக் கழிக்காமல் நன்கொடை மூலமாகவும், டிக்கட் வசூல் மூலமாகவும் வசூலான தொகை ஐந்து லட்சத்து பத்தாயிரம் ரூபாய் என்று கூறி இருக்கிறார்கள். இந்தப் பதிலைப் பார்த்தால் அது சென்னையில் தி.மு.க. அறக்கட்டளைக்கு 3 லட்சமும், மதுரை மாவட்டத்தில் 4 லட்சமும் ஒதுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

அண்ணா அவர்கள் ஆட்சிக் காலத்தில் இருந்ததை விட கலைஞர் ஆட்சிக் காலத்தில் விளம்பரத் துறைக்கு அதிகப் பணம் ஒதுக்கப்படுகிறது என்று முன்பு எடுத்துச் சொன்னபோது அது தவறான புள்ளிவிவரம் என்று முதலமைச்சர் அவர்கள்

கூறிவிட்டார்கள். ஆகவே, நான் மீண்டும் அந்த விவரத்தைப் பற்றி ஆராய்ந்து பார்த்தேன். அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது விளம்பரத் துறைக்கு 2.18 லட்சந்தான் செலவிடப்பட்டது. ஆனால் கலைஞர் ஆட்சிக் காலத்தில் 13 லட்சம் ரூபாய் விளம்பரத் துறைக்காகச் செலவிடப்பட்டிருக்கிறது என்றார்கள். இவ்வளவு அதிகமாக விளம்பரத்திற்காகச் செலவழித்துவிட்டு முரசொலிக்கு சிறிய தொகை கொடுத்திருந்தால் வாதத்திற்காகவாவது ஏற்றுக் கொள்ளலாம். 1968–69-ஆம் ஆண்டு 14 வரிசை, 16 வரிசை என்று பரிசுச் சீட்டுகள் வெளியிட்ட நேரத்தில் முரசொலிக்கு விளம்பரத்திற்காகக் கொடுத்த தொகை 846 ரூபாய்தான். ஆனால், 1972–73 ஆம் ஆண்டில் எட்டு மாதத்திற்கு மாதம் 18,716 ரூபாய் கொடுக்கப்பட்டிருக்கிறது. பதினெறு வரிசை வந்த நேரத்திலேயே 846 ரூபாய்தான். இன்று இரண்டு வரிசை வாங்குவதற்கே லாட்டரி அடித்துக் கொண்டிருக்கும் நிலையில் 18,716 ரூபாய் முரசொலிக்கு விளம்பரத்திற்காகக் கொடுக்கப் பட்டிருக்கிறது. (மணி அடிக்கப்பட்டது) இந்த அளவோடு பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி உரையை முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. க. மு. இராசகோபால்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுகின்ற கட்சி மீது எதிர்க்கட்சியில் இருக்கிற ஒரு சிலர் நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தையும், கண்டனத் தீர்மானத்தையும் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் தீர்மானங்களை எதிர்த்து என்னுடைய கருத்துக்களை உங்கள் மத்தியில் வைக்கிறேன்.

எந்தத் தலைவர் தமிழகத்தில் எங்களை எல்லாம் ஆளாக்கி இந்த அளவுக்கு அரசியலில் ஈடுபடுத்தி, இந்த ஆட்சியையும் கைப்பற்றி எங்களிடம் கொடுத்து விட்டுப் போனாரோ அந்தப் பேரறிஞர் அண்ணா அவர்களை அண்ணாதுரை என்றும், எத்தனையோ பேர் சொத்தார்கள், அவர்களுக்கெல்லாம் ஒன்றுமில்லை, இந்த அண்ணாத்துரைக்குக் கல்லறையா என்றெல்லாம் பேசிய ஹாண்டே அவர்கள் இன்று இந்த மன்றத்தில் அண்ணா அண்ணா என்று அவர் வாயில் வந்ததைக் கேட்டு உள்ளபடியே மனதாரப் பாராட்டி அவருக்கு என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. க. மு. இராசகோபால்] [1973 ஆகஸ்ட் 8

சுயமரியாதை இருக்கிறதா என்று பேசினர். அந்தச் சுயமரியாதையை நாங்கள் முதல் முதலில் ஈரோட்டுப் பள்ளியிலும் அடுத்து காஞ்சிபுரம் பள்ளியிலும் படித்தவர்கள். 1950, 1960, 1970, 1971, 1972, 1973-ல் வந்தவர்களுக்குச் சுயமரியாதையைப் பற்றித் தெரியாது. அந்தச் சுயமரியாதையைப் பற்றிப் பேசுவதற்கு இந்தத் தமிழகத்தில் மட்டும் அல்ல, இந்தியத் தூணைக் கண்டத்தில் மட்டுமல்ல, உலகத்திலே எந்த மூலையில் இருப்பவர்களானாலும் எத்தனை நாட்கள் கொடுத்தாலும் சுயமரியாதையைப் பற்றிப் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றைப் பற்றிப் பேசுகின்ற போது ஆரியர்கள் என்று சொன்ன நேரத்தில் மிக வருத்தப் பட்டு ஒருவர் சொன்னார். பொதுவுடைமைக் கட்சிக்காரர்கள் கூட ஆவேசப்பட்டார்கள். நாங்கள் சொல்லவில்லை. நாங்கள் சொன்னால் வருத்தப்படக்கூடும்.

அதே பொதுவுடமைக் கட்சியிலிருந்து ஒருவர் ராவுஜி என்பவர் வால்காவில் இருந்து கங்கை வரையில் என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார்கள். அதில் மத்திய ஆசியாவிலிருந்து வந்த, ஆடுமாடுகள் ஓட்டிக் கொண்டு வந்த ஆரியர்கள் இந்த நாட்டில் சிந்து சமவெளியில் குடியேறியுள்ளார்கள்; அவர்கள் நடந்து கொண்ட முறை பற்றியும், அவர்கள் உண்டு வந்த உணவைப் பற்றியும், மேலும் அவர்கள் காண்டாமிருகத்தில் இருந்து, பன்றியில் இருந்து, நாயிலிருந்து எந்த மிருகத்தையும் விடவில்லை; தாய், தங்கைகள், அண்ணன் மனைவி, தம்பி மனைவி என்ற உறவு முறை கூடக் கிடையாது; அப்படியெல்லாம் அவர்கள் காலத்தைக் கடத்தினார்கள் என்று அந்த நூலில் அவர்கள் எழுதியிருக்கிறார்கள். அதை நான் 1965-ல் மத்திய சிறையில் இருந்த போது படித்தேன். அதை எழுதியவர் ஈரோட்டு பெரியாரும் அல்ல, பேரறிஞர் அண்ணாவும் அல்ல. அதை எழுதியவர் பொதுவுடமைக் கட்சியைச் சார்ந்தவர். நேரு அவர்கள் எழுதிய உலகச் சரித்திரத்தைப் படித்துப் பார்க்கட்டும். தமிழ்நாட்டில் திராவிடர் என்ற இனம் இருந்து வருகிறது. அது ஒரு காலத்தில் நாலாயிரம், ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் மனிதன் நாகரீகமற்றிருந்தபோது உள்ளதமான நிலையில், கடல் கடந்து

1973 ஆகஸ்ட் 8] [திரு. க. மு. இராசகோபால்]

வாணிபத்தில் ஈடுபட்டு பொருள் ஈட்டிய வரலாற்றுப் பெருமை வாய்ந்த அந்த இனம் இன்னும் தென்னாட்டில் இருக்கிறது என நேரு அவர்களே எழுதியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: உறுப்பினர் அவர்கள் இந்திய நாட்டுச் சரித்திரத்தைச் சொல்லித் தருகிறார்களா? அல்லது இங்கு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து அல்லது எதிர்த்துப் பேசுகிறார்களா என்று எங்களுக்குப் புரியவில்லை.

திரு. க. மு. இராசகோபால்: சரித்திரத்தைப் பற்றி நான் சொல்லவில்லை. சரித்திரத்தைப் பற்றிய பேச்சு வந்ததால், ஆரியர்கள் என்பவர்கள் இருந்திருக்கிறார்கள் என்பதை ஆதாரத்தோடு சொல்ல வேண்டியிருப்பதால் சொல்கிறேன். எப்படி அவர்களுக்கு அப்படிச் சொல்ல உரிமை இருக்கிறதோ அதை எதிர்த்துப் பேச எனக்கும் உரிமை இருக்கிறது. அம்மையார் அவர்கள் என் நேரத்தில் குறுக்கிடாதிருக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

1935-க்கு முன்னால் மத்திய ஆசியாவிலிருந்து குடியேறிய ஆரியர்கள் பற்றிய சரித்திரத்தை பலர் எழுதியிருக்கிறார்கள். பலவிதமாக மாற்றப்பட்டிருக்கிறது. ஒன்றாவது வகுப்பு முதல் ஆறாவது வகுப்பு வரையில் உள்ள சரித்திரத்தைப் பார்த்தால் முதலில் ஆரியர்கள் பின்னர் திராவிடர்கள் என்றிருக்கும். சிந்து சமவெளிப் பிரதேசத்தில் உள்ள பசும்புல் வெளியில் ஆரியர்கள் வந்து குடியேறினார்கள். முதலில் நாட்டாண்மைக்காரர்களாக இருந்து பின்னர் குறுநில மன்னர்களாகி, பிறகு பெருநில மன்னர்களாக, அப்படித்தான் தசரதன் மன்னனானான். அவனுக்கு ராமன், லட்சுமணன், பரதன், சத்துருக்கனன் என்ற நான்கு பிள்ளைகள். வரலாறு இருக்கிறது. இன்று அவை மறைக்கப் பட்டிருக்கின்றன. அதைப் பற்றி இங்கே நான் சொன்னேனே தவிர ஆரியர்களுக்கோ அல்லது மற்றவர்களுக்கோ நான் விரோதியல்ல.

ஆனால், இங்கு ஜாதியைப் பற்றிச் சொன்னால் ஆவேசப் படுகிறார்கள், அம்மையார் அவர்கள் கூட ஆவேசப்படுகிறார்கள். ஜாதிக் கொடுமை இன்னும் இல்லையா? எப்பிரிவினரும் ஆலயத்திற்குள் செல்லலாம், அதை காந்தியடிகள் செய்து

[திரு. க. மு. இராசகோபால்] [1973 ஆகஸ்ட் 8

விட்டார்கள் என்று சொன்னார்கள். ஆனால் இவர்கள் எல்லாம் அர்ச்சகர்களாக இருக்கலாம் என்ற தீர்மானத்தை, என்ற சட்டத்தை இந்த மன்றத்தில் இந்த இயக்கம்தான், இந்தக் கட்சி தான் நிறைவேற்றியிருக்கிறது. (ஆரவாரம்) ஐயாயிரம் ஆண்டுகளாக அடிமைப்பட்டு கிடந்த பிரிவினரை உயர்த்தும் சட்டத்தை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு அது தோற்கடிக்கப்பட்டிருக்கிறது. அது சட்டம் படித்த அம்மையார் அவர்களுக்குத் தெரியாதா? அவர்கள் ஏன் சென்று அவர்களுக்காகப் பேசியிருக்கக்கூடாது? அவர்கள் வக்காலத்து வாங்கியிருக்கலாமே. அப்போது ஜாதி இருக்க வேண்டுமென்பதுதான் உங்கள் இயக்கத்தின் கருத்தா?

ஊழல், ஊழல் என்று சொல்கிறார்கள். 1971 மார்ச் 19-ஆம் தேதி எங்கள் மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகக் குழுக் கூட்டம் எம். ஜி. ஆர். தோட்டத்தில் நடந்தது. அவர்கள் சரியாக மூன்று மணிக்கு வந்தார்கள். வந்து அமர்ந்தவுடன் பேச ஆரம்பித்தார்கள். என் நண்பர்களே, இங்கு உங்களிடம் நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒருவர் நம்முடைய இயக்கத்தில் எப்படியோ லஞ்சம் வாங்கி வீடு வாங்கியிருக்கிறார். அவர் சட்ட மன்றத்தில் சொல்கிறபோது நான்கு லட்சம் ரூபாய்க்கு வாங்கினேன் என்று சவால் விட்டுப் பேசுகிறார். நான்கு லட்சம் ரூபாய்க்கு வாங்கியிருக்கிற வீட்டை, நான் எட்டு லட்சம் ரூபாய் கொடுக்கிறேன் எனக்குக் கொடுப்பாரா? என்று அந்தக் கமிட்டிக் கூட்டத்தில் பேசினார்கள். இன்று அவரே எங்களுடைய இயக்கத்தில் ஊழல் இல்லை, ஊழல் இல்லை என்று பேசினால் என்ன பொருள்? நான் அவர்களுடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை. எதிர்முகாமில் இன்று அவர் இருக்கிறார். அதே போல் ஆதியைப் பற்றியும் எம்.ஜி.ஆர். அவர்கள் அங்கு பேசினார்கள். அந்த அளவிற்குப் பேசியவர்கள் இன்று தன் கட்சியில், அவர்களே இன்று தன் பக்கத்தில் வைத்து இருந்தால் அது ஊழல் இல்லையா?

திரு. முனு ஆதி: உறுப்பினர் அவர்கள் நிதானமாகப் பேசினால் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பது தெரியும். யாரைப் பற்றி அவர்கள் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. ஆதியைப் பற்றிச் சொன்னார்கள் என்று சொன்னார்கள். அப்படி

எங்கள் தலைவர் அவர்கள் சொல்லுகிறபோது, அப்படிச் சொன்னது உண்மை என்றால் நடவடிக்கை எடுத்து அதை நிரூபிக்க வேண்டும். ஆதியம் இருந்தால் சொல்லுவோம். ஆதியம் இருந்தால் சொல்லுவோம். ஆதியம் இருந்தால் சொல்லுவோம். ஆதியம் இருந்தால் நடவடிக்கை எடுத்து நிரூபிக்கவேண்டும்.

திரு. க. மு. இராசகோபால்: ஆதியம் அவர்களுக்கு இருக்கிறதோ இல்லையோ என்னைப் பொறுத்தவரையில் எனக்கு இருக்கிறது. ஆதியைப் பற்றி சொல்லச் சொல்கிறார்களா? அல்லது [illegible] சொன்னதைச் சொல்கிறேன் என்பதைத்தான் [illegible] சொல்கிறேன்.

திரு. முனு ஆதி: அவரைப் பற்றிச் சொன்னதையும் நானும் பேசுவேன்.

திரு. க. மு. இராசகோபால்: இங்கு ஊழல், ஊழல் என்று சொல்கிறீர்கள். இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சோன் மூலம் 60 லட்சம் ரூபாய் ஒருவன் பெற்றுக்கொண்டு போனதாகவும் அவனை கையும்களவுமாக காவல் துறையினர் பிடித்ததாகவும் அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு இரண்டு நாட்களில் வழக்கு முடிந்து பின் அவர்கள் மருத்துவ மனைக்குச் சென்று பின்னர் சிறைச் சென்று அப்புறம் செத்தார்கள் பிடித்த அதிகாரியும் செத்தான், அவனும் செத்தான். ஆனால், ஊழல் ஊழல் என்று சொல்கிறவர்கள் அந்த சர்க்கஸை ராஜினாமா செய் என்று சொல்லியாருக்கும் தைரியம் வரவில்லை. எங்களைப் போய்த் தைரியம் இருக்கிறதா என்று கேட்பவர்கள் அவர்களைக் கேட்பதற்கு என் தைரியம் வரவில்லை. அந்தப் பணம் யாருக்குச் சொந்தம் (குறுக்கீடு) இந்த நாட்டை ஆளுகிற சர்க்கார் மீது, 55 கோடி மக்கள் நம்பிக்கை இருக்கிற தனி தகுதியின் மீது, இந்த அம்மையாரின் மீது குற்றம். வழக்கு முடிந்து விட்டது. தீர்ப்பு பணம் யாருக்குச் சென்று சேர்ந்தது? இதுவரையில் என்ன வெளியே வரவில்லை? இதற்குரிய பதில் சொல்ல வேண்டாமா? அனுதினமும் ஒரு வேடிக்கை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: அப்போது தங்கள் கட்சியும் அவர்களோடு கூட்டாக இருந்தது.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, on a point of order. I would like to have a ruling from the Chair. I want to know whether it is right to discuss about the Central affairs in this House, particularly about corruption matters, about which there is nobody to defend in this House.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்தக் கட்சிக்காரர்கள் இங்கு இருக்கிறார்கள்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, particularly corruption charges relating to the Central Government should not be brought before this House unless there is somebody to defend the persons concerned. This matter relates to the Ruling Party at the Centre.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கட்சியைப் பற்றித்தான் சொல்கிறார்கள்.

திரு. க. மு. இராசகோபால்: 60 லட்சம் ரூபாய் இன்னும் யாருக்குச் சொந்தம் என்று தெரியவில்லை. இது குற்றச்சாட்டுத் தானே தவிர யார் மீதும் நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. கொடுத்தார்களே, அவர்களைக் கேட்கிறேன்.

கேரள மாநிலத்தில் கடுமையான உணவுப் பஞ்சம், கல்லூரிகள் மூடப்பட்டன, நாட்டு மக்கள் பட்டினியால் செத்தனர், நடுவீதியிலே குத்திக்கொள்கிறான் அரிசி கேட்டவன் என்று இப்படியெல்லாம் பத்திரிக்கையில் செய்தி வருகிறது. அத்தனைக் கட்சிக்காரர்களும் சேர்ந்து அம்மையார் இடத்தில் போய் இருக்கிறார்கள். ஆந்திரத்தில் பஞ்சம், மைசூரில் பஞ்சம், பம்பாயில் பஞ்சம், இப்படி எல்லாப் பகுதிகளிலும் வில்லைவாசியேற்றம் என்று பத்திரிக்கையில் வருகிறது. அதையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அதைப் பற்றி ஆராய்வதை விட்டுவிட்டு, சினிமா நடிகர் ஒருவரோடு பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் 45 நிமிடம் ரகசியமாகப் பேசியிருக்கிறார்கள். பேசியிருப்பதைப் பற்றிப் பரவாயில்லை. அவர் 11 லட்ச ரூபாய் வரி பாக்கி வைத்திருப்

1973 ஆகஸ்ட் 8] [திரு. க. மு. இராசகோபால்]

பவர், பிரதமரோடு ரகசியமாக 45 நிமிடம் பேசியிருக்கிறார் என்றால், வரி பாக்கிக்கும், இதற்கும் ஏதோ சம்பந்தம் இருக்கிறது என்று மக்கள் சந்தேகப்படுகிறார்கள்.

இன்றைக்கு விவசாயிகளைப் பற்றிப் பேசினார்கள். ரூ. 2, ரூ. 1 கூலி வாங்கக்கூடியவர்கள் வாங்கிய கடனைத் திருப்பித்தர முடியவில்லை என்று கிளர்ச்சி செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்ற நியாயத்தைப் பேசினார்கள். ஆனால் 11 லட்ச ரூபாய் வரி பாக்கி ஒருவர் வைத்திருக்கிறார், அவர் ஒரு பெரிய பணக்காரர், பொது மக்களுக்குச் சேர வேண்டிய பணத்தைக் கட்டாமல் இருக்கலாமா, இந்த நாட்டிலே தொழில் ஆரம்பிப்பதற்குத் தேவைப்படுகிற மூலதனம் அது, அதைக் கட்டாமல் இருக்கலாமா? அப்படிப்பட்ட ஒரு பணக்காரரோடு, வரி கட்டாமல் இருப்பவரோடு இந்த நாட்டுப் பிரதமர் 45 நிமிடம் பேசியிருக்கிறார், நாட்டில் இருக்கிற முக்கியப் பிரச்னைகளை ஒதுக்கிவிட்டுப் பேசியிருக்கிறார். இப்படி இருக்கிற நிலையில் இந்த நாட்டிலே இருக்கும் 5 கோடி மக்களின் நம்பிக்கையைப் பெற்ற இந்த அரசின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வருகிறார்கள்.

இன்னொன்றையும் சொல்கிறேன். அந்த எம்.ஜி.ஆர். அவர்கள், அடையாறில் இடம் வாங்கியிருக்கிறார். யார் வாங்க வேண்டும் நிலம்? ஏழை எளியமக்கள், வீடு வசதி இல்லாத மக்கள் வாங்க வேண்டும். அவர் யாரிடமிருந்து வாங்கியிருக்கிறார்? இந்த அரசிடமிருந்து வாங்கி இருக்கிறார். . .

திரு. ஏ. சுவாமிதாஸ்: கொடுத்தது யார்?

திருமதி த. ந. அனந்தநாயகி: கொடுத்தது யார்?

திரு. க. மு. இராசகோபால்: கொடுத்தது முன்னாலே இருந்த ரெவின்யூ அமைச்சர், 1971-லிருந்து சட்டமன்றத் தலைவராக இருந்தவர் கொடுத்தார்கள். அவர் கொடுத்த நேரத்தில் என்ன கொடுக்கிறோம் என்று தெரியாமல் கூட இருந்து இருக்கலாம், அவர் கையெழுத்துப் போட்டுவிட்டார், பாவாயில்லை. (குறுக்கீடு) ஒருவர் கொடுத்தார் என்றால் வாங்குபவருக்குக் கொஞ்சம் உணர்வு வேண்டாமா?

[1973 ஆகஸ்ட் 8

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: முன்னால் இருந்த ரெவின்யூ அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள் என்று கூறினர்கள். தலைமையமைச்சருடைய சம்பந்தம் இல்லாமலேயா கொடுத்து விட்டார்? தாங்களேவா கொடுத்துவிட்டார்?

திரு. க. மு. இராசகோபால்: தலைவரவர்களே, நீங்கள் கூட உங்கள் தலைவர்களைப் பற்றிப் பேசுகிறபோது வக்காலத்து வாங்கிப் பேசுகிறீர்கள். அதைப்போல் நாங்களும் அப்போது வக்காலத்து வாங்கிப் பேசியிருக்கிறோம். இப்போது நம்பிக்கை யில்லாத் தீர்மானம் கொண்டு வந்திருப்பதால் இதைப் பற்றிப் பேசுகிறோம். அப்போதிருந்த ரெவின்யூ அமைச்சர் கொடுத்திருந்தாலும், அதை அவர்கள் திரும்ப ஒப்படைக்க வேண்டாமா? இது வரையில் ஒப்படைக்கவில்லை. ஊழலைப் பற்றிப் பேசுகிறபோது, இதைப் பற்றியும் நான் சொல்ல வேண்டியிருக்கிறது; லட்சக்கணக்கான ரூபாய் வரி பாக்கி பற்றியும் எடுத்துக் கூற வேண்டியிருக்கிறது. இந்த நாட்டிலே இம்பாலா கார் வைத்துக் கொண்டிருப்பவர்கள் வரி கட்டவில்லை என்று சொல்கிறபோது, மற்றவர்கள் மீது ஊழல் என்று குற்றம் சாட்டுகிறபோது கொஞ்சம் யோசித்துச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இவர்கள் ஏன் இவ்வளவு ஆத்திரப்படுகிறார்கள் என்று தெரியவில்லை. நான் போன சட்டமன்றக் கூட்டத்திலேயே கூறினேன். அப்போது டாக்டர் ஹாண்டே அவர்கள் ஆதரித்தார்கள். இப்போது வேறு கட்சிக்குப் போய்விட்டதால் என்ன நிலை எடுப்பார்களோ தெரியாது.

காஞ்சிபுரம் நடேச முதலியார் அவர்கள் எவ்வளவு நிலம் வேண்டுமானால் வைத்துக் கொள்ளட்டும், அதைப் பற்றிக் கவலையில்லை. அந்த மயானப் புறம்போக்கையாவது விடலாம் அல்லவா? அவர்களுடைய கட்சிக்கு ஒரு நியாயம், இன்னொரு கட்சிக்கு இன்னொரு நியாயம் என்று சொன்னால் எப்படி?

அது போகட்டும். என்னுடைய தொகுதியில் இருக்கும் அ.தி.மு.க. அமைப்பாளரைப் பற்றிச் சொல்கிறேன். உத்திரமேரூர் வீராசாமி—என்னுடைய தொகுதி உத்திரமேரூர் தொகுதி (சுறுக்கீடு) இங்கேயுள்ள வீராசாமி இல்லை—

1973 ஆகஸ்ட் 8] [திரு. க. மு. இராசகோபால்]

உதிரமேஸ்வர் பிராசாமி—திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் கூட இந்த வீராசாமியா என்று கேட்டார், எப்படி—அவர் புலிப்பாக்கம் எரிப் புறம்போக்கில் சர்வே எண். 141-ல் 19 ஏக்கர் 5 சென்ட் நிலத்தில் 4 ஏக்கர் 5 சென்ட் நிலத்தை இன்னும் ஊழு கொண்டிருக்கிறார். . .

திரு. க. உரொ. எட்மண்ட் : சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். சட்டமன்றத்தில் இல்லாத உறுப்பினர்களைப் பற்றிப் பேசக்கூடாது. (ஒரே நேரத்தில் பலகுரல்கள்) I am addressing the Chair. I am not addressing any of the Members in this House. I want a reply from the Chair.

(Thiru V. Krishnamoorthy rose)

THIRU G. R. EDMUND : Sir, I want a reply from the Chair.

அவர்கள் பேசுவதைப் பற்றி எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. நாங்கள் பேசும்போது, வட்டச் செயலாளர்கள், மாவட்டச் செயலாளர்கள் பற்றியும் பேசுவதற்கு அனுமதி தருவீர்களா என்கிற உறுதியை தாங்கள் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் பேசும்போது பேசியிருக்கிறார்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நாங்களும் திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்கள் பற்றிப் பேசுவோம். அதற்கு அனுமதியளிக்கத் தயாராக இருக்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் பண்ருட்டிச் செயலாளரைப் பற்றி பேசினர். கடிதம் கூட காட்டினர்.

THIRU G. R. EDMUND : He was speaking with reference to a document.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியே இருக்கிறவர்களைப் பற்றிப் பேசலாம். பேசக்கூடாது என்று இல்லை. அவர்கள் கையில் குறிப்பு வைத்துக் கொண்டு பேசுகிறார். பேசலாம்.

THIRU G. R. EDMUND : He is not having a document. He is having only notes.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெளியே இருக்கிறவர்களைப் பற்றிப் பேசலாம். டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட பேசியிருக்கிறார்கள். அதிலே ஒன்றும் தவறு இல்லை.

திரு. முனு ஆதி : டாகுமென்ட் வைத்துக்கொண்டு பேசியிருக்கிறார் என்று சொன்னீர்கள். அதைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாகுமென்ட் இருக்க வேண்டுமென்பதில்லை.

திரு. முனு ஆதி : வைத்துக் கொண்டு பேசுகிறார் என்று தீர்மானமாகச் சொன்னீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆதாரத்தோடு பேசுகிறார் என்று தான் சொன்னேன்.

THIRU G. R. EDMUND : Sir, on a point of order . . . .

THIRU V. KRISHNAMOORTHY : It is only a point of disorder.

திரு. க. உரொ. எட்மன்ட் : சார், ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். பேசுகிற உறுப்பினர் ஆதாரத்தை வைத்துக் கொண்டு பேசுகிறார் என்று தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்த ஆதாரத்தை ஏற்கனவே நீங்கள் பார்த்திருக்கிறீர்களா ? அவர்கள் உங்களுக்கு அதைக் காட்டியிருக்கிறார்களா ? அதைப் பார்த்துவிட்ட பிறகுதான் ஆதாரத்தோடு பேசுகிறார் என்று சொன்னீர்களா என்று தெரிவிக்க வேண்டுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : வெளியே இருக்கிறவர்களைப் பற்றி ஏதாவது பேசப்படுமானால், பேசுகிறவர் பேசுகிற பேச்சுக்கு முழுப்பொறுப்பு ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்படி அவையில் பேசப்பட்டது தவறு என்று நிரூபிக்கப்படுமானால்,

அப்படி நிரூபிக்கப்படுகிற கால கட்டத்தில் அவர் வருத்தம் தெரிவிக்கும் நிலை உண்டு. பேசுகிறவர் பொறுப்பு எடுத்துக் கொண்டு பேசுவதாக இருந்தால் அனுமதிக்கலாம், அதிலே தவறு இல்லை.

திரு. ஈ. மு. இராசகோபால் : பொறுப்பு எடுத்துக் கொள்கிறேன். உண்மை என்று சொன்னால் அவர்கள் ராசினமா செய்து விடத் தயாராக இருக்கிறார்களா?

திரு. க. ரோ. எட்மண்ட் : நாங்கள் நிரூபித்துக் காட்டுகிறோம், நீங்கள் ராசினமா செய்துவிடத் தயாரா?

திரு. முனு ஆதி : (உட்கார்ந்து கொண்டே) உங்கள் கிட்டே இருக்கும் 150 எக்கர் விஷயத்தையும் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்கார்ந்த இடத்தில் உட்கார்ந்தபடியே பேசுவது தவறு, முறையல்ல.

திரு. முனு ஆதி : தப்பு தான், சார். பி.ப. 12-30

திரு. க. மு. இராசகோபால் : என்னுடைய 150 எக்கரைப் பற்றி திரு. முனு ஆதி அவர்கள் ஆதாரத்தோடு சொல்வதாகச் சொல்கிறார்கள். சொல்லட்டும். சர்வே நம்பர் . . .

திரு. கே. டி. கே. தங்கமணி : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்பது இந்த அரசின் பேரில் நம்பிக்கை இல்லை என்றுதான் தீர்மானம் கொண்டு வரப்பட்டிருக்கிறதே ஒழிய, அந்தக் கட்சியின் பேரிலோ அல்லது எ.டி.எம்.கே. கட்சியின் பேரிலோ நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பது பற்றி தீர்மானம் கொண்டுவரப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஒரு அரசின் மீது நம்பிக்கை இல்லை என்று தீர்மானத்தை எடுத்து மொழிந்தவர்கள், அதை ஆதரிப்பவர்கள் எந்த நிலையில் இருக்கிறார்கள் என்பதை நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும். ஆகவே, அவர்களுடைய நிலையை விளக்குகின்ற வகையில் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சியினரின் பேரில் நம்பிக்கை வைத்திருந்தால் 'உங்கள் மீது நம்பிக்கை இருக்கிறது' என்று ஒப்புக்கொண்டு விடலாம்.

ஆனால் எதிர்க்கட்சியினர் மீது நம்பிக்கை ஏற்படாது என்ற காரணத்தினால் எங்கள் மீது நம்பிக்கை இருப்பவர்கள் என்ன காரணத்தினால் நம்பிக்கை இருக்கிறது என்று அத்தகைய விளக்கங்களை தெளிவுபடுத்துகிறார்கள்.

திரு. ஆர். பொன்னப்பு நாடார் : எதிர்க்கட்சிக்காரர்கள் கையில் பொறுப்பு இல்லை. ஆளும் கட்சிக்காரர்கள் கையில் பொறுப்பு இருக்கிறது. ஆகையால்தான் நம்பிக்கை இல்லை என்ற தீர்மானம் ஆளும் கட்சி அரசின் மீது கொடுக்கப்பட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. அவர்கள் வேண்டுமானால் சில விளக்கங்களைச் சொல்லலாம். அதுவல்லாமல் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு தலைவரைப்பற்றி தாழ்மையாகப் பேசுவது என்று சொன்னால், அது நமது மன்றத்தின் விவாதத்திற்கு உகந்ததாக இருக்காது என்பதை தங்கள்மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : ஆட்சியினுடைய நிர்வாகத்தினுடைய குறைகளை எடுத்துச் சொல்லுகின்ற வேளையிலே நிர்வாகக் குறைகளுக்கு ஆட்சி பொறுப்பேற்கிறது. மறுப்பதற்கென எதிர் குற்றம் கூறுவதிலே ஆனால் ஆட்சியில் உள்ளவர்களைப் பற்றி தங்களுக்குத் தோன்றியவாறு எல்லாம் எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் சில கருத்துக்களைக் குறிப்பிடுகிற நேரத்தில், அதனுடைய மறு வினைவாகத்தான் இந்தக் கருத்துகள் வெளிப்படுகின்றன. தனிப்பட்டவர்களைப் பற்றி பேசுவதில்லை, அப்படிப் பேசுவதாக இருந்தால் நிர்வாகக் குறைகளைப் பற்றியே பேசப்படும் என்ற முடிவுக்கு கூட்டுப்பாட்டுக்கு இரு தரப்பினரும் வருவார்களேயானால் இத்தகைய கருத்துக்கள் வராது. பொறுப்பு மூன்று வகையாக இருக்கிறது. ஒன்று சட்டமன்றத்திற்குப் பொறுப்பு, மற்றொன்று ஆட்சிக்குப் பொறுப்பு, மூன்றாவதாக தாங்களே ஏற்படுத்தியதாக நடப்பதற்குத் தத்தமக்குள்ள பொறுப்பு. ஆகவே, பொறுப்பு என்பது இப்படி வேறுபட்டிருப்பதால் இப்படிப்பட்ட கருத்துக்கள் வெளிவரத்தான் செய்யும். அது சட்டப்படி குறை அல்ல என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

1973 ஆகஸ்ட் 8]

திருமதி த. ந. அனந்தநாயகி: யோக்யதையாக நடந்து கொள்வது என்று சொல்கிறார்களே . . .

திரு. க. மு. இராசகோபால்: இவர்கள் பேசும்பொழுது நாட்டிலெல்லாம் கள்ளர் கூட்டம் என்று பேசுகிறார்களே? அப்படி அவர்கள் பேசும்பொழுது நான பேசியதில் என்ன தவறு? இந்த ஆட்சி வந்த பிறகு என்னென்ன நன்மைகளைச் செய்திருக்கிறது என்பதை எனக்கு முன்னால் பேசிய என்னுடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எடுத்துப் பேசினார்கள்.

கடலில் மீன் பிடிப்பவர்கள் புயலில் சிக்கி இறந்தார்கள் என்றால், அவர்களுடைய குடும்பத்திற்கு ரூ. 1,000 கொடுக்கப் படும் என்று இந்த அரசு, கலைஞர் அரசு ஆட்சிக்கு வந்த பிறகு சட்டம் நிறைவேற்றியிருக்கிறது. அப்படிப்பட்ட ஆட்சி ஒழிய வேண்டுமா?

மரமேறுபவர்கள் திடீரென்று சருக்கி விழுந்து மரணம் அடைந்தால் அவர்கள் குடும்பத்தினருக்கு ரூ. 1,000 கொடுக்கப் படும் என்ற சலுகையை இந்த அரசு அறிவித்திருக்கிறது.

பல ஆண்டு காலமாக நில வள வங்கிகளில் ஒரு விவசாயி 50 ஏக்கர், 500 ஏக்கர் வைத்திருந்தால் கூட ரூ. 10,000-க்கு மேல் கடன் வாங்க முடியாது. தமிழக அரசு, எங்களது கழக அரசு ஆட்சிக்கு வந்த பிறகுதான் கிட்டத்தட்ட ரூ. 95.000 வரையில் டிராக்டர்கள் வாங்குவதற்கு, கிணறுகள் வெட்டுவதற்கு, பம்பு செட்டுகள் வைப்பதற்கு கடன் வாங்கிக்கொள்ள முடியும் என்ற நிலையை ஏற்படுத்தியது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இறையானவர்கள் குறித்து 1965-ல் இந்தி எதிர்ப்பு மொழி கிளர்ச்சியில் ஈடுபட்டு உயிர் துறந்தவர்கள் குறித்து நமது பெரு மதிப்பிற்குரிய முன்னாள் முதல் அமைச்சர் அவர்கள், அன்னார் குடும்பத்தினருக்கு வருத்தம் கூட தெரிவிக்க வில்லை. அது பற்றி கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கூட எடுத்துக் கொள்ள முடியாது என்று சொன்னார். எவனோ செத்தான் என்று சொன்னார். அதே மாதிரி சின்னசாமி செத்தபொழுது எவனோ கொழுப்பு பிடித்து செத்தான் என்று சொன்னார்கள். மொழிக் கிளர்ச்சியின்பொழுது பெட்ரோல் ஊற்றிக்கொண்டு எரிந்து செத்தவர்களைப் பற்றி ஏளனமாகப் பேசியவர்களும் உண்டு. இன்றைக்கு விவசாயிகள் போராட்டத்தில் இறந்தவர்கள் குடும்பத்

[திரு. க. மு. இராசாகோபால்] [1973 ஆகஸ்ட் 8

தினருக்கு இந்த அரசு எங்களுடைய முதல்வர் அவர்கள் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் ரூ. 5,000 கொடுத்திருக்கிறார்கள். இந்த ஆட்சியா அழியவேண்டும் என்று சொல்வது? (மணி அடிக்கப் பட்டது) என்ன நியாயத்தை வைத்து இந்த அரசின் மீது நம்பிக்கை இல்லை என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்திருக் கிறார்கள்?

அடித்தளத்தில் இருக்கிற மக்களுக்கு, பிற்பட்ட நிலையில் இருப் பவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு உறுதுணையாக இந்த ஆட்சி நிற்கிறது. அவர்கள் ஓளவுக்கு இன்று நிமிர்ந்து பாதை யிலே போகிறவர்களைப் பார்த்து கேள்வி கேட்கிறார்கள். அந்த அளவுக்கு அவர்களுக்கு சுய உணர்வு வந்திருக்கிறது. சுயமரியாதை இயக்கத்தை வளர்த்த பெரியார் அவர்களின் சுயமரியாதை உணர்ச்சி நாட்டு மக்களிடத்திலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. முழுக்க முழுக்க சுய மரியாதை இந்த நாட்டு மக்களிடத்திலே ஏற்படுவதற்கு இந்த ஆட்சி மிக மிகத் தேவை என்பதைக் கூறி, இந்தக் கண்டனத் தீர்மானத்தையும், நம்பிக்கையில்லா தீர்மானத் தையும் வன்மையாக எதிர்த்து முடிக்கிறேன்.

* **திரு. ஏ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற நம்பிக்கையில்லா தீர்மானத் தையும் கண்டனத் தீர்மானத்தையும் என் முழு சக்தியோடு ஆதரிப்பதற்கு இங்கே நிற்கிறேன்.

இங்கே பேசிய கழக உறுப்பினர்களில் ஒருவர், வாராது வந்த மாமணி போல இந்த அரசு வந்திருக்கிறது என்று சொன்னார். ஆம், வாராது வந்த மாமணி போல இங்கே வந்திருக்கிறது தமிழகத்திலிருக்கிற மக்களுக்கு அல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும், அவர்களை ஆதரிப்பவர்களுக்கும் வந்திருக்கிறது.

(திரு. நா. வீராசாமி தலைமை)

இன்றைய ஆட்சியைப்பற்றி சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் ஊழல் சேற்றை உடம்பெல்லாம் பூசிக் கொண்டு, அதனை மறைப்பதற்கு ஏராளமான பணத்தை விளம்பரத்திற்காக வாரி இறைத்து, அதனாலும் அதிருப்தியை அமுக்க முடியாத நிலையில் அடக்கு முறையை கட்டவிழ்த்து

1973 ஆகஸ்ட் 8] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

விடுகிற ஆட்சி என்றுதான் சொல்லவேண்டும் என்று நான் கருதுகிறேன். இதனைச் சொல்லும்பொழுது, ஊழல் என்று சொல்லும் பொழுது, இதனை நான் ஆத்திரத்தோடு சொல்லவில்லை. மிகுந்த வேதனையோடு சொல்கிறேன். இந்த நாட்டை நேசிக்கிறவன், இந்த நாட்டில் நல்லாட்சி நிலவவேண்டும் என்று ஆசைப்படுகிறவன் என்ற முறையிலே, அத்தோடு இந்த கட்சி ஆட்சிக்கு வருவதிலே அந்தப் பொறுப்பிலே ஒரு பங்கை ஏற்றவன் என்ற முறையிலே மிகுந்த வேதனையோடுதான் சொல்கிறேன். ஆனால் சொல்லும்பொழுது கண்டித்துச் சொல்கிறேன். இங்கே பேசும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் மற்றவர்கள் இதைச் செய்யவில்லையா என்றெல்லாம் சொன்னார்கள். மற்றவர்கள் செய்தார்கள் என்பது இவர்கள் செய்யவில்லை என்பதற்குச் சான்றாக முடியாது. இவர்கள் என் செய்கிறார்கள் என்பதுதான் பிரச்னை.

நேற்று இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கந்தப்பன் அவர்கள் அப்படிச் செய்திருந்தால் வருமான வரி இலாகாவிற்குத் தெரிந்திருக்குமே என்று கேட்டார்கள். வருமான வரி இலாகாவிற்குப் பல விஷயங்கள் தெரிவதில்லை. அது நமக்குத் தெரியும். ஊர் மக்களுக்குத் தெரிகிறது. நேற்றையதினம் 3 ஆண்டுகளுக்கு முன்பு, 4 ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்தார் ஒருவர், இன்றைக்கு எப்படி இருக்கிறார் என்பது. முன்னாலே குசேலராக இருந்தவர் இப்பொழுது குபேராக இருக்கிறார். முன்னாலே சாதாரண வீட்டில் இருந்தவர் இன்று பங்களாவில் குடியிருக்கிறார்; சாதாரண சைக்கிளுக்குக் கூட வக்கில்லாதவர் இன்றைக்கு ஒரு கார் அல்ல, பல கார்கள் வைத்திருக்கிறார் என்று ஊர் மக்களுக்குத் தெரிகிறது. இதெல்லாம் எப்படி வந்தது? ஆதாரத்தோடு நிரூபிக்கவேண்டும் என்று சொன்னால் அது கடினம். ஒரு விசாரணை வைத்து அந்த விசாரணையில் கூட நிரூபிக்க முடியாமல் போகலாம். ஆனால் சாதாரண மக்களுக்குத் தெரிகிறது. சில உண்மைகள் கோர்ட்டில் நிரூபணம் செய்ய முடியாமல் போகலாம், விசாரணையில் கூட நிரூபிக்க முடியாமல் போகலாம்..

திரு. செ. கந்தப்பன்: நான் ஏதோ வேடிக்கைக்காக, வாதத்திற்காக அந்தக் கருத்தை இங்கே வைக்கவில்லை. நான் மிகத் தீவிரமாக சிந்தித்துத்தான் அந்த எண்ணத்தை வெளியிட்

[திரு. செ. கந்தப்பன்] [1973 ஆகஸ்ட் 8

டேன். மிகப் பொறுப்பு வாய்ந்தவராகவும், விவரங்கள் அறிந்த வராகவும் சுப்பிரமணியம் அவர்கள் இருப்பதால்தான் அவர்களைச் குறுக்கிட்டேன். பல காரியங்களை நிரூபிக்க முடியாது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஒரு மனிதன் நீங்கள் சொன்னது போல சாதாரண ஏழையாக இருந்து, திடீரென்று பணக்காரராக ஆகிவிட்டால், நான்கு ஆண்டுகளுக்கு முன்பு வருமானவரி கட்டாதவராக இருந்து, நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு வருமான வரி கட்டத் தகுதி பெற்றிருந்தால், அவர் ஊர் வாயை மூட முடியாது, ஏமாற்ற முடியாது. நான் அறிந்தவரையில் அந்த ஊரில் இருக்கும் யாராவது ஒருவர் வருமான வரி இலாகாவிற்கு ஒரு 10 பைசா கார்டு எழுதிப்போட்டுவிட்டால், 10 ஆண்டுகளுக்கு முன்பு சாதாரணமாக இருந்த ஒருவர் இன்றைக்கு 10 லட்சத் திற்குச் சொந்தமாக இருக்கிறார் என்றால் அவ்வப்பொழுது வருமானவரித் துறையினர் எப்படி அந்தப் பணம் அவருக்கு வந்தது என்பதை நிச்சயம் கேட்பார்கள். அப்படிக் கேட்பதற்கு அவர்களுக்கு முழு அதிகாரம் இருக்கிறது. எனவே வருமான வரி இலாகாவினரிடமிருந்து ஒருவர் பணத்தை ஒளித்துவிட முடியாது என்பது என்னுடைய அழுத்தமான வாதம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, வருமான வரி இலாகா அதனுடைய வேலையை கவனிக்கட்டும். இங்கே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சி அமைந்திருக்கிறது. மக்களுக்குத் தூய்மையான, திறமையான ஆட்சியை, நிர்வாகத்தை வழங்கவேண்டிய பொறுப்பை மக்கள் அவர்களிடம் ஒப்படைத் திருக்கிறார்கள். அவ்வாறு செய்யாமல் அதற்கு மாறுக நிர்வாகத் தைக்கொண்டு செல்கிறார்கள் என்பது குற்றச்சாட்டு.

என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், இந்த தமிழகத் திலே எந்த மனிதனும், எந்த குடிமகனும் ஒரு சின்ன காரியம் நடைபெற வேண்டுமென்றாலும் அதை மேலே இருக்கின்றவர்களின் —தலைமைச் செயலகத்தில் இருக்கின்றவர்களின்—சிபாரிசு இல்லா மல் நடத்த முடியவில்லை என்ற நிலை இன்றைக்கு உருவாகி யிருக்கிறது. அந்தச் சிபாரிசுக்காக ஏராளமான பணம் செலவு செய்யவேண்டியிருக்கிறது. எல்லோருக்கும் இது தெரியும். அனுபவமும் இருக்கும். ஆளும் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் கூட மன்றத்திற்கு வெளியே இருக்கின்ற லாபியிலே

1973 ஆகஸ்ட் 8] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

உட்கார்ந்து பேசும்போது கேட்டால் சொல்வார்கள். அவர்களே மறுக்க மாட்டார்கள். இன்றைக்கு இந்தத் தமிழகத்திற்கு வந்திருக்கிற நிலை இது. இப்படியே போய்க்கொண்டிருந்தால் இந்த நாடு எங்கே போய் நிற்குமோ தெரியவில்லை.

எந்தக் காரியமும் பணம் இல்லாமல், சிபாரிசு இல்லாமல் நடைபெற முடியவில்லை. பணம் கொடுப்பதற்கு சாதாரண மக்கள் எங்கே போவார்கள்? ஒரு லட்சம், இரண்டு லட்சம் வரக் கூடிய பெரும் பணக்காரர்கள் ஆயிரம், இரண்டாயிரம் என்று வேண்டுமானால் செலவு செய்வார்கள். அதனால் அவர்கள்தான் பலனடைவார்கள். பணமும் சிபாரிசும் இல்லாததினால் நியாயமாக சாதாரண மக்களுக்குக் கிடைக்கவேண்டிய பலன் கிடைக்க வழியில்லாமல் போய்விடுகிறது. நியாயம் கிடைக்கும், நேர்மை நடக்கும் என்ற நிலை இன்று இல்லை. இதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

இன்னொன்றையும் சொல்கிறேன். உத்தியோக உயர்வு, இடம் மாற்றம் எதுவாக இருந்தாலும் சிபாரிசு இல்லாமல் கிடைப்பதில்லை. நானும் பார்க்கிறேன். நியாயமாக, நேர்மையாக நடந்து கொள்கின்ற எந்த அதிகாரியும்—போலீஸ் அதிகாரியானாலும் சரி, ரெவின்யூ அதிகாரியாக இருந்தாலும் சரி—தங்கள் பணியை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. ஆளும் கட்சிக்காரர்கள் சொல்வதை அவர்கள் செய்யவில்லையானால் உடனே அங்கிருந்து மாற்றப்படுவார்கள்; அல்லது வேறு சில தொந்தரவுகளுக்கு ஆளாவார்கள். இப்படி அரசாங்க அதிகாரிகளின் வேலைகளில் சட்டமன்ற உறுப்பினர்கள் தலையிடுகிறார்கள். புரமோஷனு, வேலை இடமாற்றமா எதுவானாலும்—அது நியாயமானதோ நியாயமற்றதோ அதைப்பற்றி கவலையில்லை—ஆளும் கட்சிக்காரர்கள் சொல்வதைச் செய்யவேண்டும். அதனால் இன்றைக்கு நிர்வாகத்திலே இருக்கின்ற அதிகாரிகளால் தங்கள் கடமையை ஒழுங்காகச் செய்ய முடியவில்லை. கடமையைச் செய்ய விடாமல் தடுக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு கட்டத்திலும் நிர்வாகத்தில் ஆளும் கட்சியினர் தலையீடு இருக்கிறது. இது என்னுடைய மற்றொரு குற்றச்சாட்டு.

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1973 ஆகஸ்ட் 8

குறிப்பாக எந்த போலீஸ் அதிகாரியும் நியாயமாக நடந்து கொள்ள முடியவில்லே. அவர்கள் நியாயமாக நடந்துகொள்வதாக இருந்தால் எஸ்.பி., டி.எஸ்.பி., இன்ஸ்பெக்டர், சப்-இன்ஸ்பெக்டர் —அவர்கள் யாராக இருந்தாலும் ஒரு இடத்தில் அதிகநாள் இருக்க முடியாது. ஆளும் கட்சிக்காரர்கள் சொல்வதை செய்ய வில்லே என்றால் உடனே அங்கிருந்து மாற்றிவிடுவார்கள். நியாய மான காரியங்களுக்காக சிபாரிசுக்குப் போனால் பரவாயில்லே. ஊரிலே யார் யார் தவறு செய்கிறார்களோ அவர்களுக்குத்தான் சிபாரிசுக்குப் போகிறார்கள்; அவர்களுக்குத்தான் துணையாக இருக்கிறார்கள். இதை நினைக்கும்போது சில நேரங்களில் அமைச்சர்கள் மீது பரிதாபம்தான் ஏற்படுகிறது. அமைச்சர்கள் என்ன சொன்னாலும் இப்படிப்பட்டவர்கள் தங்கள் போக்கிலேயே போய்க்கொண்டிருக்கிறார்களே, அவர்களேத் தடுக்க முடிய வில்லேயே என்பதுதான் என்னுடைய கேள்வி.

விவசாயிகள் பிரச்சனைகள் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். விவசாயப் போராட்டத்தைப்பற்றி எல்லாம் முதலமைச்சரவர்கள் நேற்று பேசும்போது குறிப்பிட்டார்கள். யாரோ ஒருசில வசதி படைத்தவர்கள் வாங்கியப் பணத்தை திருப்பிக் கொடுக்கவில்லே என்று ஒரு பட்டியலேயேப் படித்துக் காட்டினார்கள். என்னுடைய குற்றச்சாட்டு அதைப்பற்றியதல்ல. மேல்தட்டுக்காரர்களேப் பற்றி நான் கவலேப்படவில்லே. மிகச் சாதாரணமான விவசாயிகள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் நலன்கள் பாது காக்கப்பட வேண்டும். விவசாயப் போராட்டத்தின்போது, சென்ற ஆண்டு கொடுத்த வாக்குறுதிகள் பல இன்னும் நிறை வேற்றப்பட வில்லே. கிணறுகள் வெட்டுவதற்கு கொடுக்கும் பணம், அந்தக் கிணற்றில் தண்ணீர் இல்லேயானால் வஜா செய்யப் படும் என்று சொன்னார்கள். அப்படி வஜா செய்யப்படவில்லே. விவசாயப் பண்டங்களே அரசாங்கமே கொள்முதல் செய்யும் என்று சொல்லப்பட்டது; கொள்முதல் செய்யவில்லே. விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு விலே நிர்ணயம் செய்வதற்கு ஒரு குழு அமைக்கப்படும் என்று சொல்லப்பட்டது; குழு அமைக்கப் படவில்லே. அந்த வாக்குறுதிகளுக்கு மாறாக சாதாரண விவசாயிகள் அல்லல்படுகிறார்கள் என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. அதற்கு மேல்தட்டுகளிலே இருக்கக் கூடியவர்

1973 ஆகஸ்ட் 8] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

கூலைக் காட்டி, முதலமைச்சரவர்கள் மழுப்பினர்கள். இப்படிப் பட்ட பதில்கள் என்றைக்கும் இந்த அரசை காப்பாற்றாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: விவசாயக் கிணறு களுக்கு கொடுக்கப்படும் பணம், தண்ணீர் இல்லாமல் போனால் வஜா செய்யப்படும் என்று ஒப்புக்கொள்ளப்படவில்லை. அதை ஒத்திப்போடலாம் என்றுதான் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதைப் பற்றி பிரிசிலீன் செய்வதற்கு கமிஷன் போடப்பட்டிருக்கிறது. எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் அதில் அங்கம் வகிக்கிறார்கள்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: குழு அமைத்து, பரிலசீன் செய்து, மெய்யாக இருந்தால் தள்ளுபடி செய்யலாம் என்று சொல்லி யிருக்கிறார்கள். ஆனால் அமைச்சரவர்கள் ஒத்திப்போடலாம் என்றுதான் சொன்னதாகச் சொல்கிறார்கள். அதைக்கூட செய்யவில்லை என்பது என் குற்றச்சாட்டு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கமிஷன் போடப் பட்டிருக்கிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அமைச்சரவர்களின் விளக்கத்திற்கு நன்றி.

அடுத்தபடியாக இன்னொன்றைச் சொன்னார்கள். கண்ணொளி வழங்குகிறோம் என்றார்கள்; வழங்கியிருக்கிறார்கள். பிச்சைக் காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கிறோம் என்றார்கள்; அளிக் கிறார்கள். கைரிக்சாக்களுக்குப் பதிலாக சைக்கிள் ரிக்சாக்கள் கொடுக்கிறோம் என்றார்கள்; கொடுக்கிறார்கள். ஆனால் இந்தக் காரியங்களுக்கு எப்படி பணம் திரட்டுகிறார்கள்? சைக்கிள் ரிட்சா நிதிக்கு ரசீது இல்லாமல் பணம் வசூலிக்கிறார்கள். சேலம் மாவட்டத்தில் 'லீ பஜார்' வியாபாரிகள் சங்கத்திடம் அப்படி வசூலித்திருக்கிறார்கள். அங்குமட்டுமல்லாமல் பல இடங்களில் ரசீது இல்லாமல் நிதி வசூலித்திருக்கிறார்கள். அதிகாரிகள் ஒரு ரேட் போட்டு, இவ்வளவு கொடுங்கள் என்று கேட்கிறார்கள். பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்கும் கண்ணொளி திட்டத்திற்கும் கூட இப்படித்தான் ரசீது இல்லாமல் அதிகாரிகள் பணம் வசூலித் தார்கள். சில இடங்களில் டிக்கட்டுகள் நம்பர் இல்லாமல்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1973 ஆகஸ்ட் 8

கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படிப்பட்ட ஒரு புதிய முறையை புகுத்தியிருக்கிறார்கள். ரசீது இல்லாமல் அதிகாரிகளைப் பணம் வசூலிக்கவிட்டால், எந்தப் பணம் எங்கே போனது, எவ்வளவு, வசூலித்தார்கள் என்பதை எப்படிக் கண்டுபிடிக்க முடியும்? ஆகவே இந்த புதிய முறையே ஊழலுக்கு இடம் கொடுக்கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, ரசீது இல்லாமல் பணம் வசூல் செய்வதாகச் சொன்னார்கள். அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதற்காக, ஒரு விளக்கத்திற்காக கேட்கிறேன். எந்த இடத்திலாவது எந்த வியாபாரியிடத்திலாவது ரசீது இல்லாமல் அதிகாரிகள் பணம் வசூலித்தார்கள் என்று குறிப்பிட்டுச்சொல்ல முடியுமா? எந்த வியாபாரியாவது அப்படி எழுதிக் கொடுத்திருக்கிறார? அப்படி கொடுப்பதாக இருந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேம். (சில குரல்கள்: யார் அப்படி எழுதிக் கொடுப்பார்கள்) அப்படி எழுதிக்கொடுப்பதற்குப் பயமாக இருந்தால், உண்மையாகவே ரசீது இல்லாமல் பணம் வசூல் செய்திருந்தால், அமைச்சர்களிடம் நேரடியாகச் சொல்லட்டும்; நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: அமைச்சரவர்கள் எழுதிக் கொடுக்கச் சொல்கிறார்கள். அப்படி எழுதிக்கொடுக்கும் துணிச்சல் யாருக்காவது இருக்குமா? ரசீது இல்லாமல் பணம் கொடுத்திருந்தாலும், அப்படிக் கொடுத்தீர்களா என்று ஒரு வியாபாரியைக் கேட்டால் இல்லை என்றுதான் சொல்வார். அவர் உண்மையைச் சொன்னால், அதனால் வரக்கூடிய கஷ்டங்கள் அவருக்குத்தான் தெரியும். அப்படி எழுதிக் கொடுக்கக்கூடிய துணிச்சல் ஒரு வியாபாரிக்கு இருக்குமானால், அவர் ரசீது இல்லாமல் பணம் தரமாட்டேன் என்று சொல்லிவிடுவாரே. வியாபாரிகள், தொழிலாளர்கள், விவசாயிகள், அதிகாரிகள்— இவர்கள் எல்லாம் உண்மையை வெளியே சொல்லமுடியாத அளவுக்கு நேர்மையை நீங்கள் கொன்றுவிட்டீர்கள். யாராவது உண்மையைச் சொல்லிவிட்டால் ஏதாவது ஒரு வழியில் அவரை நீங்கள் பழி தீர்த்துவிடுவீர்கள். அதுதான் இன்றைய நிலைமை. அதுதான் என்னுடைய குற்றச்சாட்டு.

சைக்கிள் ரிக்சா நிதிக்கு ரசீது இல்லாமல் அதிகாரிகள் பணம் வசூலிக்கிறார்கள் என்று 'லீ பஜார்' வியாபாரிகள் சங்கம் ஒரு தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அந்த தீர்மானம் பத்திரிகை

1973 ஆகஸ்ட் 8] [திரு. எ. சுப்பிரமணியம்]

யினும் வந்திருக்கிறது. அதை வைத்து நடவடிக்கை எடுக்கலாம். தனிப்பட்ட முறையில் எந்த வியாபாரியும் சொல்லமாட்டார்; சொல்வதற்கு பயப்படுகிறார்கள். ஆக, ரசீது இல்லாமல் பணம் வசூல் செய்யக்கூடாது என்று அதிகாரிகளுக்கு உத்தரவு போட வேண்டும்.

அடுத்தபடியாக, சைக்கிள் ரிக்சா விவகாரத்திற்கு வருகிறேன். ஏற்கெனவே தமிழ்நாட்டு அரசாங்கத்தினுடைய உள் நாட்டு இலாகாவிலிருந்து ஒரு சுற்றறிக்கை விட்டிருக்கிறார்கள். அந்த சுற்றறிக்கையின் எண் 13333/டி.ஆர்.-1/72-6. அது வெளியிடப் பட்ட தேதி 18—11—1972. அதிலே சைக்கிள் ரிக்சா வாங்குவதற்கு பாங்குகள் கடன் கொடுக்கக்கூடாது; கை ரிக்சாவை சைக்கிள் ரிக்சாவாக மாற்றுவதற்குக்கூட கடன் கொடுக்கக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்கள். நவம்பர் 1972-ல் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால் எப்ரல் மாதத்தில் ஒரு அறிவிப்பு வருகிறது. சைக்கிள் ரிக்சா வழங்குகிறோம் என்று அறிவிப்பு வருகிறது. இது என்ன முறை என்று தெரியவில்லை. சைக்கிள் ரிக்சாவுக்கு பாங்குகள் கடன் கொடுக்கக்கூடாது என்று ஒரு உத்தரவைப் போட வேண்டியது. பிறகு நாங்கள் கொடுக்கிறோம் என்று சொல்வது. இது ஒரு தந்திரம்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் பேச்சுக்கு ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். ரிக்சாக்களை கூடுதலாக்குவது என்பது ஒன்று. That is augmentation. கை ரிக்சாக்களைப் போக்கி, அதற்குப் பதிலாக சைக்கிள் ரிக்சாக்கள் வழங்குவது என்பது ஒன்று. That is replacement ரிக்சாக்களை அதிகமாக வழங்கினால் அதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும். ஆகவே, அவற்றின் எண்ணிக்கையை கூடுதலாக்கிவிடக்கூடாது என்பது அரசின் கொள்கை. அந்தவகையிலே எழுந்ததுதான் அந்த சுற்றறிக்கை. ஏற்கெனவே சென்னை நகரில் சராசரி வேகம் 10 மைல் என்ற அளவுக்கு முக்கியமான ரோடுகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுவிட்டது. ஆகவே, மேலும் ரிக்சாக்களுக்கு கடன் வழங்காதீர்கள் என்று வங்கிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பப் பட்டது. ஆனால் கை ரிக்சாக்களைப் பொறுத்தவரையில்,

[திரு. ச. இராமச்சந்திரன்] [1973 ஆகஸ்ட் 8

ஏற்கெனவே எவ்வளவு கை ரிக்சாக்கள் ஓடிக் கொண்டிருக் கின்றனவோ அந்த இடங்களில் அவைகளுக்குப் பதிலாக சைக்கிள் ரிக்சாக்களை வழங்குகிறோம் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த ஏற்பாடு போக்குவரத்துத் துறையில் வேகத்தைக் கூட்டுமே தவிர, குறைக்காது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் Augmentation, Replacement இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் குழப்பிக்கொள்ள வேண்டாமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, நான் குழப்பிக் கொள்ள வில்லை. அமைச்சரிடத்தில்தான் சரியான தகவல் இல்லை என்று நினைக்கிறேன். சைக்கிள் ரிக்சா வாங்கக் கடன் கொடுக்கக்கூடாது என்று ஏன் சுற்றறிக்கை அனுப்பிவிட்டு, இவர்களே சைக்கிள் ரிக்சா வழங்கினார்கள்?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கடனைத்தான் உங்கள் கட்சிக்காரர்களே வாங்கித் தந்திருக்கிறார்களே, அதில் என்ன தகராறு?

திரு. ஏ. சுப்பிரமணியம்: நீங்கள் கூடாது என்று சொன்னீர்கள் என்பதுதான் பிரச்சினை.

அடுத்ததாக, கைத்தறியாளர்களைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். நூல் விநியோகத்தில் மார்ச் 13-ம் தேதி— கைத்தறியாளர்களுக்கு நூல் வழங்க கண்டிரோல் ஆர்டர் ஒன்று மத்திய அரசினர் போட்டார்கள், அரசாங்கம் சொல்கிறவர் களுக்குத் தான் நூல் விற்கவேண்டும் என்பதாக விலையைக் கூட நிர்ணயம் செய்திருக்கிறார்கள். என்றாலும் நெசவாளர்களுக்கு நூல் கிடைப்பதில்லை. பலருக்கு நூல் கார்டு வழங்கப்பட வில்லை. நூல் வழங்குவதில் பல முறைகேடுகள் நடக்கின்றன. குறிப்பாக சேலம் மாவட்டத்தில் இந்தப் புகார்கள் மிக அதிகமாக இருக் கின்றன. அசிஸ்டென்ட் டைரக்டரிடம் பல முறைகள் சொல்லி, அமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி, மாவட்ட ஆட்சித் தலைவரிடத்தில் சொல்லி, எதுவும் நடைபெறவில்லை என்ப தனால் அந்த அட்வைசரி கமிட்டியில் இருந்து—திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களும் கூட சேர்ந்து ராசினாமாச் செய்திருக்கிறார்கள். அட்வைசரி கமிட்டி

1973 ஆகஸ்ட் 8] [திரு. ஏ. சுப்பிரமணியம்]

என்று இருப்பதில் பயன் இல்லை என்று தங்கள் ராஜினாமாவை அனுப்பியிருக்கிறார்கள். நான் அமைச்சர் அவர்களுக்கும் ஒரு கடிதம் எழுதினேன். எங்களுக்கு பதிலளிப்பதையே மிகவும் தாழ்வானதாகக் கருதக்கூடிய சட்ட அமைச்சர் நான் எழுதிய கடிதத்திற்கா பதில் அனுப்புவார்? இதுவரை பதில் ஏதும் வரவில்லை. நடவடிக்கை எதுவும் கிடையாது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தங்களுக்குப் பதில் சொல்ல நான் கூச்சப்படுவேனா? தாங்கள் கேட்கக் கேட்க பதில் சொல்லிக் கொண்டிருப்பேன். இதுபற்றி இந்த இடத்தில் எந்தப் புகாரும் எழுந்தாலும் அதை அனுப்பிவைக்கச் சொல்லி நானே உங்கள் எல்லோருக்கும் கடிதம் எழுதியிருக்கிறேன். இப்படி நானே உங்கள் கருத்துக்களை எல்லாம் மதித்துக் கேட்டிருக்கும்போது நான் மதிக்கவில்லை என்று சொல்வது தவருகும். உங்களிடம் இருந்து வந்த கடிதத்தை விசாரிக்கச் சொல்லி அனுப்பியிருக்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: உங்கள் சுற்றறிக்கையை நம்பித் தான் கடிதம் எழுதினேன். என் கடிதத்திற்குப் பதில் அது விசாரணையில் இருக்கிறது என்றாவது ஒரு கடிதம் எழுதப்படக் கூடாதா? அனுப்பி ஒரு மாதம் ஆகிறது. இன்னும் பதில் வரவில்லை.

அடுத்ததாக, தொழிலாளர் துறையைப்பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். எந்தத் துறையாக இருந்தாலும் இந்த ஆட்சி திராவிட முன்னேற்றக் கழகத்திற்தே என்று இருக்கிறது. எனக்கு நன்றாக நினைவு இருக்கிறது. 1967 இல் அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட போது சொன்னார்கள், 'இது கழகத்தின் ஆட்சியே தவிர கழகத்திற்கான ஆட்சி அல்ல' என்று இன்றைக்கு இது கழகத்திற்கான ஆட்சி போலத்தான் ஒவ்வொரு துறையிலும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. எனக்கு எந்த அமைச்சரிடத்திலும் தனிப்பட்ட விரோதம் கிடையாது. தொழிலாளர் துறையை எடுத்துக் கொண்டால் ஆளும் கட்சிக்காரர்கள் நடத்துகின்ற சங்கங்களுக்கு தனிச்சலுகை, அவர்கள் ஆலைக்குள் என்ன வன்முறையைச் செய்தாலும் யாரும் கேட்கமாட்டார்கள். தண்டனை கிடையாது.

மற்றவர்கள் என்றால் இரண்டாந்தரக் குடிமகன்தான். இப்படி எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் கட்சிக்கண்ணோட்டத்தோடு பார்க்கிற நிலைமைதான் இருந்து வருகிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தொழிலாளர்களது பிரச்சினை பற்றி நான் கட்சிப்பாகுபாடு கருதாமல்தான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். யாரையும் இரண்டாந்தர குடிமகனைப் பாப்பது இல்லை. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் பெரிய தொழிற்சங்கம் எதுவும் இல்லை என்று தான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மதிப்பிற்குரிய ராசாராம் அவர்கள் புதியதாக இந்த இலாக்காவின் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். இனிமேல்தான் அவர் இந்த உண்மைகளைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

அடுத்து, ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறு தொழில்களை ஏற்படுத்த விரைவில் லைசென்சு கொடுக்க கமிட்டி போட்டிருக்கிறார்கள் எந்த மாவட்டத்துக் கமிட்டியிலாவது மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர்களைப் போட்டிருக்கிறார்களா? போட்டிருந்தால் எத்தனைபேர்களைப் போட்டிருக்கிறார்கள்? எங்களுக்கு அந்தப் பதவிகளைக் கொடுங்கள் என்று நாங்கள் கேட்கவில்லை. பண்பாடு எப்படி இருக்கிறது என்பதற்கு இதைச் சொல்கிறேன்.

இப்போது கூட்டுறவுத்துறை கைமாறி இருக்கிறது. கூட்டுறவுத் துறை என்றால் தி.மு.க. துறைதான். தி;மு;க;வுக்காகத்தான் அது இருக்கிறது. எங்காவது ஒன்றிரண்டு இடங்களில் வேறு ஆட்களைப் போட்டிருக்கக் கூடும். இவர்களுக்கு ஒத்துவரவில்லை என்றால் அந்த சொசைடிகளையே கலைத்துவிடுகின்றனர்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: திராவிட முன்னேற்றக் கழகத்திற்காகவே இந்தத் துறை இருப்பதாகச் சொல்வது சரியல்ல. உங்கள் பக்கத்திலேயே உள்ள திரு. அழகர்சாமி அவர்கள் ஒரு பெரிய கூட்டுறவுத்துறை நிறுவனத்திற்கு தலைவராக்வே இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR: One swallow does not make a summer.

எங்கோ ஒரு ஆளுக்குக் கொடுத்ததால் கொடுத்தாக ஆகாது.

1973 ஆகஸ்ட் 8]

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் சொல்லும்போது ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு நான் தலைவராக இருப்பதாகச் சொன்னர். தேர்தலில் போட்டியிட்டு நான் அந்த இடத்திற்கு வந்தேன். இவர்கள் என்னை நியமனம் செய்யவில்லை. இவர்கள் நியமனம் செய்வதில் மாற்றுக் கட்சியைச் சேர்ந்த ஒருவராவது இருக்கிறாரா என்று தெரிவித்தால் நன்றாக இருக்கும்

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நியமனம் செய்யப்பட்டவர்களது பட்டியலை முன்பு ஒரு முறை படித்தேன். செங்கற்பட்டு மாவட்டத்தில் சிண்டிகேட்டைச் சேர்ந்த ரெட்டியார் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்.

திரு. சி. ஆறுமுகம் : எங்கள் மாவட்டத்தில் கூட சர்க்கரை ஆலை ஒன்றில் சிண்டிகேட்டைச் சேர்ந்தவர் இருக்கிறார்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்ற நேரத்தில் சிண்டிகேட்டைச் சேர்ந்தவர் நியமனம் செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னர். திரு. ஆறுமுகம் அவர்களும் சிண்டிகேட்டைச் சேர்ந்த ஒருவர் அவர் மாவட்டத்தில் இருப்பதாகச் சொன்னர். தயவு செய்து எங்கள் கட்சியைப் பற்றிச் சொல்லும்போது—பத்திரிகையில் எப்படி வேண்டுமானாலும் எழுதிக் கொள்ளுங்கள்—இந்தப் பேரவையில் சொல்லும்போது ஒழுங்காக எங்கள் கட்சியின் பெயரை—நல்ல சொற்களை உபயோகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : நேரமாகி விட்டது. அவர்கள் கட்சிக்காக ஒதுக்கப்பட்ட நேரமே 48 நிமிடம். திரு. சுப்பிரமணியம் அவர்கள் 28 நிமிடத்திற்கு மேல் பேசியிருக்கிறார். சீக்கிரம் முடிக்க வேண்டும்.

திரு. ஏ. சுப்பிரமணியம் : அடுத்ததாக, சுகாதார இலாக்காவுக்கு வருகிறேன். இவ்வாண்டு மருத்துவக் கல்லூரி தேர்தல் நடைபெற்றபோது நேர்முகத்தேர்வில் என்னென்ன கேள்விகள் கேட்கப்பட்டன தெரியுமா? சமீபத்தில் அமெரிக்கா சென்று திரும்பிய நடிகை யார்? முதலமைச்சருக்கு டாக்டர் பட்டம் எதற்கு வழங்கினர்கள்? எங்கே வழங்கினர்கள்? சூன் 3-ம் தேதிக்கு

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [1973 ஆகஸ்ட் 8

என்ன மூக்கியத்துவம்? அமெரிக்காவில் தங்கிவிட்ட தமிழ்நாட்டு நடிகையின் பெயர் என்ன? லாரிகளில் உள்ள எந்த சேசிஸ் உயர்வானது? இவை எல்லாம் மருத்துவக் கல்லூரிகளில் சேரவந்த மாணவர்களிடத்திலே நேர்முகத்தேர்வின்போது கேட்கப்பட்ட கேள்விகள். அமெரிக்காவில் போய் தங்கிவிட்ட தமிழ்நாட்டு நடிகை பெயர் என்ன என்பதுபோல எல்லாம் கேட்பது அவசியமா? ஆக, இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்டு, இந்தக் கேள்விகளில்தான் தேர்ச்சி பெறவேண்டும், அவற்றிற்கு மாணவர்கள் சரியான விடை தரவேண்டும் என்று எதிர்பார்க்கப் படுவார்களானால், இவர்கள் தேர்வு பெற்று மருத்துவ வகுப்பில் சேர்ந்தால் என்ன பாடம் படிப்பார்கள்? பாடம் படிக்கும்போது நடிகையின் முகம் அல்லவா முன்னால் நிற்கும்? தேர்ச்சி பெற்று மருத்துவம் செய்ய முற்பட்டால் நடிகையின் முகம் அல்லவா மனத்தில் தோன்றும்? அப்படியென்றால் அந்த நோயாளிகளின் கதி என்ன ஆகும் என்று அறியவிரும்புகிறேன். இம்மாதிரி காரியங்களின் விளைவாக . . .

1-00 பி.ப.

திரு. எம். ஆர். கண்ணன்: யார் கேட்டது? எங்கே கேட்டார்கள்?

திரு. கு. காமாட்சி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். . .

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: சாதாரணமாக, இப்படிப்பட்ட தேர்வு நடக்கின்றபொழுது 'ஜெனரல் நாலட்ஜ்' என்ற ஒரு பிரிவு இருக்கிறது. ஆக, அதிலே பொது அறிவு எந்த அளவுக்கு இருக்கிறது என்று அறிய சில கேள்விகள் கேட்கிறார்கள். 'ஜெனரல் நாலட்ஜ்' என்பதாலே பொதுக் கேள்விகள் வருகின்றன. பப்ளிக் சர்வீஸ் கமிஷன் தேர்வுகளில் எல்லாம் பொது அறிவு இருக்கிறதா, நுண்ணறிவு இருக்கிறதா என்று அறிய கேள்விகள் கேட்பார்கள். ஆனால், என்ன என்ன கேள்விகளைக் கேட்கலாம் என்று குழுவுக்கு அரசாங்க அளவிலே தயாரித்துக்கொடுப்ப தில்லை. குழுவிலே இருக்கிற வல்லுநர்கள்தான் இந்தக் கேள்வி களைக் கேட்கிறார்கள். யார் அத்தகைய கேள்விகளைக் கேட்டார்கள்? கேட்கப்பட வேண்டிய அளவிலே, தனியாகக் கேட்கவேண்டியது ஒன்று. ஆனால், அவர்களுக்கு வேண்டுமானால் இப்படிப்பட்ட கேள்விகளைக் கேட்கலாம் என்று கூறலாமே தவிர, ஆணையிட

முடியாது. அப்படி இருக்கிறது என்ருல், யார் கேட்டார்கள் என்பதை உறுதிப்படுத்திவிட வேண்டும். எந்த நிலையில் அந்தக் கேள்விகள் கேட்கப்பட்டன என்பது உறுதிப்படுத்தப்பட வேண்டும். பிறகு முடிவிற்கு வரவேண்டும். ஹாபீஸ், பொழுதுபோக்கு என்ன என்று கேட்கிறார்கள். கேம்ஸ் என்ருல் அது பற்றி சிலவற்றைக் கேட்கிறார்கள். சிலபேர் பொழுதுபோக்கு சினிமா பார்ப்பது என்று கூறுகிறார்கள். அதையொட்டி சினிமாவைப் பற்றிய விவரங்களை எல்லாம் அவர்கள் தருகிறார்கள். ஆகவே, அரசாங்கத்தின் சார்பாக, இந்தக் கேள்விகள் தயாரித்து தரப்படவில்லை என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: மாண்புமிகு கல்வி அமைச்சருக்கு என்னுடைய நன்றி. என்னுடைய குற்றச்சாட்டு உண்மையானது என்று மறைமுகமாக ஒப்புக்கொண்டதற்கு நன்றி

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, அப்படி ஒரு பத்திரிகையிலே செய்தி வந்தது. உடனே, மருத்துவக் கல்வித் துறை இயக்குநரிடம் பொருத்தமில்லாத கேள்வி கேட்கப்படுகின்றதா என்று கேட்டேன். அதற்கு அவர், பத்திரிகையில் வந்ததில், டிராக்டரைப பற்றிக் கேள்வி கேட்கப்பட்டிருப்பது தான் உண்மை. அதற்குக் காரணம்,—ரூரல் பாக்கிரவுண்டு என்ற தலைப்பு வைத்திருக்கிறார்கள்—கிராமப் புறத்திலே இருந்து வருகிற மாணவர்களுக்கு அவைபற்றி தெரிந்திருக்கிறதா என்பதற்காக, டிராக்டர் பெயர், அதனுடைய பகுதிகளைப் பற்றி கேட்டிருக்கிறார்கள். வேறுவிதமான, இதிலே எந்தக் கேள்விகளையும் மருத்துவக் கல்வியிலே உள்ள எந்தப் போராசிரியரும், யாரும் கேட்டதாக ஒப்புக்கொள்ளவில்லை என்றார். ஆகவே, அப்படி ஒரு புகார் வந்தாலும் ஒரு வேளை சரியாக விடையிறுக்காத மாணவர்கள், ஒரு பிரச்சினையாக அதை உருவாக்கியிருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன்.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, இது கருதுவதல்ல. தேர்வுக்குச் சென்ற சில மாணவர்களை நான் கேட்டிருக்கிறேன். பத்திரிகைச் செய்தியை வைத்துக்கொண்டு சில மாணவர்களை நான் கேட்டேன். இதுபோன்ற கேள்விகள். . .

[1973 ஆகஸ்ட் 8

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. நா. வீராசாமி) : அரசாங்கத்தின் தரப்பிலே பதில் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக, உறுப்பினர்களுக்கு சொல்கிற உரிமை உண்டு. அரசாங்கத்தின் தரப்பிலே பதில் சொல்லிவிட்டால் அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்பது மரபு. அதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்பொழுது அங்கத்தினர் சொல்கிறபொழுது, இது 'போன்ற' கேள்விகள் என்றார். இது 'போன்ற' கேள்விகள் என்றால் எவ்வளவு வேற்றுமை வரும். என்பதை அங்கத்தினரே பார்த்தால் தெரியும். அக்குழுவின் உறுப்பினர்கள் பொறுப்புள்ள கல்லூரிப் பேராசிரியர்கள்தான். அரசியல்வாதிகள் யாரும் அதில் இடம் பெறவில்லை. எம்.எல்.ஏக்கள் யாரும் அதில் இடம் பெறவில்லை. அவர்கள் அப்படி கேட்க நேர்க்கமும் அவசியமில்லை. அத்துடன் அவர்கள் ஒரு நாளைக்கு **80** மாணவர்களை நேர்முகத் தேர்வுக்கு அழைக்கிறார்கள். **ஆக,** 80 மாணவர்களை அழைக்கின்ற அவர்கள் இப்படிப்பட்ட **கேள்வி**களைக் கேட்க ஒரு அவசியமும் கிடையாது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : சரி, அடுத்ததற்குப் போகிறேன். இம்மாதிரி பல்வேறு செயல்களின் விளைவாக இந்த ஆட்சி, கழகத்திற்காக, கழகத்தவர்களுக்காக, அவர்களை ஆதரிப்பவர்களுக்காக மட்டும் இயங்கும் ஒரு ஆட்சி என்பதனாலே, மக்கள் முன்னாலே, தவறுகள் செய்கிறார்கள் என்பதனாலே, மக்களிடம் செல்வாக்கை இழந்திருக்கிறது.

(மாண்புமிகு போலைத் தலைவர் தலைமை)

இவற்றிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக மிக மோசமான, ஆபத்தான கோஷத்தை கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு பக்கம் மாநில சுயாட்சிக் கோஷம். இந்த சட்டமன்றத்திலேயே பார்த்தோம், மொழியின் பெயராலே, இனத்தின் பெயரால், பிரதேசத்தின் பெயராலே, மாநிலத்தின் பெயராலே, வெறுப்புகளை, வேற்றுமைகளை வளர்க்கின்ற—இந்த முறை நடக்கின்றது. இங்கே நண்பர் சின்னசாமி பேசினார். அவர் இங்கே பேசியது எனக்குப் புதுமை அல்ல. அவர் ஏற்கனவே பேசி இருக்கிறார். ஆனால் முதலமைச்சர் அவர்கள் கோடிகாட்டி இருக்கிறார்கள். அவர்கள் கூட்டங்களிலே பேசும்பொழுது சூசகமாக, அந்தப் பாணியிலேதான் பேசி வருகிறார்கள். 8—10—1972-க்குப் பிறகு

[1973 ஆகஸ்ட் 8 [திரு. ஏ. சுப்பிரமணியம்]

எம்.ஜி.ஆர். அவர்கள் கட்சியை விட்டுப் பிரிந்த பிறகு இந்தப் பாணியிலே பேசுகிறார்கள். அவர் எடுத்துக் காட்டி விட்டார். உறுப்பினர்கள் அதே அளவிலே பேசுகிறார்கள். நான் கேட்க விரும்புகிறேன், தலைவர் அவர்களே, இது எங்கே கொண்டுபோய் விடும்? அரசியல் சட்டத்திலே என்ன வேண்டுமானாலும் சொல்ல உரிமை இருக்கிறதா?

மகாராஷ்டிராவிலே, தமிழகத்தைச் சேர்ந்த சாலிவதீசுவரன் என்பவர் எம்.எல்.ஏ.வாக இருந்தார். பம்பாயிலே தென்னகத்தைச் சேர்ந்த ஒருவர் மேயராக இருந்திருக்கிறார். அதிகாரிகளாக பல மாநிலக்காரர்கள் இருக்கிறார்கள். இம் மாநிலத்தைச் சேர்ந்த அதிகாரிகள் பல மாநிலங்களில் இருக்கிறார்கள். இங்கு இந்த அரசும் வேறு மாநிலத்து அதிகாரிகளை வைத்திருக்கிறது. இப்படியிருக்கையில் மாநில வெறியைக் கிளறிவிடுவது சரியாக இருக்குமா? முன்புதான் தேர்தல் நேரத்தில் பிற்போக்கு சக்திகள் இப்படி நடந்து கொள்வார்கள். பிற்போக்கு கட்சிகளைச் சேர்ந்தவர்கள், சாதியைச் சொல்லி, ஊரைச் சொல்லி, மொழியைச் சொல்லி, தேர்தல் காலத்திலே வாக்குகளைப் பெற முயல்வார்கள். இன்றைக்கு இந்தக் கதிக்கு நீங்கள் வந்துவிட்டீர்களா? இதையெல்லாம் பயன்படுத்தித்தான் மக்களிடத்திலே ஓட்டு வாங்க வேண்டும், காலம் தள்ள வேண்டுமென்ற கதிக்கு வந்துவிட்டீர்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது. ஆகவே, நீங்கள் மேலும் ஆட்சியிலே இருப்பதற்கு அருகதை இல்லை என்று கூறி, அந்த ஒரு காரணத்தினாலே கூட இந்த அமைச்சரவை மாறியாகவேண்டுமென்று கூறி நான் முடித்துக்கொள்கிறேன்.

திரு. என். கே. பழனிசாமி: கனம் சபாநாயகர் அவர்களே, இன்றையதினம் விலைவாசியேற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், நாட்டில் இருக்கக்கூடிய நெருக்கடி, இவற்றிக்குத்தீர்வு காண்பதற்கு முடியாமல் ஜனங்களுடைய எண்ணங்களை மாற்றக் கூடிய முறையிலே, திசை திருப்பி விடக்கூடிய முறையிலே, இன்றையதினம் மாநில சுயாட்சி என்றும் மத்தியிலே கூட்டாட்சி என்றும் இவர்கள் தங்களுடைய அடிப்படைக் கொள்கையாக வரையறுத்திருக்கிறார்கள். இந்தக் கோஷம் சரியான கோஷமா? இன்று ஏகாதிபத்தியவாதிகள், நாட்டைப் பிரிக்கவேண்டும், துண்டாட வேண்டுமென்ற அடிப்படையிலே நாட்டில் ஒரு கொந்தளிப்பான நிலை

[திரு. என். கே. பழனிசாமி] [1973 ஆகஸ்ட் 8

மையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இன்றையதினம், சமதர்மம், பொதுத் துறை, இவைகளெல்லாம் ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பான கொள்கைகள். இங்கே இம்மாதிரி கட்சிகள் இருக்கக்கூடிய வரையிலும் இந்த நாட்டிலே இருக்கக்கூடிய பெரும் முதலாளிகளுக்கு ஒரு எதிர்ப்பு கிடைக்காது. ஆவேதான் இந்த முறையை தடுக்கவேண்டுமென்று இந்திரா காந்தியும் மற்றவர்களும் கூறுகிறார்கள்.

உதாரணத்திற்கு, அன்றையதினம் கிழக்கு வங்காளத்திலே நமது படைகள் அவர்களுக்கு ஆதரவாகபோகக் கூடிய சமயத்திலே நிக்சன் இந்திரா காந்தி அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதிலே நீங்கள் தலையிடக் கூடாது, தலையிட்டால்.

You have to pay a high price for that

என்ற முறையிலே சொன்னார்கள். இதன் அர்த்தம் என்ன? இதற்குப் பின்னாலே என்ன என்ன நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு சிறிய படத்திற்காகப் போராட்டம். யு.பி.யிலே, லஷ்மணபுரியிலே ஒரு சிறிய ஆர்ம்டு கான்ஸ்டபுலரிக்கும் அங்கே இருக்கக்கூடிய மாணவர்களுக்கும் ஒரு பெரிய போராட்டம். அதற்குப்பிறகு ஓரிசாவிலே நடந்த தேர்தல். ஆந்திராவிலே முல்கி ரூலி எதிர்த்து நடந்த போராட்டம். இதிலெல்லாம் சி.ஐ.ஏ. ஏஜெண்டுகள் சம்பந்தம் இருக்கிறது என்று பார்லிமெண்டிலே கூறப்பட்டதாகப் பத்திரிகைகளிலே பார்த்தோம். ஆகவே, அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் மாநிலங்களிலே இருக்கக்கூடிய பிற்போக்குவாதிகளைத் தூண்டிவிட்டு, அந்த அரசுக்கு எதிராக நடக்கவேண்டும். கவிழ்க்க வேண்டுமென்ற அடிப்படையிலே காரியங்களைச் செய்கிறார்கள். ஆகவேதான் ஆந்திராவிலே நடந்த போராட்டத்திலும் சரி, முல்கி போராட்டத்திலும் சரி, ஆந்திராவை 4 பங்காகப் பிரிக்கவேண்டும். என்ற கூச்சலும் அதற்கு ஆதரவாக இருந்தது நமக்குத் தெரியும். ஆகவே, அந்த அடிப்படையில்தான் இன்றையதினம் மாநில சுயாட்சி என்றும், மத்தியிலே கூட்டாட்சி என்ற முறையிலும் இக்கொள்கை கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்றையதினம் அரசியல் சட்டம் 256-ஐ எடுத்துவிட்டு, பார்லிமெண்டுக்கு அதிகாரம் கூடாது, கவர்னருக்கு இருக்கிற அதிகாரத்தை நீக்கிவிட்டு அந்த அதிகாரத்தை முதல்வருக்குக் கொடுத்துவிட

1973 ஆகஸ்ட் 8] [திரு. என். கே. பழனிசாமி]

வேண்டும் என்று கூறுகிறார்கள். இதன் அடிப்படையான நோக்கம் பிரிவினை வேண்டுமென்பதுதானே. ஆகவே, மாநில சுயாட்சி என்பது ஒரு 'வேக்'காக இருக்கிறது. எவேலிவ் ஆக இருக்கிறது. ஒரு திட்டவட்டமான விளக்கமாக இல்லாததால் அவர்கள் எந்தச் சமயத்திலும் எதை வேண்டுமென்றாலும் சொல்லலாம் என்ற நிலைமை இருக்கிறது. நாம் மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டுமென்று கேட்கிறோம். ஆனால் அதே சமயத்திலே இந்தியாவிலே பல பிரச்னைகள் இருக்கின்றன. ஒன்றுபட்ட இந்தியா, ஒன்றுபட்ட விவசாயிகள், ஒன்றுபட்ட தொழிலாளர்கள் என்ற முறையில் இருந்தால்தான் நல்லது. மக்களின் தேவைகளை நல்லமுறையிலே பூர்த்தி செய்யமுடியும்.

இதற்காக ராஜமன்னார் கமிட்டி ஒன்று போட்டார்கள். அவர்கள் மற்ற மாநிலங்களுக்குப் போய் பரிசீலனை செய்யவில்லை. மற்ற மாநிலங்களிலே உள்ள கட்சிகளிடம் இதைப்பற்றிய கருத்துக்களைக் கேட்கவில்லை. அவர்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களிடம் கேட்டுவிட்டு ஒரு ரிப்போர்ட் தயாரித்து இருக்கிறார்கள். அதைப் பரிசீலிக்க தி.மு.க. விலேயே ஒரு சப் கமிட்டி என்று போடப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒரு அறிக்கையைத் தயாரித்து இருக்கிறார்கள். அதிலே என்ன சொல்கிறார்கள்? லீலைசென்சிங், டீலைசென்சிங் என்று சொல்கிறார்கள், என்ன அர்த்தம்? யாருக்கு லீலைசென்ஸ் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் மாநில சுயாட்சியா?

தூத்துக்குடியிலே 40 கோடி ரூபாயிலே உரத் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதிலே தனிப்பட்டவர் 2 கோடி ரூபாய் போட்டிருக்கிறார், அவர் ஒரு செட்டியார், நான் அவர் பெயரைச் சொல்ல விரும்பவில்லை. அவர் போட்ட முதல் 20 லட்சம் ரூபாய்தான், ஷேர் ஆக 1 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய்க்கு போடப் பட்டிருக்கிறது. பாக்கியிருக்கக்கூடிய பணம் சர்க்கார் போட்டது, எல்.ஐ.சி. போட்டது. இப்படி ஒரு தனிப்பட்டவர் 20 லட்சம் போட்டுவிட்டு அவரும் அவருடைய சொந்தக்காரர்களும் பயனை அனுபவிக்கக்கூடிய நிலைமை இப்பொழுது இருந்துகொண்டிருக்கிறது.

[திரு. என். கே. பழனிசாமி] [1973 ஆகஸ்ட் 8

அதுமட்டுமல்ல, இராமநாதபுரத்திலே டயர் பாக்டரி இருக்கிறது. அங்கே என்ன நிறைய ரப்பர் விளைகிறதா? அதிலே சர்க்காருக்கு என்ன பங்கு இருக்கிறது? என்ன உற்பத்தி ஆகிறது? தென்னிந்தியாவிலே உள்ள பெரிய பெரிய முதலாளிகள், ஏகபோக முதலாளிகள் அனுபவிக்கக் கூடிய முறையிலே சீக்கிரம் லேசென்ஸ் கிடைக்கவில்லையே, மாநிலம் பிரிந்துவிட்டால் உடனடியாக அவர்களுக்கு லேசென்ஸ் வழங்கிவிடலாம் என்ற நிலைமையிலேதான் அதையெல்லாம் கேட்கிறார்கள்.

தனிப்பட்டவர்களுடைய தொழில்களை நேஷனலைஸ் செய்து மாநில சர்க்காரும் மத்திய சர்க்காரும் ஜனங்களிடத்திலிருந்து ஷேர் வாங்கி தேவை அதிகமாகின்ற அளவிற்கு உற்பத்தியைப் பெருக்கச்செய்தால் மக்களுடைய தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியும். இன்றைக்கு நாட்டிலே ஒரு கொந்தளிப்பான நிலைமை இருக்கிறது. எந்த முற்போக்கான நடவடிக்கைகளை மத்திய சர்க்கார் தடைசெய்தது? சுப்ரீம் கோர்ட் எந்தத் தொழிலைத் தடைசெய்தது என்று எனக்குப் புரியவில்லை, பிறகு என் அந்த அதிகாரத்தைக் கேட்கிறார்கள் என்று தெரியவில்லை.

இந்திரா காந்தி செய்யக்கூடிய அரைகுறையான நடவடிக்கைகளும் அதன் காரணமாக மக்கள் மத்தியிலே இருக்கின்ற ஒரு அதிருப்தியைப் பயன்படுத்திக்கொண்டுவிடலாம் என்பதாலும் பார்லிமெண்டரி ஜனநாயகத்தில் நம்பிக்கையில்லாமல் இருக்கக் கூடிய மக்களை ஒன்று திரட்டிவிடலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்ற பிற்போக்குவாதிகள், கிராண்ட் அலையன்ஸ் அவர்களோடு நீங்கள் ஒரு அணியை அமைத்து இருக்கிறீர்கள். ஒரு பக்கம் சோஷலிஸம் பேசிக்கொண்டு இன்னொரு பக்கம் அப்படிப்பட்ட அணியிலே சேரக்கூடிய நிலைமை உங்களுக்கு ஏன் ஏற்பட்டிருக்கிறது? முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், இந்திரா காந்தி நல்லது செய்தால் ஆதரிப்போம் என்று. என்ன, என்ன திட்டவட்டமான கொள்கைகள் என்று நீங்கள் சொல்ல வில்லை. கொள்கையில்லாததால்தான் நீங்கள் அப்படிச் சொல்கிறீர்கள். ஆகவே, அவர்கள் இந்தப் பிரிவினை கோஷத்தை வைத்துக்கொண்டிருக்கக்கூடாது.

கல்வி ஸ்தாபனங்களிலே, கல்லூரிகளிலே சலுகைகள் பெறுவதற்காகவும் வேலை பெறுவதிலே சலுகைகள் பெறுவதற்காகவும் சிலர் பேக்வர்ட் லிஸ்டிலே சேர்க்கப்படுகிறார்கள். இதனால்

1973 ஆகஸ்ட் 8] [திரு. என். கே. பழனிசாமி]

உண்மையாக எகனமிக்கலி பேக்வர்ட் ஆக இருப்பவர்களுக்கு கிடைக்கவேண்டிய அளவுக்கு அவர்களுக்குக் கிடைப்பதில்லை. சில ஜாதிக்காரர்கள்தான உண்மையிலேயே பேக்வர்ட், ஆனல் சில ஜாதிக்காரர்கள் அப்படியில்லை, இருந்தாலும் சலுகைகளைப் பெறுவதற்காக அதில் சேர விரும்பும்போழுது அதிலே சேர்த்துக்கொண்டே போவதால் உண்மையான பேக்வர்ட் கிளாஸைச் சேர்ந்தவர்களுக்குக் கிடைக்கவில்லை. கிருஸ்தவர்களிலே ஷெட்யூல்ட் வகுப்பிலே சேர்ந்தால் சலுகை கொடுக்கப்படுகிறது. ஆனல் பின்னுலே அவர்களுடைய சந்ததியாருக்கு அந்த ஷெட்யூல்ட் வகுப்பிலே சேர்ந்தாலும்கூட சலுகைகள் கிடைப்பதில்லை. ஆகவே எகனமிக்கலி பேக்வர்ட் என்று வைத்துத்தான் தீர்மானம் செய்யவேண்டுமேயொழிய ஜாதியை வைத்துச் செய்வது மற்றவர்களைப் புறக்கணிப்பது போல் ஆகும். மற்ற ஜாதிக்காரர்கள் டிஸ்ட்டிங்ஷன் வாங்கினலும் அவர்கள் தொடர்ந்து படிக்க முடியாது. தனக்கு வேண்டியவர்களை மட்டும் படிக்கவிட்டுவிட்டு மற்றவர்களைப் படிக்கவேண்டாம் என்று சொல்வது போலாகிவிடும். இந்தத் துறைக்கு 100 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். ஆனல் ரிசல்ட்டைப் பார்த்தால் 51 சத வீதம் பெய்லியர். பின்தங்கியவர்கள் அதிகமாகிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களால் பிக்-அப் பண்ணுவது கஷ்டமாக இருக்கிறது. அவர்களுக்காக எக்ஸ்ட்ரா ஹவர்ஸ் ஒதுக்கி சொல்லிக் கொடுப்பது என்ற முறையினை சர்க்கார் கையாள்வது இப்படி அதிகம் பேர்கள் பெயிலாவதைத் தடுக்கும். பணவிரயமும் இருக்காது.

கமிட்டி ஆன் எஜூகேஷன் என்ற ஒரு கமிட்டி இருக்கிறது. அந்த கமிட்டி என்ன செய்கிறது? கூடியிருக்கிறதா? என்ன நடவடிக்கைகள் எடுத்திருக்கிறார்கள், ரிப்போர்ட் ஏதாவது உண்டா? ஒன்றுமே புரியவில்லை ஹைதராபாத்திலிருந்து ஒரு கல்வி நிபுணர்கள் குழு இங்கே வந்தது. இந்த மாநிலத்தினுடைய கல்வி முறை மிகவும் மோசமாக இருக்கிறது. இதை விட மோசம் இல்லை என்ற முறையிலே சொன்னார்கள். அப்படிப் பட்ட குறைபாடுகளைப் போக்குவதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள்? பல இடங்களிலே இன்னும் மரத்தடியிலே வகுப்புகள் நடக்கக்கூடிய நிலைமைகள் இருக்கின்றன.

அமைச்சரவையின் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மானமும், அமைச்சரவையின் தனி ஒரு கொள்கையைக் கண்டிக்கும் தீர்மானமும்

[திரு. என். கே. பழனிசாமி] 1973 ஆகஸ்ட் 8]

காலேஜ் எஜுகேஷன், எலிமெண்டரி எஜுகேஷன், ஹையர் எஜுகேஷன் எல்லாவற்றிற்கும் சேர்த்து டைரக்டர் ஒருவர்தான். ஆசிரியர் ஏதாவது ஒன்று கேட்டால்கூட அதற்கு 6 மாதம் ஆகிறது. ஆகவே, ஹையர் எஜுகேஷனுக்கு ஒரு டைரக்டரும் எலிமெண்டரி எஜுகேஷனுக்கு ஒரு டைரக்டரும் என்ற நிலைமையிலே போட்டால் அவர்களுக்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேக்வர்ட் என்று சொன்னால் ஸ்காலர்ஷிப் கொடுக்கப் படுகிறது. அதிகமாக மார்க் வாங்கினால் கொடுக்கலாம் என்ற முறையிலே ஒரு மெரிட் ஸ்காலர்ஷிப் முறை வைக்கலாம். மற்றவர்களுக்கு கடன் கொடுக்கலாம், அதை அவர்கள் வேலைபார்க்கும் பொழுது திருப்பிக்கட்டக்கூடிய முறையிலே ஏற்பாடுகள் செய்யலாம். கடன் மொத்தமாக ரூ. 1,500, 2,000 என்ற முறையிலே மாணவர்களிடம் நேரடியாகக் கொடுக்காமல் பிரின்ஸ்பால் மூலமாகக் கொடுக்கலாம். அப்படிச் செய்தால் அதன் மூலம் 6, 7 கோடி ரூபாய் மீதம் செய்யமுடியும். அப்படியில்லாமல் கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைப்பது போல் ஜனங்களுடைய வரிப்பணத்தை எடுத்துகொடுத்து வீணாகப் போவதைத் தடுக்கவேண்டும்.

டன்லப் ரப்பர் கம்பெனியிலே போராட்டம். 6 பேர்கள் உண்ணாவிரதம் ஆரம்பித்தார்கள். ஒரு நாட்டிலே உண்ணாவிரதம் இருப்பதும் கூட்டு நடவடிக்கை எடுப்பதும் தொழிற்சங்க உரிமை அங்கே 6 பேர்கள். ஒரு கோரிக்கையை முன் வைத்து அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டு உண்ணாவிரதம் இருந்தார்கள். அவர்களை அரஸ்ட் செய்திருக்கிறார்கள். 144 போட்டிருக்கிறார்கள். அவர்களை ஏன் அரஸ்ட் செய்தார்கள் என்று புரியவில்லை.

அதேமாதிரித்தான் விம்கோவிலும். சர்க்கார் அதைப்பற்றி கவனிக்காமல் இருப்பதால் தொழிலாளர்கள் அல்லலுறுகிறார்கள்.

சிம்சன் எடுத்துக்கொண்டால் கூட 300 தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். ஒரு வருஷமாக அப்படியிருக்கிறது. அரசாங்கம் என் நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரியவில்லை.

1972 ஆகஸ்ட் 8] [திரு. என். கே. பழனிசாமி]

இண்டியன் கார்பன், எவரெடி பேட்டரி தொழிற்சாலையும் அப்படித்தான், நான்கு மாதங்களாக மூடிக்கிடக்கிறது, அரசாங்கம் ஒன்றும் நடவடிக்கை எடுக்கவில்லை.

1957 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர் கூட்டணி இருக்கிறது. பல போராட்டங்களை ஆசிரியர்களின் நலனுக்காக நடத்தி ஆசிரியர்களை ஒற்றுமைப்படுத்தி நல்லமுறையிலே நடந்துகொண்டு வருகிற காலத்திலே அதற்குப் போட்டியாக ஒரு சங்கம். இப்படி முதலாளிகள் செய்ய வேண்டிய காரியங்களை சர்க்கார் ஏன் செய்ய வேண்டுமென்று கேட்க விரும்புகிறேன்.

இன்றைக்கு மதுவிலக்கை ரத்து செய்து இருக்கிறீர்கள். அதனால் மது இறக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு, அந்த 3 இலட்சம் குடும்பங்களுக்கு மாற்று வேலை தரக்கூடிய நிலை கிட்ட வட்டமாக இருக்கிறதா? எனவே, இம்மாதிரி முறையில் தொழிலாளர் கொள்கையை அரசு மாற்றியாக வேண்டும், இப் பொழுதிருக்கும் கொள்கை தொழிலாளர்களுக்கு ஆதரவாக இல்லை என்று சொல்லிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஒரு விளக்கத்தை இந்த அவையினருக்கு நான் அளிக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கோபால் அவர்கள் பேசும்பொழுது பரிசுச் சீட்டு விளம்பரங்களுக்கு அளிக்கப்படும் தொகையைப்பற்றிக் குறிப்பிடும்பொழுது முரசொலி பத்திரிகைக்கு 1968-69 ஆம் ஆண்டில் 847 ரூபாய்க்கு விளம்பரம் கொடுக்கப்பட்டதாகவும், அதற்குப் பிறகு அதிகமான தொகை தரப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். அதிலிருந்து வேறு எந்தப் பத்திரிகைக்கும் தரப்படாத சலுகை அந்தப் பத்திரிகைக்குத் தரப்பட்டது போன்ற எண்ணத்தை அவர்கள் கூறிய கருத்து எழுப்பியிருக்கிறது. பொதுவாக அந்த ஆண்டு தரப்பட்ட விகிதத்தையும், ஆண்டுக்காண்டு அந்த விகிதம் வளர வளர அந்த அளவிற்கு மற்றப் பத்திரிகைகளுக்குத் தரப்பட்ட விகிதமும் அதிகமாகியிருக்கிறது என்பதற்கான ஒரு விவரத்தை இங்கே அளிக்க விரும்புகிறேன்.

முரசொலிக்கு 1968-69-ம் ஆண்டில் 847 ரூபாய்க்குக் கொடுக்கப் பட்டது. 1970-71-ல் 13,989 ரூபாய்க்கு விளம்பரம் தரப்பட்டிருக் கிறது. மெயில் பத்திரிகைக்கு 1968-69-ல் 2,178 ரூபாய் தரப்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 ஆகஸ்ட் 8

பட்டது, 1970-71-ல் 25,455 ரூபாய்க்கு விளம்பரங்கள் தரப்பட்டிருக்கிறது. எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு ஆரம்ப ஆண்டில் 3,317 ரூபாய்க்குத் தரப்பட்டது. அப்பொழுதே முரசொலிக்கு 847 ரூபாய்க்குக் கொடுக்கப்பட்ட பொழுதே எக்ஸ்பிரசுக்கு 3,317 ரூபாய்க்கு அளிக்கப்பட்டது. 1970-71-ல் எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு 92,842 ரூபாய்க்கு கொடுக்கப்பட்டது. தினமணிக்கு 1968-69-ல் 2,186 ரூபாய் 80 காசுக்கு கொடுக்கப்பட்டது, 1970-71-ல் 42,824 ரூபாய்க்குக் கொடுக்கப்பட்டது. அதேமாதிரி இந்து பத்திரிகைக்கு 1970-71-ல் 71,927 ரூபாய்க்குத் தரப்பட்டிருக்கிறது. ஆகவே, 1972-73-க்கு முழு அளவில் வராவிட்டாலும் இன்றைய தேதி வரையில், 31—8—1972 வரையில், முரசொலிக்கு 18,716 ரூபாய்க்கும், அதே அளவில் மெயில் பத்திரிகைக்கு 19,050 ரூபாய்க்கும், எக்ஸ்பிரஸ் பத்திரிகைக்கு 49,533 ரூபாய்க்கும், தினத்தந்திக்கு 36,130 ரூபாய்க்கும், மாலைமுரசு பத்திரிகைக்கு 21,276 ரூபாய்க்கும் தரப்பட்டிருக்கிறது. மற்ற பத்திரிகைகளின் கணக்குக்கு அக்கவுண்ட் தரப்படவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கூறிய கருத்திலே தவறான எண்ணம் ஏற்பட்டு விடக்கூடாது என்பதற்காகவே இந்த விளக்கத்தை அளிக்க விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவரவர்களே, 16 சீரீஸ் விற்கும்பொழுது குறைவான தொகைக்கு விளம்பரம் கொடுத்தீர்கள், இப்பொழுது குறைவான சீரீஸ்கள் விற்கும்பொழுது இவ்வளவு பணம் ஏன் பாழாக்கப்படுகிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பாழாக்கும் நிலை இல்லை. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் திரு. சி. எஸ். அவர்கள், விளம்பரம் கொடுப்பது எண்ணிக்கையை மட்டும் பொறுத்தது அல்ல, அதன் கொள்கைதான் முக்கியம் என்று வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: லாட்டரி சீட்டு 16 சீரிஸ் விற்ற பொழுது 847 ரூபாய்க்கு விளம்பரம் தரப்பட்டிருக்கிறது. இப்பொழுது அது குறைந்து இரண்டு சீரிஸ்கள் விற்கும்பொழுது ஏன் அதிகத் தொகை செலவழிக்கப்படுகிறது?

1973 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, ஆரம்பித்த முதல் ஆண்டில், அப்பொழுது 16 சீட்டுகள் வரவில்லை. பிறகுதான் அதிகமாகியது. பிறகு அது 2 அல்லது 3 என்று குறைகிறது. 1970-71-ல் அதிகமாக இருந்தது, இப்பொழுது குறைந்திருப்பதால் தொகையும் குறைந்திருக்கிறது.

* **திரு. எம். ஆண்டி அம்பலம்:** தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டில் மேலூர் வடக்கு தொகுதியில் இந்த சட்டமன்றத்திற்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தும்கூட, இதுவரையிலும் நான் இங்கு வந்து பணியாற்ற அனுமதிக்கப்படவில்லை. எனவே, நான் சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்று சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கிறேன். இதற்குக் காரணமாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் இங்கே ஆள தருதியில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

என் தொகுதியில் சேக்கிப்பட்டி என்ற கிராமத்தில் குறிப்பாக அரிசன மக்கள் நிறைய இருக்கிறார்கள். அந்தத் தொகுதியில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னோடு போட்டியிட்ட திரு. மலைச்சாமி அவர்கள் ஆட்களை ஏவி விட்டு அந்த அரிசன மக்களை (குறுக்கீடுகள்) . . .

திரு. கே. டி. கே. தங்கமணி: இது அவருடைய மெய்டன் ஸ்பீச்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் முதன் முதலாக இங்கே சொற்பொழிவாற்றுகின்ற காரணத்தால் யாரும் குறுக்கிட வேண்டாமென்று நான் அவையினரைக் கேட்டுக்கொள்கிறேன். அந்த மரபுதான் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. கன்னிப் பேச்சிலே யாரும் குறுக்கிடுவதில்லை. எனவே, யாரும் அவருடைய பேச்சிலே குறுக்கிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். ஆண்டி அம்பலம்: குறிப்பாக, என்னுடைய தொகுதியிலே சேக்கிப்பட்டி என்ற கிராமத்திலே அரிசன மக்கள் இருக்கிறார்கள். அவர்களை அடித்து, கை கால்களை நொறுக்கி ஊரைவிட்டே துரத்திவிட்டார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் 20 நாள், 30

[திரு. எம். ஆண்டி அம்பலம்] [1973 ஆகஸ்ட் 8

நாள் வரை அந்த ஊருக்கு வரவில்லை. ஏனென்றால் அவர்களை கை கால்களை அடித்து நொறுக்கியதும் அவர்கள் பயந்து ஓடி விட்டார்கள் ஊரைவிட்டு. அதை என்னிடத்திலே வந்து அழுது கொண்டு சொன்னார்கள். நாங்கள் நேரடியாகவே, கை கால் ஒடிந்தவர்களை ஆஸ்பத்திரியில் சேர்த்தோம். அவர்களை இரண்டு நாட்களுக்குள்ளாக டிஸ்சார்ஜ் செய்து அனுப்பிவிட்டார்கள். அவர்கள் டிஸ்சார்ஜ் ஆன உடனே கொட்டாம்பட்டியிலே உள்ள போலீஸ் ஸ்டேசனில் போய் அரிசனங்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டுமென்று போலீசாரிடத்திலே சொன்னேன். போலீசாரும் போயிருக்கிறார்கள். அவர்களும், அரிசன மக்களுடைய வெள்ளாடுகளை, கடாக்களைப் பிடித்து அறுத்து அவர்களும் சேர்ந்து சமைத்து சாப்பிட்டுவிட்டு அக்கிரமங்களைச் செய்தார்கள். நான் நேரடியாகவே பார்த்தேன். சோத்துப்பானை, அவர்களுடைய வீட்டு ஓடு இவைகளையெல்லாம் அடித்து நொறுக்கி இருக்கிறார்கள்.

நத்தம் காமராஜ் நகரிலே எலெக்ட்ரிக் போஸ்ட் இருக்கிறது. அவைகளில் லைட்டுகளை மாட்டியிருந்தார்கள். அதையும் பிடுங்கிக் கொண்டு வந்துவிட்டார்கள். எனவே, அங்கே விளக்குகள் எரியவில்லை. நான் பஞ்சாயத்துத் தலைவராக இருக்கிறேன். எனது அந்தப் பஞ்சாயத்திலே சின்ன பள்ளப்பட்டி என்ற அரிசன மக்கள் குடியிருக்கும் இடத்திலே குழி போட்டு பறித்து இருக்கிறார்கள். 1½ வருஷம் ஆகியும் லைட் எரியவில்லை. போஸ்டும் போட்டு இருக்கிறார்கள். இவையெல்லாம் தேர்தல் கண்ணோட்டத்திலே நடந்து கொண்டிருக்கின்றன.

கடும்பட்டாம்பட்டியிலே வீடுகளுக்குத் தீ வைத்திருக்கிறார்கள். கிழக்கு பக்கமாக அந்த அடுப்பு இருக்கிறது. எனவே கூரை மேலேபோக, அதனால் அசம்பாவிதம் நடக்க அங்கே வழியில்லை. வேண்டுமென்றேதான் செய்யப் பட்டதாக ஜனங்கள் சொல்கிறார்கள். என்னுடைய தொகுதியிலே 100 வீடுகளுக்கு மேல் சேதாரமாகிவிட்டன. சிறு வீடுகளாக இருந்தாலும் மானியமாகக் கொடுக்கப்படும் 80 ரூபாய் கொடுக்கப்படவில்லை. இதை அவர்களே சொன்னார்கள்.

[திரு. ஏம். ஆண்டி அம்பலம்] [1973 ஆகஸ்ட் 8

கேசம்பட்டி கிராமத்திலே தேர்தல் காரணமாக, விவசாயிகள் எலெக்ட்ரிக் ஒயர்களைப் பிடுங்கினர்கள். பீஸ் கம்பிகளைத் திருடிவிட்டார்கள் என்று பொய்வழக்கு போடுகிறார்கள்.

நத்தம் பஞ்சாயத்து யூனியனில் 10 சதவிகிதம்தான் விளக்குகள் எரிகின்றன, ஆனால் 100 சதவிகிதம் எரிந்ததாக இந்த அரசு வரவு செய்கிறது.

இத்துடன் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் மீண்டும் பேரவை கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-28 மணியளவில் ஒத்திவைக்கப் பட்டது.

5. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

ஏதும் இல்லை.